ஒரே நேரத்தில் ஆறு நாடுகளில் வெளியாகும் ஒரே ஒரு தமிழ்ப் பத்திரிகை

பீற்றர் ஜோசப் அன்ட் அசோசியேட்ஸ்
- TRAFFIC TICKETS
- ACCIDENT CLAIMS
- IMMIGRATION
2425 Eglinton Ave. East, Suite 212
(Kennedy & Eglinton)
416 757-7707 • 416 537-7737
Fax: 416 757-7709

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: எஸ்.எஸ்.குகநாதன் கனடா பதிப்பு: பரமேஸ்வரன்

UNIVERSITY ... LIBRARY ... PERIODICALS DIVISION 07 JUN 2002

பல் வைத்தியர்கள்
DR. ILLANGO & ASSOCIATES
Dr. இளங்கோ
Dr. இரவீந்திரன்
Dr. ஜானகி
Dr. கோபால்
SCARBOROUGH (416) 292-7004
MISSISSAUGA (905) 270-7844

29 ஏப்ரல் 2002 விலை 1.25 டொலர், EEZHANADU மலர் 09. இதழ் 21

| மக்கள் எழுச்சி கண்டு கலக்கமடையும் படையினர் | உங்களுக்குப் புத்தாண்டுப் பலன் எப்படி? | பிரிட்டனில் புலிகள் மீதான தடை நீங்கும்? தமிழீழக் கடற்பரப்பில் புலிகள் கைது இந்தியா நிலைப்பாட்டில் மாற்றமில்லை |
|---|---|---|

# அன்டன் பாலசிங்கம் தம்பதியர் பயணித்த விமானத்தைத் தாக்க முற்பட்ட ஸ்ரீலங்கா படை

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்டன் பாலசிங்கமும் அவரது பாரியார் அடேல் பாலசிங்கமும் இலங்கைத் தீவில் இருந்து இங்கிலாந்து திரும்புவதற்கான பயணத்தின் முதல் கட்டமாகச் சென்று கொண்டிருந்த சிறிய கடல் விமானத்தைச் சுட்டு வீழ்த்தி பாலசிங்கம் தம்பதியரை "விபத்து" என்ற போர்வையில் கொனறொழிக்கும் சதிமுயற்சியில் ஸ்ரீலங்காப் படையின் ஒரு சாரார் ஈடுபட்டிருந்தனர் என்ற அதிர்ச்சித் தகவல் தற்போது வெளியாகியுள்ளது. தற்போதைய யுத்தநிறுத்தம் மற்றும் தொடரும் சமாதான முன்முயற்சி போன்றவற்றைப் பாரதூரமாகப் பாதித்து தற்போதைய நிலைமையை தலைகீழாக மாற்றியமைத்திருக்கக் கூடிய இச்சம்பவத்தின் பின்னணி தொடர்பான விபரங்கள் கீழ்வருமாறு. மருத்துவக் காரணங்களுக்காக பிரித்தானிய தலைநகர் லண்டன் மாநகரத்தில் தங்கியுள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்டன் பாலசிங்கம் அவர்களின் பெருமுயற்சி காரணமாகவே நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் நடைபெறுகின்ற தற்போதைய சமாதான முயற்சிகள் பாரிய முன்னேற்றம் கண்டுள்ளன என்பது சர்வதேச மட்டத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட (10ம்பக்கம்)

# தீவுப்பகுதிக்கு விடுதலைப்புலிகள் வருவதைத் தடுக்க ஸ்ரீலங்காகடற்படை – ஈ.பி.டி.பி. கூட்டுச்சதி

தமிழ்முத் தாயின் கூந்தலை அழகுபடுத்தும் ஆபரணங்கள் போன்று விளங்குவதும் சர்வதேச மட்டத்திலான தமிழ்மக்களின் பொருளாதார முன் முயற்சிகளின் தொட்டில் என்று கருதப்படுவதுமான வடக்கின் தீவுப்பகுதிக்குள் தமிழீழ விடுதலைப்புலிகள் பிரவேசித்துச் செயற்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் துரோகக்குழுவான ஈ.பி.டி.பி.யும் கடற்படையும் சேர்ந்து கூட்டுச்சதியில் ஈடுபட்டு வருகிறன என்பது தற்போது அம்பலமாகியுள்ளது. பெப் 22ம்திகதி கைச்சாத்திடப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின்படி வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரச படையினர் கட்டுப்பாட்டுப் பகுதிகள், விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதிகள் என்று வரையறை செய்யப்படும். ஒப்பந்த விதிகளின் கீழ் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் ஆயுதமற்ற விடுதலைகள் அரசியல் பணி செய்வதற்காகக் கட்டம் கட்டமாக செல்லலாம். முதல் 30 நாட்களுக்குள் 50 பேர், 60 நாட்களுக்குள் 100 பேர், 90 நாட்கள் முடிந்தபின் எண்ணிக்கை கட்டுப்பாடு அற்ற நிலையில் செல்லலாம் என்பது யுத்த (12ம் பக்கம் பார்க்க)

# "ரீடோர்" பணிமனை வெள்ளவத்தையில் திறக்கப்படலாம்

தமிழீழப் பொருமிய மேம்பாட்டுக் கழகம் என்று தமிழிலும் ரீடோர் என்று ஆங்கிலத்திலும் அழைக்கப்படும் தமிழ்ப்பகுதிகளுக்கான பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவித்து வளர்க்கும் அமைப்பின் விசேட பணிமனை ஒன்று இலங்கைத் தலைநகரான கொழும்பில் தமிழ்மக்கள் செறிந்து வாழும் குட்டி யாழ்ப்பாணம் எனப்படும் வெள்ளவத்தையில் மிகவிரைவில் திறந்து வைக்கப்படும் என்று அறியப்படுகின்றது. வெளிநாட்டில் வசிக்கின்ற ஈழத்தமிழர் ஒருவர் வெள்ளவத்தையில் உள்ள தனது இல்லத்தை இதற்காக இலவசமாகத் தந்துதவ முன் வந்துள்ளார் என்றும் இதையடுத்துப் பணிமனை திறப்புவிழா மிக விரைவில் நடைபெறலாம் (12ம் பக்கம்)

## சந்திரிகா ஆதரவுடன் கொழும்பில் 4 கட்சித் தமிழ்த் துரோகக் கூட்டமைப்பு உதயம்

தமிழீழ மக்களின் நீண்ட நாளைய்த் தேசிய நலன்களை முன் வைத்துத் தமிழ்க்கட்சிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்த நான்கு கட்சிகள் கொண்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பு உருவாகி வெற்றிகரமாகச் செயற்படுவது நன்கறியப்பட்ட விடயமாகும். தமிழர்கூட்டணி, தமிழ்காங்கிரஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஷ்அணி) ஆகிய நான்கு கட்சிகளும் சென்ற பொதுத்தேர்தலில் தமிழர் தேசிய ஒற்றுமை முன்னணி என்ற பெயரில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பை ஏற்படுத்தினர். இந்தக் கூட்டமைப்பு தேர்தலில் போட்டியிட்டு வடகிழக்கில் ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர் அணி) போன்ற துரோகக் கட்சிகளைத் தோற்கடித்து 15 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. தமிழீழ விடுதலைப்புலிகளே ஈழத்தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று ஏற்றுக் கொண்டுள்ள இக்கூட்டமைப்பு சகல அரசியல் விடயங்களிலும் விடுதலைப்புலிகளின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டு புலிகளின் வழிநடத்துதலின் கீழேயே செயற்பட்டு வருகின்றது. ஏறக்குறை (2ம் பக்கம் பார்க்க)

வாகன விபத்தா?
இலவச ஆலோசனை
வாகன விபத்துக்கள் பற்றிய முழுமையான இலவச ஆலோசனைகளைத் தமிழில் அளித்திடும் ஒரே நிறுவனம்

நீண்ட காலமாக ஒரே இடத்தில் இயங்கும் நிறுவனம்
Tel: (416) 631-6464
(416) 630-7788
Fax: (416) 631-9703

- சம்பள இழப்பீடுகள்
- வணிக இழப்பீடுகள்
- எதிர்கால சம்பள இழப்பீடுகள்
- கல்விக்கான இழப்பீடுகள்
- மறுதொழில் பயிற்சித்தல்
- சட்ட உரிமைகள்
- வீட்டுப் பராமரிப்புச் செலவுகள்
- குழந்தைகள் பராமரிப்புச் செலவுகள்
- சிறப்பு மருத்துவச் செலவுகள்

தொடர்புகளுக்கு:
KILLY & BALA
1110-A Wilson Ave., Suite 211, Downsview, ON M3M 1G7
THE INSURANCE CLAIMS SPECIALISTS

எந்தச் செய்தியையும் முந்தித் தரும் ஒரே ஏடு ஈழநாடு

## ஈழநாடு வாசகர்கள், வர்த்தகர்கள் விளம்பரம் செய்வோர் கவனத்திற்கு!

எமது ஈழநாடு அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை திறந்திருக்கும்.

பிறந்தநாள், மரணஅறிவித்தல்கள், நினைவஞ்சலிகள் மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டும் ஞாயிறு இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

வர்த்தக விளம்பரங்கள் மற்றும் சமூகநல விளம்பரங்கள் சனிக்கிழமை மாலை 6.30 மணி வரை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். தங்கள் ஆதரவிற்கு நன்றி

## வாசகர்களே! விளம்பரதாரர்களே!

ஈழநாட்டில் விளம்பரம், அறிவித்தல்கள் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் உங்கள் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம்.

SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)

A.R.K.MARKET
31 - 35 ST.DENNIS DRIVE
(DONMILLS / EGLINTON)

DAILY NEEDS
2537A PHARMACY AVE
(FINCH / PHARMACY)

JAFFNA SUPER STORES
1221 MARKHAM RD # 14
(MARKHAM / EELESMERE)

KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO

AGP MART
4A WADE AVE
TORONTO

UTHAYA'S SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE

**மிஸிசாகா:**

THARSHNA'S SUPER MARKET
27 DUNDAS ST EAST
MISSISSAUGA

**மொன்றியல்:**

MARCHE THURGA
444 JEANTALON WEST
(514) 276 - 9262

**மேலதிக தொடர்புகளுக்கு:**
**பரமேஸ்:(416)654 - 9825**

## வாசகர்களின் கவனத்திற்கு!

ஈழநாட்டில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்களும் ஐரோப்பிய மற்றும் அவுஸ்திரேலிய நாடுகளில் வெளியாகும் பதிப்புக்களிலும் இடம் பெறும் என்பதையும் ஐரோப்பிய வானொலியில் உடனுக்குடன் இலவசமாக ஒலிபரப்பாகும் என்பதையும் அறியத் தருகின்றோம். மேலதிக விபரங்கள் தேவைப்படின் தொடர்பு கொள்ளவும்.

# "ரீடோர்" பணிமனை வெள்ளவத்தையில் திறக்கப்படலாம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பணிமனை திறப்பு விழா மிகவிரைவில் நடைபெறலாம் என்றும் தெரிவிக்கபபடுகிறது. முன்னர் தமிழ்ஈழ விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவுக் கிளையொன்றையே வெள்ளவத்தையில் நிறுவத்திட்டம் வகுக்கப்பட்டிருந்தது.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் உள்ள விதிகளின்படி யுத்தநிறுத்தம் ஏற்பட்டு 90 நாட்களுக்குள் விடுதலைப்புலிகள் ஆயுதமற்ற நிலையில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் பணிகளில் ஈடுபட முடியும்.

இந்த அடிப்படையில் விடுதலைப்புலிகளின் அரசியல் பணிமனை ஒன்று வெள்ளவத்தையில் திறக்கப்பட உத்தேசிக்கப்பட்டிருந்தது. ஆயினும் ஜே.வி.பி.சிஹல உறுமய போன்ற சிங்களப் பேரினவாத அமைப்புக்கள் இந்த பணிமனை செயற்பட விடாமல் மறியல் போராட்டம் செய்யத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகின.

அத்துடன் சிங்களப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இவ்வாறு பணிமனை ஒன்று கொழும்பில் திறக்கப்படுவது உசிதமானதல்ல என்றும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின்படி வடக்கு கிழக்கில் உள்ள இராணுவக் கட்டுபபாட்டுப் பகுதிகளில் தான் இவ்வாறு அரசியல் செய்யப்படலாம் என்றும் கருத்துத் தெரிவித்தார்.

தவிர விடுதலைப்புலிகளே தமிழரின் ஏகப்பிரதிநிதிகள் என்று ஏற்றுக் கொண்டு ஆதரவு அமைப்பாகச் செயற்படும் தமிழர்தேசிய கூட்டமைபபும் தற்போதைக்கு நேரடியாகப் பணிமனை திறப்பதை ஒத்தி வைக்கலாம் என்று ஆலோசனை கூறியது.

இந்த அடிப்படையில் விடுதலைப்புலிகளின் கிளை அமைப்பாக இருந்த போதிலும் பிரச்சனையற்ற முறையில் தமிழ்ப்பகுதிகளின் பொருண்மிய மேம்பாட்டினையே முன் வைத்துச் செயற்படும் ரீடோர் அமைப்பின் பணிமனை வெள்ளவத்தையில் திறககப்படுவதில் சர்சசை இருக்காது என்று கருதப்படுகிறது.

கொஜம்பிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள், அசர சார்பற்ற நிறுவணங்கள், பெரிய தொழில்துறை நிறுவணங்கள் ஆகியவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்தியும் கொழும்பிலுள்ள தமிழ்ச் செல்வந்தர் களிடம் பொருளுதவி பெற்று வட கிழக்கில் பல புதிய உற்பத்தி நிறுவணங்களை நிர்மாணிக்கும் பணியில் ரீடோர் கொழும்பில் செயற்படும்.

# சந்திரிகா ஆதரவுடன் கொழும்பில் 4 கட்சித் தமிழ்த் துரோகக் கூட்டமைப்பு உதயம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏறக்குறைய விடுதலைப்புலிகளின் உத்தியோகப்பற்றற்ற பாராளுமன்றக் குழுவாகவே இந்தக் கூட்டமைப்பு பாராளுமன்றத்திற்கு உள்ளும் வெளியும் செயற்பட்டு வருகிறது. விடுதலைப்புலிகள் நேரடியாகச் செயற்பட முடியாத இடங்களில் அவர்களுக்கு ஒரு மாற்றீடாகவும் நேரடியாகவும் செயற்படக்கூடிய இடங்களில் ஒரு மேலதிக ஆதரவு அமைப்பாகவும் இந்தக் கூட்டமைப்பு இதுவரையில் செயற்பட்டு வருகிறது.

இக்கூட்டமைப்பின் செயற்பாடும் சென்ற தேர்தலில் விடுதலைப்புலிகளின் பெயரால் பெற்றுக் கொண்ட மக்கள் ஆணையும் விடுதலைப்புலிகளின் அரசியல் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொண்டு நடக்கும் போக்கும் தமிழ்இன விரோதிகளுக்கு பெரும் தலையிடியாகவுள்ளது.

தமிழ்மக்களின் கடந்தகால ஒற்றுமையின்மையைப் பயன்படுத்தித் தமக்குச் சாதகமான அரசியல் நடத்தி வந்த சிங்களப் பேரினவாதிகளுக்கு இந்த ஒற்றுமை வேப்பங்காயாகக் கசக்கின்றது. எனவே எப்பாடு பட்டாவது இந்த ஒற்றுமையைச் சீர்குலைக்க பல நடவடிக்கைகளை ஒருபுறத்தில் சிங்களப் பேரினவாதிகள் மேற்கொண்டு வருகின்றனர். மறுபுறத்தில் தமிழர் தேசிய கூட்டமைப்புக்கு மாற்றாக இன்னொரு தமிழர் கூட்டு உருவாக்கப்படுவதையும் ஊக்குவித்து வருகின்றனர்.

சென்ற வாரம் இந்தியப்பயணத்தை மேற்கொள்ள முதல் சிங்களப் பேரினவாத ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் தமிழ்துரோகக் குழுக்களைக் கொண்ட புதிய முன்னணி ஒன்று உருவாகியுள்ளதாக கொழும்புப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

தமிழர் தேசியக் கூட்டமைப்புக்குச் சார்பாக இந்தப் புதிய கூட்டமைப்பை உருவாக்கிக் காட்டும் முயற்சியிலேயே சந்திரிகா குமாரதுங்க இந்த விஷப் பரீட்சையில் இறங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய பாராளுமன்றத்தில் இரண்டு எம்.பி.க்களைக் கொண்டுள்ள ஈ.பி.டி.பி. எனப்படும் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி, ஒரு ஆசனம் கொண்ட புளொட் , ஒரு ஆசனம் கூட இல்லாத ஆனால் இந்திய உளவு அமைப்புக்களின் ஆதரவைப் பெற்ற வரதர் அணி உண்மையான ஈரோஸ் அமைப்பு பாலகுமார் தலைமையில் புலிகளுடன் இணைந்த பின்னர் எஞ்சிய போலிகளுடன் இயங்கும் சங்கர் ராஜி பிரிவு ஆகிய நான்கு கட்சிகளையும் கொண்டே இந்த கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

சந்திரிகா முன்னிலையில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் ஈ.பி.டி.பி. சார்பில் டக்ளஸ், விக்கினேஸ்வரன், மதனராஜன், பாலசுப்பிரமணிய ஐயர், வேலாயுதம் மகேஸ்வரி, தவராசா, சிவதாசன் ஆகியோர் கலந்து கொண்டனர். புளொட் சார்பில் சித்தார்த்தன், குருசங்கர், மாறன் மாஸ்டர் ஆகியோர் கலந்து கொண்டனர். ஈரோஸ் சார்பில் சங்கர் ராஜி, சுதாமாஸ்டர் கலந்து கொண்டனர். வரதர் அணி சார்பில் வரதராஜப்பெருமாள், சுகு, சாந்தன், துரைரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர். இது பற்றியமேலதிக விபரங்கள் அடுத்தவாரமம் தொடரும்.

# யாழ்ப்பாணக் கல்லூரியின் இராப்போசன விருந்து நிகழ்வு

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி பழைய மாணவர்களின் மாலை நேர ஒன்றுகூடலும் இராப்போசன விருந்தும் அடுத்தவாரம் ஸ்காபரோவில் நடைபெறவுள்ளது. பழைய மாணவ, மாணவியர், ஆசிரியர்கள், தம் குடும்பங்களுடன் சமூகமளிக்குமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

இடம்- மெகா பார்ட்டி ஹோல் - 3330 பார்மஸி அவனியு (மக்நிக்கல் சந்தி)

காலம் - 03ம்திகதி வெள்ளிக்கிழமை (03.05.2002) நேரம் 7.00 மணி

கட்டணம் - 15.00 டொலர் (பெரியவர்கள்) 10.00 டொலர் (சிறியவர்கள்)

தொடர்புகளுக்கு உமாசுதன் (416) 724 - 7839 கருணா (416) 332 - 1026




## ஸ்ரீ முத்து மாரி அம்பாள் தேவஸ்தானம்

**3057 Universal Drive - Mississaugh - Ontario L4X 2E2**
**Tel (905) 602 - 2068 / 629 - 2050 Fax (905) 629 - 4428**

Web site: www.ambaltemple.org

தொடர்புகளுக்கு:
**சுவாமி சோமேஸ்வரக்குருக்கள்**
(பிரதம குருக்கள், தலைவர், ஜோதிடர், திருமணப்பதிவாளர்)

பூசை நேரம்
காலை 8.00 மணி
பகல் 12.00 மணி
மாலை 7.00 மணி
செவ்வாய் - வெள்ளி
மாலை 7.30 மணி

**கோவில் திறந்திருக்கும் நேரம்**
காலை 7.00 முதல்- 01.00 வரை
மாலை 6.00 முதல்- 9.00 வரை
விசேட நாட்களில் நேரங்கள்
மாற்றியமைக்கப்படும்

# ஈழநாடு

EEZHANADU
P.O.BOX 878
STATION 'Q'
TORONTO - ONT
CANADA - M4T 2N7

தொலைபேசி:
(416) 654 - 9825
(416) 654 - 1867
தொலைநகல்:
(416) 652 - 7493

தலைமையகம்:
EEZHANADU
19 BD DE LA CHAPELLE
FRANCE
TEL: (1) 53 26 59 21

பிரதம நிர்வாகி:
எஸ்.பாலச்சந்திரன்

பிரதம ஆசிரியர்:
எஸ்.எஸ்.குகநாதன்

கனடா பதிப்பு:
பிரதம ஆசிரியர்
T.K.பரமேஸ்வரன்

சுவிஸ்சர்லாந்து
EELANADU
POST FACH 60
CH 4302 AUGST
ABO CHF 130
TEL: 061 /813 1552

ஜேர்மனி
EELANADU
GROLITZE STR 6
41460 NEUSS
TEL: 02131 / 101748

அவுஸ்திரேலியா
EELANADU
170 HOTHLYN DRIVE
CRAIGLEBURN
VICTORIO 3064
TEL: (03) 3056246

லண்டன்
EELANADU
38 MOFFAT ROAD
LONDON - U.K
SW 177 EZ


ஈழநாட்டில்பிரசுரமாகும் அனைத்து விடயங்களும் முன் அனுமதியின்றி மீள் பிரசுரம் செய்ய முடியாது.

# வன்னியில் இராணுவம் புதைத்த மிதிவெடிகள் 125 ஆண்டுகள் வரை உயிர்ப்பலி எடுக்குமாம்

வன்னிப்பகுதியில் இராணுவ நடவடிக்கையின் போது புதைக்கப்பட்ட மிதிவெடிகள் 12 தசாப்த காலத்துக்கு பின்னரும் வெடித்து உயிர்களைப் பலியெடுக்கக் கூடியவையாகும். கண்ணிவெடி அகற்றும் மனிதநேய அமைப்பின் இணைப்பாளரான யோகன் இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவித்ததாவது விடுதலைப்புலிகள் தாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் போது புதைத்துள்ள ஜொனி வெடிகள் ஆறு மாதங்கள் மட்டுமே செயற்படக்கூடியவை. அதன் பின்னர் அவை செயலிழந்து விடும். அந்த மிதிவெடிகளை அகற்ற விடுதலைப்புலிகள் எமக்குப் பூரண ஒத்துழைப்புத் தருகின்றனர். தம்மால் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் பற்றிய வரைபடங்களை அவர்கள் தந்துள்ளனர்.

தெற்காசியாவின் மிதிவெடிக் களஞ்சியம் என்று சொல்லுமளவுக்கு வன்னி மண்ணில் இராணுவத்தினர் வகை தொகையின்றி மிதி வெடிகளைப் புதைத்திருக்கின்றனர்.

சீனத்தயாரிப்பு மிதிவெடிகளான ரி72 சுமார் 125 வருடங்கள் வரை செயற்படக்கூடியவை. அதன்பின் அவை செயலிழக்கும். பாகிஸ்தான் தயாரிப்பான பி4 ரக மிதிவெடிகள் 100 வருடங்கள் வரை செயலிழக்காமல் இருக்கும். சீனத்தயாரிப்பு மிதி வெடிகளுக்குள் தண்ணீர் இலகுவில் உட்புகுமுடியாததால் அவை அதிகளவு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை. இலங்கை இரர்ணுவம் வன்னியில் புதைத்து வைத்துள்ள மிதிவெடிகள் தொடர்பான விபரம் எதுவும் எமக்குத் தெரியாது. இராணுவ மிதிவெடிகள் பற்றிய வரை படங்களைப் பெற்றுத்தருமாறு ஐ.நா.அதிகாரிகளிடம் கோரியிருக்கின்றோம். இந்த வேண்டுகோள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. சாதாரண மிதிவெடி ஒன்று வெடிக்கும் போது ஒருவரே காலை இழப்பார். ஆனால் இராணுவ மிதிவெடிகள் அப்படி அல்ல என்றார் அவர்.

# தலைவரை இந்தியாவிடம் ஒப்படைக்க ரணிலைக் கோருவாராம் ஜெயலலிதா தமிழக அரசின் தீர்மானத்தை ஆட்சேபித்து எம்.பி.க்கள் மகஜர்

ஸ்ரீலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் யூன் மாதம் இந்தியாவுக்கு வரும் போது அவரைச் சந்திப்பேன். விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற கோரிக்கையை அவரிடம் நேரடியாகக் கொடுப்பேன்.

இப்படிக் கூறியிருக் கின்றார் தமிழகத்தின் அதிசிறந்த மனநோயாளியும் தமிழக முதல்வருமான ஜெயலலிதா. சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அவர் இப்படித் தெரிவித்திருக கிறார். அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கையில் மேற்கொள்ளப் பட்டு வரும் சமாதான முயற்சிகள் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடிதம் ஒன்றை எனக்கு அனுப்பியிருந்தார். இதையிட்டு மகிழ்ச்சி அடைக்கிறேன்.

விடுதலைப்புலிகள் மக்களால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் அல்லர். அவர்களைத் தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்க முடியாது. தீர்வுக்கான பேச்சுக்களை அவர்களுடன் மட்டும் தான் நடத்த வேண்டும் என்ற வாதத்தையும் ஏற்கமுடியாது. ஏனைய தமிழ் கட்சிகளுடனும் கலந்தாலோசனை நடத்த வேண்டியது அவசியம். இப்படி ஜெயலலிதா தெரிவித்தார்.

இதேவேளை விடுதலைப்புலிகளின் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களை நாடு கடத்தக் கோரும் தமிழக அரசின் தீர்மானத்தைக் கண்டித்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று திங்கட் கிழமை கொழும்பில் உள்ள இந்தியத்தூதுவரிடம் மகஜர் ஒன்றைக் கையளிக்கவிருக்கின்றனர். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பாக கொழும்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன், தமிழ்காங்கிரஸ் செயலாளர் குமரகுருபரன், ஆகியோர் இந்தச் செய்தியாளர் மாநாட்டில் பங்குபற்றினர். தமிழ் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமின்றி ஏனைய கட்சிகளின் அங்கம் வகிக்கும் தமிழ்நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து செல்லவுள்ளனர்.

# மருத்துவ பரிசோதனைக்காகவே பாலசிங்கம் லண்டன் வந்தார்

கடந்த ஒரு மாதகாலமாக வன்னியில்தங்கியிருந்த விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் தமது வழமையான மருத்துவப் பரிசோதனைக்காகவே லண்டன் வந்து சேர்ந்தார் என்ற செய்தியை அவரே தெரிவித்துள்ளார்.

தமது பயணம் தொடர்பாக இலங்கையில் உள்ள பத்திரிகைகளிலும் இணையத்தளங்களிலும் கூறப்படும் காரணங்கள் அனைத்தும் தவறானவை என்றும் திரு பாலசிங்கம் குறிப்பிட்டார்.

ஒரு மாத விசாப் பெற்றுத்தான் பாலசிங்கம் தம்பதிகள் வன்னிக்குச் சென்றனர். விசா முடிந்ததும் அவர் லண்டனுக்குப் புறப்பட்டு விட்டார் என்று பத்திரிகைகளிலும் இணையத்தளங்களிலும் ஒரு காரணம் கூறப்பட்டது.

வன்னியிலிருந்த போது பாலசிங்கம் சுகவீனமுற்றார் என்றும் சிகிச்சை பெறுவதற்காகவே அவசரமாக அவர் லண்டன் சென்றார் என்றும் இன்னொரு காரணமும் கூறப்பட்டது. இவை பற்றிக் கேட்டபோதே விசாப் பிரச்சனை இருக்கவில்லை. விசாவை நீடித்து வன்னியில் மேலும் தங்கியிருப்பதற்கு எல்லா வசதிகளும் இருந்தன என்றார் பாலசிங்கம். வன்னியில் தமக்கு அப்படிச் சுகவீனம் ஏதும் ஏற்படவில்லை என்றும் அவர் சொன்னார்.

சிறுநீரகப் பிரச்சனைக்குச் சிகிச்சை பெற்ற பின்னர் லண்டனில் அடிக்கடி மருத்துவ பரிசோதனைக்கு உட்பட்டு வந்தேன். ஒரு மாதம் வன்னியில் இருந்த போது முறையான மருத்துவ பரிசோதனைக்கு வாய்ப்பிருக்கவில்லை. வைத்திய பரிசோதனைகளை பின்போட்டுக் கொண்டு போவது நல்லதல்ல. அது பெரும் பிரச்சனைகளை ஏற்படுத்தலாம். அதனாலேயே லண்டனில் எனது வழமையான வைத்திய பரிசோதனை மேற்கொள்வதற்காகவே காலம் தாழ்த்தாமல் புறப்பட்டேன். வேறு ஒருகாரணமுமில்லை. இப்படி அவர் சொன்னார். அவர் ஒரு மாதத்துக்கு முன்னர் லண்டனில் இருந்த சென்று அங்கிருந்து கடல் விமானம் ஏறி இரணைமடுப் பெருநீர்ப்பரப்பில் வந்திறங்கினர். அந்த மாதிரியே லண்டனுக்கு மாலைதீவு ஊடாகத் தற்போது திரும்பிச் சென்றார்.

மாலைதீவில் இருந்து லண்டனைச் சென்றடைந்ததும் முதல் வேலையாக வைத்திய பரிசோதனைக்குச் சென்றார். தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது நான் நன்றாக இருக்கின்றேன். உற்சாகமாக இருக்கின்றேன். எந்தக் கோளாறும் இல்லை என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

அரசியல் நிலைமை பற்றிக் கேட்ட போது புரிந்துணர்வு உடன்படிக்கைப்படி எல்லாக் காரியங்களும் நடந்து இயல்புநிலை ஏற்பட வேண்டும். யூன் நடுப்பகுதியில் தாய்லாந்தில் பேச்சுக்கள் ஆரம்பமாகு முன்னர் இயல்புநிலை ஏற்படுத்தப்பட்டு விடலாம் என்ற நம்புகின்றோம். அதற்கிடையில் இத்தடை நீக்கம், இடைக்கால நிர்வாகம் என்று பல விடயங்கள் இருக்கின்றன. என்ன நடக்கும் என்று பார்த்துக் கொண்டிருக்கின்றோம் என்றார் அன்டன் பாலசிங்கம்.

# புலிகளின் பிரதேசங்களில் வேவு விமானங்கள் நோட்டம்?

ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்குச் சொந்தமான சில வேவு விமானங்கள் சனிக்கிழமை 27ஆம் திகதி வனனியில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு மேலாக வட்டமடித்ததாக விடுதலைப்புலிகளின் தகவல்களை ஆதாரம்காட்டி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. ஆள் இல்லாமல் இயங்கும் இந்த வேவு விமானங்கள் கிளிநொச்சி, பரந்தன், ஆனையிறவுப் பகுதிகளுக்கு மேலாகவே பறந்து வட்டமடித்ததாகக் கூறப்பட்டது. இந்நடவடிக்கை புரிந்துணர்வு உடன்பாடிக்கையை மீறும் செயலாக அமைந்துள்ளது என்றும் அந்தச் செய்தி ஏஜென்ஸி விமர்சித்தது.


TORONTO - COLOMBO
RETURN TRIP
ONLY
1285.00
(Tax included)

SkyRoute
TRAVEL SERVICES INC.
1200 MARKHAM ROAD, SUITE 106
SCARBOROUGH, ONTARIO, M1H 3C3
TEL: 416-439-4000 FAX: 416-439-6463
TOLL FREE: 1-877-468-6759 - 1-877-GO TO SKY
E-mail: contact@skyroutetravel.net

CHENNAI - 1260.00
LONDON - 460.00
AMSTERDAM - 520.00
ZURICH - 550.00
OSLO - 675.00
PARIS - 520.00
CHICAGO - 183.00
LOS ANGELES - 355.00
PHOENIX - 355.00

(Taxes are extra and the fares are subject to change without notice)
416-439-4000
IATA
Reg: 04488805 / 04652780
TICO

# அன்டன் பாலசிங்கம் தம்பதியர் லண்டன் வந்து சேர்ந்தனர்

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்டன் பாலசிங்கம். அவரது துணைவியார் அடேல் பாலசிங்கம் ஆகியோர் 24ம் மிதிகதி வன்னியில் இருந்து விசேட கடல் விமானத்தில் மாலைதீவைச் சென்றடைந்தனர். அவர்கள் அங்கிருந்து லண்டன் போய்ச் சேர்ந்துள்ளனர்.

மாலைதீவில் இருந்து 24ஆம் திகதி காலை இரணைமடுக் குள நீர்ப்பரப்பில் வந்திறங்கிய விசேட விமானத்தில் பாலசிங்கம் தம்பதியர் மாலைதீவுக்குப் பயணமாகினர்.

விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்செல்வன். கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை. காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் ஆகியோர் பாலசிங்கம் தம்பதிகளை வழியனுப்பி வைத்தனர். மாலைதீவில் இருந்து வந்த விசேட கடல் விமானத்தில் நோர்வே வெளி



விவகார அமைச்சு அதிகாரி ஒருவர் உடனிருந்தார். அவர் பாலசிங்கம் தம்பதியரை மாலைதீவுக்கு அழைத்துச் சென்றார். அவர்கள் அங்கிருந்து பின்னர் விமானத்தில் லண்டன் சென்றனர்.

அன்டன் பாலசிங்கம் அவர்களின் விமான ஏற்பாடுகளை நோர்வே அதிகாரிகள் ஊடாக தொடர்பு கொண்டு செய்யப்பட்டிருந்தன. திரு பாலசிங்கத்தை ஏற்றிச் செல்லும் விமானம் இலங்கை வான்பரப்பு ஊடாக வன்னியில் இறங்கிச் செல்வதற்கான அனுமதியை அரச விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் லால் லியனராய்ச்சி வழங்கியிருந்தார்.

சமாதான முயற்சிகள் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் மேதகு பிரபாகரனுடன் கலந்தாலோசனை நடத்துவதற்காக அன்டன் பாலசிங்கம் லண்டனில் இருந்து மாலைதீவு ஊடாக கடந்த மாதம் 25ஆம் திகதி வன்னிக்கு வந்து சேர்ந்தார். அவர் ஒரு மாத காலம் வன்னியில் தங்கியிருந்து சமாதானப் பேச்சுக்கான முயற்சிகள் தொடர்பாகப் புலிகளின் தலைவர்களோடு இணைந்து பணியாற்றினார்.

இக்காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் நடத்திய முக்கியத்துவம் வாய்ந்த செய்தியாளர் மாநாட்டில் அன்டன் பாலசிங்கமும் பங்குபற்றினார். தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பு. முஸ்லிம்காங்கிரஸ் பிரதிநிதிகள். மலையக மக்களின் பிரதிநிதிகள் போன்றோருடன் நடத்திய சந்திப்புக்களிலும் பாலசிங்கம் கலந்து கொண்டார்.

மருத்துவ வசதிகளைப் பெறும் பொருட்டே அன்டன் பாலசிங்கம் தற்போது லண்டன் திரும்பினார். எதிர்வரும் யூன் மாத நடுப்பகுதியில் தாய்லாந்தில் நேரடிப் பேச்சுக்கள் ஆரம்பமானால் அதற்கு முன்னர் மீண்டும் ஒரு தடவை அவர் வன்னிக்கு வருவார் என்று விடுதலைப்புலிகளுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன என வன்னிச் செய்திகள் கூறுகின்றன.

# தென்தமிழீழக் கடற்பரப்பில் புலிகளின் படகுகள் வழிமறிப்பு! 7 பேர் கைது

தென்தமிழீழக் கடற்பரப்பில் பயணித்துக் கொண்டிருந்த இரு படகுகள் 24ஆம் திகதி கடற்படையினரால் வழிமறிக்கப்பட்டு அதில் இருந்த ஏழு பேரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் திருகோணமலை துறைமுகப் பொலிசாரால் திருமலை நீதிபதி தியாகேஸ்வரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அவர்களை பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி எதிர்வரும் 8ம்திகதி திருகோணமலை நீதிமன்றத்தில் விசாரணைக்கு சமூகமளிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார். அவர்கள் பயணம் செய்த படகுகளை பொலிசாரின் பாதுகாப்பில் வைக்குமாறும் அவர் பணித்தார்.

இதேவேளை இந்தப் படகுகளில் பணம் செய்தவர்கள் அனைவரும் விடுதலைப்புலி உறுப்பினர்கள் என்றும் அவர்கள் பயணம் செய்த படகுகளில் ஆயுதங்கள் பொருத்தப்பட்டிருந்தன என்றும் கடற்படையினர் கூறுகின்றனர்.

இந்தச் சம்பவம் குறித்து தேசிய பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

2002 ஏப்ரல் 24ஆம் திகதியன்று காலை 8.20 மணிக்கு விடுதலைப் புலிகளின் மூன்று படகுகள் திருகோணமலைக்கு அப்பால் கடலில் தெற்கு நோக்கி சென்று கொண்டிருந்ததை கடற்படையினர் அவதானித்தனர். அவற்றில் 40 பேர் இருந்தனர்.

உடனடியாக அந்த இடத்துக்கு மேலதிக அதிவேகத் தாக்குதல் படகுகள் அனுப்பப்பட்டன. அந்த மூன்று படகுகளையும் கடற்கலங்களை நிறுத்துவதற்குரிய சட்ட திட்டங்களுக்கு அமைய சமிக்ஞை கொடுக்கப்பட்டது. திருமலைக்கு தெற்காக சுமார் எட்டு கடல்மைல் தொலைவில் காலை 10.30 மணியளவில் அது நிறுத்தப்பட்டன. அந்தப் படகுகளில் இருந்த அனைவரையும் கடற்படையினர் கைது செய்தனர்.

அதன்பின்னர் இது குறித்து திருமலை கடற்படைத்தளத்திலுள்ள கடற்படை அதிகாரிகளுக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் அறிவிக்கப்பட்டது. அத்துடன் இது தொடர்பாக எடுக்க வேண்டிய அறிவுறுத்தல்களை மேலிடத்திலிருந்து தொடர்ச்சியாகப் பெற்றுக் கொண்டிருந்தனர். மேலிட உத்தரவுகமைய ஆயுதங்கள் பொருத்தப்பட்டிருந்த அந்தப் படகுகளில் இருந்து புலிகள் உறுப்பினர்கள் இறங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. கடற்புலிகளின் பிரதிநிதி டிக்கம் இறங்கி வந்து தங்கள் விபரங்களைக் கடற்படையினருக்குக் கூறினார்.

பின்னர் இந்த விடயம் குறித்து திருமலை கடற்படை உத்தியோகத்தர்கள் நோர்வே கண்காணிப்புக் குழுவினரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். நோர்வே குழு உறுப்பினரான பொன்ரொஸ் வெஸ ்ற்றன். கடற்படை அதிகாரிகளுடனும் விடுதலைப்புலி அமைப்புடனும் இது தொடர்பாக உரையாடினார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் கடலில் இத்தகைய கைது நடவடிக்கை இடம்பெற்றிருப்பது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. இச்சம்பவம் தொடர்பாக விடுதலைப்புலிகள் தரப்புத் தகவல்கள் எதுவும் உடனடியாக வெளியாகவில்லை.

## ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு தலைவருக்கு பிணை

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் தலைவர் நிஹாஸ் கருணாரட்ன கண்டி நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டார். அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்காவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட இவர் கடந்த ஒருமாத காலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். கண்டி நீதிமன்றத்தில் 24ம்திகதி ஆஜர் செய்யப்பட்ட இவரை 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையில் செல்ல நீதிபதி அனுமதித்தார்.

# பிரபாகரனை அமைச்சர்கள் சந்தித்ததில் தவறென்ன?

## அமைச்சர் அலிக் அலுவிகார கேட்கிறார்

அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் சமாதான முயற்சிகளை முறியடிக்க எத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அரசாங்கம் அவற்றை தகர்த்தெறிந்து விட்டு எத்தகைய வழிகளைக் கையாண்டேனும் நாட்டில் நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டியே தீரும் என்று உள்ளூர் மாகாண சபைகள் அமைச்சர் அலிக்அலுவிகார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் பத்தொன்பது வருட யுத்தக் கொடுமைகளை அனுபவித்து வீட்ட நாட்டு மக்கள் அனைவரும் நாட்டில் அமைதியும் நிரந்தர சமாதானமும் நிலை நாட்டப்பட வேண்டும் என்பதை விரும்புகின்றனர். எனவே இவர்கள் அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் சமாதான முயற்சிகளை ஆதரிப்பார்களே தவிர சமாதான முயற்சிகளுக்கு தடையாக இயங்கும்சந்தர்ப்பவாதிகளுக்கு துணை போக மாட்டார்கள். இன்று இந்நாட்டு அனைத்து சமூக மக்களுமே சமாதானத்தின் தேவையை நன்கு உணர்ந்து கொண்டுள்ளனர்.

யுத்தநிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதையடுத்து நாட்டு மக்கள் அனைவருமே இன்று நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர்.

வீதித்தடைகள் அனைத்தும் நீக்கப்பட்டுள்ளமையால் நாட்டின் நாலாபுறங்களுக்கும் சென்று வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். சுமார் 19 வருடங்கள் காணாமல் இருந்த தமது உறவினர்களையும் உடன்பிறப்புக்களையும் நண்பர்களையும் சந்தித்து உறவு கொண்டாடி வருகின்றனர்.

இப்போது தான் முழுமையான சுதந்திரக்காற்றை அனுபவித்து வருகின்றனர். நாட்டு மக்கள் அனைவருமே ஐ.தே.மு. அரசுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நன்றிக்கடமைப்பட்டுள்ளனர்.

மேலும் அமைச்சர்களான ரவூப் ஹக்கீம். ஆறுமுகம் தொண்டமான். சந்திரசேகரன் ஆகியோர் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்தித்துக் கலந்துரையாடியது தவறு என்ற எதிர்கட்சியினரின் கூற்று ஏற்றுக் கொள்ளக்கூடியதொன்று அல்ல. அரசாங்கம் அவர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரனை கொண்டு வர வேண்டிய அவசியமும் இல்லை. அவர்கள் இவ்வாறு ஒருவரையொருவர் சந்தித்து பரஸ்பர நட்புறவுடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டுள்ளதால் கடந்தகாலத்தில் வடகிழக்கு பிரதேசங்களில் ஒருபகுதிகளில் மனக்கசப்புடன் வாழ்ந்து வந்த தமிழ் முஸ்லிம் மக்கள் இன்று ஒருதாய் மக்களைப் போல் சந்தோஸமாக வாழ வழியேற்பட்டுள்ளது.

இதே போன்று மலையகத் தமிழ்மக்களும் வடபகுதிக்குச் சென்று அங்கு குடியேறியுள்ள உற்றார். உறவினர்களை சந்தித்து வரக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது சிங்கள மக்கள் மத்தியில் புலிகளின் தலைவர் பற்றிய நல்ல எணணம் ஏற்பட்டுள்ளதுஎன்றார்.




JAY'S

PROFESSIONAL TRUCK TRAINING CENTRE

CLASSES - A,B,C,D,Z மற்றும் Air Brake & Defensive Course, Fork Lift (போக்லிப்ற்) பயிற்சிகளும் வழங்கப்படும்




- EI (வேலையற்றோர் காப்புறுதியில்) இருப்பவர்களுக்கு இலவசப் பயிற்சிகள்
- நியாயமான கட்டணத்தில் பயிற்சி வகுப்புகள்
- அனைத்து பயிற்சியாளர்களுக்கும் வேலைவாய்ப்பு
- விசேட தேர்ச்சிபெற்ற பயிற்றுனர்கள்
- வாரத்தில் 7 நாட்களும் வகுப்புகள் உண்டு

START A CAREER YOU CAN FEEL SECURE IN!

விபரங்களுக்கு அழையுங்கள்

TEL: (416) 299-9638

CELL: (416) 771-8041

FAX: (416) 609-9814

www.jaystrans.com

# இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை!

## சமாதானப் பேச்சுவார்த்தைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு இந்தியப் பிரதமர் வாஜ்பாய் சந்திரிகாவிடம் வலியுறுத்தினார்

இலங்கையின் ஐக்கியம். ஆட்புல ஒருமைப்பாடு என்ற வரையறைக்குள் சகல இனக் குழுக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய விதத்தில் தீர்வொன்றைக் காண்பதற்கான பேச்சுவார்த்தைக்கு இந்தியா ஆதரவளிக்கும் என்ற தனது நிலைப்பாட்டை இந்திய அரசு மீண்டும் தெரிவித்திருக்கிறது.

இந்தியாவிற்கு ஒருவார கால விஜயம் மேற்கொண்டு புதுடில்லி சென்ற ஜனாதிபதி சந்திரிகா இந்தியப் பிரதமர் வாஜ்பாயை கடந்த புதன்கிழமை சந்தித்த போது இந்திய நிலைப்பாட்டை வாஜ்பாய் சந்திரிகாவிற்கு தெரியப் படுத்தியுள்ளார்.

வாஜ்பாய்க்கும் சந்திரிகாவுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது தலைமைச் செயலாளர் பிராஜேஷ் மிஸ்ரா. இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜயவந்த்சிங். ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர். சந்திரிகாவுக்கு அனுசரனையாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டார்.

இந்தியப் பிரதமருக்கும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது இந்தியாவூடாக தாய்லாந்திற்கு விடுதலைப்புலிகளின் அரசி



யல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் செல்வதற்கு இந்தியா அனுமதிக்க வேண்டுமென விடுதலைப்புலிகளின் கோரிக்கை விடுத்த விடயம் எவையும் இச்சந்திப்பின் போது ஆராயப்படவில்லை என உத்தியோகபூர்வ வட்டாரங்களை மேற கோள் காட்டி புதுடில்லி செய்திகள் தெரிவித்தன.

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நேரடிப் பேச்சுவார்த்தை ஆரம்பமாவதற்கு இந்தியாவின் ஆதரவு முக்கியமானதொன்றாகும். சந்திரிகாவிடனான சந்திப்பின் போது பேச்சுவார்த்தைக்கான தேவை குறித்து இந்தியாமீண்டும் வலியுறுத்தி கருத்துத் தெரிவித்ததானது இலங்கை அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இசைவான நிலைப்பாட்டை இந்தியா எடுத்திருக்கிறது என்பதை வெளிக்காட்டும் சமிக்ஞையென புதுடில்லியில் உள்ள ஆய்வாய்கள் கருதுகின்றனர்.

இலங்கையின் இனநெருக்கடியைப் பொறுத்தவரை இந்தியா மூன்று பிரதான அம்சங்களை உள்ளடக்கிய அணுகுமுறையைக் கடைப்பிடித்திருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

முதலாவதாக இலங்கை துண்டாடப்படுவதை இந்தியா எதிர்க்கிறது. ஐக்கியம், ஒருமைப்பாடு என்ற வரையறைக்குள்ளேயே தீர்வு எட்டப்பட வேண்டும் என இந்தியா தெரிவித்திருப்பது இதற்கான சான்றாகும்.

இரண்டாவதாக தமிழ்மக்கள் உட்பட இலங்கைத்தீவில் வாழும்



சகல இனக்குழுக்களின் அபிலாசைகளையும் நிறைவு செய்வதாக தீர்வு எட்டப்பட வேண்டுமென்று புதுடில்லி கூறியிருப்பது இலங்கையின் பேச்சுவார்த்தையில் இந்தியா அப்பால் விலகியிருப்பவே விரும்புகின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

மூன்றாவதாக இலங்கையின் சமாதான நடவடிக்கையில் எந்தவொரு தலையீட்டையும் மேற்கொள்ள இந்தியா விரும்பமின்றி இருப்பதையே ஆதரவு தெரிவிப்பதுடன் நின்று கொண்டமை சுட்டிக்காட்டுகின்றதென்பது இந்திய ஆய்வாளர்களின் கணிப்பீடாகும்.

இதேவேளை இந்தியப் பிரதமரும் ஜனாதிபதி சந்திரிகாவும் தனியாகப் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. அச்சமயம் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சிங்கும் சந்திரிகாவின் நெருங்கிய நண்பர் என கூறியிருக்கும் இலங்கை முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரும் சந்திப்பின் போது உடனிருந்துள்ளனர் என்று இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தமிழ் மக்கள் வாழ்வில் புதிய சகாப்தம்:

## தலைவர் பிரபாகரனுக்கு யாழ்.ஆயர் வாழ்த்து

போராயும் போராட்ட நிகழ்வுகளையும் விடுத்து ஜனநாயகத்தையும் அதன் வழிமுறைகளையும் கடைப்பிடிக்க தாங்கள் எடுத்து வரும் முயற்சிகளை வரவேற்கின்றோம் என்று யாழ். ஆயர் வண சௌந்தரநாயகம் அவர்கள் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது தமிழ்மக்களின் நீண்டகாலப் பிரச்சனைனக்கு நிரந்தர அரசியல் தீர்வைக் காணும் முகமாக யுத்தநிறுத்தத்திற்கும் பேச்சுவார்த்தைக்கும் சமாதான நிலைப்பாட்டிற்கும் தாங்கள் இலங்கைத் தமிழ்மக்கள் வாழ்வில் ஒரு புதிய சகாப்தத்தைத் தொடக்கி வைத்தமைக்காக தங்களுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தமிழ்மக்கள் சார்பாகத் தெரிவிக்குமுகமாக இக்கடிதத்தினை எழுதுகின்றோம்.

நோர்வே நாட்டு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தங்கள் அமைப்பு செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் நடந்த பல நிகழ்வுகள் தமிழ்மக்கள் மத்தியில் சமாதானத்துக்கான நம்பிக்கையையும் மகிழ்வையுமே தோற்றுவித்துள்ளன. தமிழீழத்திற்கு பதிலாக மாற்று வழி ஒன்றினை தெரிவித்து அதனை தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டால் தனி நாட்டுக் கோரிக்கையை மறுபரிசீலனை செய்யத் தயராக இருக்கிறோம் என்ற நிலைப்பாட்டைத் தோற்றுவித்து சமாதான வழிக்கு தாங்கள் எடுத்துவரும் நடவடிக்கைகள் துணிச்சலான உண்மையான சமாதானத்துக்கான தேடலுக்குத் தேவையானவை.

ஆசியாவிலேயே பெரிய பத்திரிகையாளர் மாநாடு என வர்ணிக்கப்படும் அண்மையில் தங்களின் பத்திரிகையாளர் மாநாடு தங்களை ஒரு சிறந்த அரசியல் தலைவராக இனங்காட்டியது. பாதைதிறப்பு. தமிழ். முஸ்லிம் கட்சிகளுடனான சந்திப்பு. பத்திரிகையாளர் மாநாடு என தொடரும் நிகழ்வுகள் எல்லாம் தங்களின் தலைமைத்துவத்தையும் தமிழ்மக்களின் சபீட்சமான எதிர்காலத்தையுமே கோடிட்டுக் காட்டுகின்றன. தமிழ்மக்களுக்காகத் தாங்கள் செய்யும் அனைத்து செயற்பாடுகளையும் வெகுவாகப் பாராட்டுகிறோம்.

# இன விடுதலைக்காகப் போராடும் பிரபாவுக்கு அனைவருமே

## நன்றியுடையவர்கள் என்கிறார் வேலம்மாள்

மனித இரத்தத்தை ஆறாக ஓடச் செய்து நாட்டை கிளர்ச்சி மூலம் சின்னாபின்னமாக்கிய ஜே.வி.பி.யைச் சேர்ந்த விமல் வீரவன்ச போன்றவர்கள் இந்நாட்டின் பாராளுமன்றக் கதிரைகளை அலங்கரிக்க முடியுமானால் தமிழர்களின் விடிவுக்காக போராடும் உயர்ந்த போராளியான பிரபாகரனினால் ஏன் ஜனநாயக அமைப்புக்கு வந்து பாராளுமன்ற ஆசனத்தை அலங்கரிக்க முடியாது என்று மேல் மாகாண சபையின் ஐ.தே.க. உறுப்பினர் திருமதி வேலம்மாள் செல்லச்சாமி கேள்வி எழுப்பினார்.

மேல்மாகாணசபையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிராக ஜே.வி.பி.யினர் பிரேரணை ஒன்றை சமர்ப்பித்திருந்தனர். அந்தப் பிரேரணைக்கு எதிராக பேசும் போதே அவர் மேற்கூறியவாறு தெரிவித்தார்.

சிறுபான்மை இனத்தின் விடிவுக்காக 18 ஆண்டுகளாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டு போராடும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு சிறுபான்மை மக்கள் அனைவருமே நன்றிக்கடன் பட்டவர்கள். இந்த நாட்டுக்கு ஒப்பந்தங்கள் புதியவை அல்ல. வடக்கு கிழக்கு பிரதேசம் தமிழ் மக்களின் தாயகம் என்பதை மறுக்க முடியாது. பண்டா - செல்வா ஒப்பந்தம் என்று எத்தனையோ ஒப்பந்தங்களைப் பார்த்து விட்டோம். ஆனால் இவை அனைத்தும் தமிழ்மக்களின் உரிமைகளை பெற்றுத்தரவில்லை.

பிரபாகரனைச் சந்திக்கச் சென்ற அமைச்சர்களுக்கு எதிராக செயற்பட ஜே.வி.பி.க்கு என்ன தகுதி இருக்கிறது. பிரபாகரனை அவர்கள் என்று அழைப்பதைக் கூட தவறாக பேசுகின்றனர் என்றார்.

# புலிகள் எனக்கூறி வர்த்தகர்களிடம் கப்பம் பெற்ற மூவர் கைது

விடுதலைப்புலிகள் என்று தம்மைக் கூறிக் கொண்டு கொட்டாஞ்சேனைப் பகுதியில் உள்ள வர்த்தகர் ஒருவரிடம் இருந்து பலாத்காரமாக 50 ஆயிரம் ரூபா வைக்கம்பமாகப் பெற்ற மூன்று தமிழ்இளைஞர்களைப் பொலிசார் கடந்த வெள்ளிக்கிழமை 26ஆம் திகதி கைது செய்தனர்.

கொட்டாஞ்சேனை விடுதியொன்றின் உரிமையாளரான இந்த வர்த்தகரிடம் ஜம்பட்டா வீதியில் வைத்து இம்மூவரும் பணத்தைப் பெற்ற போது சிவிலுடையில் வந்த பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். இம்மூவரும் தமிழ் ஆயுதக்குழுவொன்றைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிசாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. பொலிசார் இவர்களைப் பிடித்த போதும் தாம் விடுதலைப்புலிகள் என்று கூறித் தப்ப முயன்றுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து கொழும்பு மாவட்ட பிரதிபொலிஸ்மாஅதிபர் போதிலியனகேயின் அறிவுறுத்தலின்படி அவர்கள் மூவரும் உண்மையாகவே புலிகளா என்பதை உறுதிப்படுத்தவும் பொலிசார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இவர்கள் புலிகளாக இருந்தால் பலவந்தமான முறையில் மிரட்டிக் கப்பம் பெற்றது தொடர்பாக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என கொட்டாஞ்சேனைப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கொட்டாஞ்சேனைப் பகுதியில் வாழும் வடக்கு கிழக்குத் தமிழர்களிடம் கடந்த சில தினங்களாக இனந்தெரியாத சிலர் கப்பம் கேட்டு வருவதாகவும் பொலிசாருக்கு தகவல் கிடைத்துள்ளது. இந்தக் குழுவினர் விடுதலைப்புலிகளின் பெயரைப் பயன்படுத்தி ஆயுத முனையில் கப்பம் கேட்டு வரும் தமிழ்க்குழுவினர்கள் என்றும் கல்கிசைப் பொலிசாருக்குத் தெரிய வந்துள்ளது.

இவர்கள் கப்பம் தர மறுக்கும் சிலரை மிரட்டிக் கடத்தவும் முயன்றுள்ளனர் எனவும் பொலிசார் தெரிவித்தனர். இதுவரை முப்பதுக்கு மேற்பட்ட வடக்கு கிழக்கு தமிழர்களின் வீடுகளுக்கு அவரகள் சென்று ஆயுதமுனையில் 2 கோடி ரூபாவக்கு மேல் பணம் திரட்டியுள்ளதாகவும் பொலிசாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.இவர்கள் உண்மையில் புலிகளா அல்லது வேறு தமிழ்க்குழுக்களா என்ற சந்தேகம் தமிழ்மக்களிடம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு கப்பம் கேட்டு வருபவர்கள் பற்றித் தகவல் அறிந்தால் பொலிசாருக்கு அறிவிக்கும்படி கொட்டாஞ்சேனைப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் போர்நிறுத்தம். சமாதானச்சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் சில தமிழ்க்குழுக்களின் உறுப்பினர்கள் நாட்டை விட்டு தப்பியோட இவ்வாறு பணம் திரட்டுவதாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு உட்பட கிழக்கு மாகாணத்திலும் இவ்வாறன செயல்கள் இடம்பெற்று வருகிறது.

# தவறுகள் செய்யாத ஒரு நிர்வாகத்தில் நான் வேலை செய்தேன் என்று எவரும் கூற முடியாது என்கிறார் ஹென்ரிகீஸிங்கர்

தென்னமெரிக்க நாடுகளில் கடந்த காலங்களில் இடம்பெற்ற சர்வாதிகார ஆட்சிகளின் கீழ் நிகழ்ந்த குற்றச்செயல்கள் குறித்து முன்னாள் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹென்ரிகீஸிங்கர் அறிந்திருந்ததாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் காரணமாக அவர் கடந்த புதன்கிழமை லண்டன் சென்ற போது அசௌகரியத்துக்குள்ளானார். எனினும் தனக்கேயுரித்தான இராஜதந்திர ரீதியில் பதிலளித்து நிலைமையை ஒருவாறு சமாளித்துக் கொண்டார். தவறுகள் இடம்பெற்றிருக்கக்கூடியது சாத்தியமே என்றார்.

லண்டன் றோயல் அல்பேர்ட் மண்டபத்தில் இடம்பெற்ற வர்த்தக மாநாடொன்றில் உரையாற்றுவதற்கு கடந்த புதன்கிழமையன்று கீஸிங்கர் வருகை தந்தபோது 200இற்கும் அதிகமான முதலாளித்துவ எதிர்ப்பாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்ததுடன் பொலிசாருடன் கைகலப்பில் ஈடுபட்டனர்.

அமெரிக்க அரசாங்கங்களின் கடந்தகால நடத்தைகள் குறித்து விசாரிக்கச் சிறந்தது நீதிமன்றங்களா என்று கேள்வி எழுப்பிய கீஸிங்கர் "தவறெதையும் இழைக்காத நிர்வாகம் ஒன்றில் நான் பணியாற்றினேன் என்று எவரும் கூற முடியாது" என்று கூறினார்.

கீஸிங்கர் இந்த மாநாட்டில் உரையாற்றிக் கொண்டிருந்த போது வெளியே நடைபாதையில் "வெட்கம், வெட்கம்" என்று கோஷமெழுப்பிய வண்ணம் ஆர்ப்பாட்டக்காரர்கள் அவரை விசாரணைக்குட்படுத்துவது போன்று ஒத்திகையொன்றைச் செய்து பார்த்தனர்.

"உயர்பதவிகளில் உள்ளவர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்கள் வழமையான தீர்மானங்களே. எனவே தவறுகள் இழைக்கப்பட்டிருக்கக்கூடியது சாத்தியமே என்று கீஸிங்கர் சொன்னார்.

ஜேர்மனியில் பிறந்த யூதரான கீஸிங்கர்நாஜிகளின் கொடூரமான ஆட்சியில் அமெரிக்காவுக்குத் தப்பியோடி வந்தவர். இவர் 1969 முதல் 1973 வரை ஜனாதிபதி நிக்சனின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராகவும், 1973 முதல் 1977 வரை நிக்சனின் பின்னர் ஜெரால்ட் போட்டின் கீழும் இராஜாங்க அமைச்சராகவும் பணியாற்றினார்.

1970களில் இருந்து 1980 கள் வரை தென்னமெரிக்க நாடுகளான பிரேசில், ஆர்ஜென்டீனா, உருகுவே மற்றும் பரகுவேயில் இராணுவ ஆட்சியாளர்களினால் அரசியல் எதிர்ப்பாளர்களை அழிக்க மேற்கொள்ளப்பட்ட திட்டமான ஒப்ரேஷன் கொன்டோர் குறித்துக் கீஸிங்கர் தெரிந்து வைத்திருந்தவற்றுக்காக அவரை விசாரணை செய்யுமாறு ஸ்பானிய நீதிபதியொருவர் சர்வதேச பொலிஸ் அமைப்பான இன்டர்போலிடம் கேட்டிருக்கிறார்.

நிகழ்வுகள் இடம்பெற்று 30 வருடங்களின் பின்னர் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு உகந்த இடங்கள் நீதிமன்றங்களா என்பது ஒரு முக்கிய விவகாரம். தீர்மானங்களை எடுக்கும் பொறுப்பை தனிப்பட்ட நீதிபதிகளின் தனிப்பட்ட தீர்ப்புக்கு விடுவதானால் சர்வ நியாயாதிக்கம் என்ற கோட்பாடு மலினப்படுத்தப்பட்டு விடும். ஏனென்றால் தங்களுக்கென தனியான நலன்களைக் கொண்ட குழுக்களினால் தகவல்களைப் பெறுபவர்களாக அந்த நீதிமன்றங்கள் இருக்கக்கூடும் என்று கீஸிங்கர் தெரிவித்தார்.

விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டிய தேவை இருக்குமானால் அதை எதிர்நோக்கத் தயாராக இருப்பதாகக் கூறிய அவர் தனக்கு முன்னதாக வாஷிங்டன் பதிலளிக்கும் என்று குறிப்பிட்டார்.

நான் பதிலளிக்க மறுக்கின்றேன் என்று இதை அர்த்தப்படுத்தலாகாது. அமெரிக்க அரசு அதனிடம் இருக்கும் தகவல்களைச் சேகரித்துப் பதிலளிக்க இடம் தருவதற்காகவே இவ்வாறு மறுக்கின்றேன் என்று கீஸிங்கர் தெரிவித்தார்.

மண்டபத்திற்கு வெளியே முதலாளித்துவ எதிர்ப்பாளர்களும் இடதுசாரிக் குழுக்களும் கீஸிங்கரின் பெரிய கொடும்பாவியொன்றையும் சிலியின் முன்னாள் சர்வாதிகாரி அகஸ்டோ பினோசேயின் ஆட்சிக் காலத்தில் காணாமல் போனவர்களின் புகைப்படங்களையும் வரிசையாக வைத்திருந்தனர்.

கீஸிங்கர் தான் உலகின் மிகப் பெரிய போர்க்குற்றவாளி என்று உலக மயமாக்கலுக்கு எதிரான இயக்கத்தின் தலைவரான கைரெயிலர் ராய்ட்டர் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார். கம்போடியா மீதான வகை தொகையின்றிய குண்டுவீச்சு மற்றும் வியட்நாம் போர் உட்பட கீஸிங்கர் அரசாங்கப் பதவியில் இருந்த காலத்தில் ஏனைய சர்வதேச குற்றச் செயல்களில் அமெரிக்காவின் சம்பந்தத்துக்கு கீஸிங்கரே பொறுப்பேற்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறினர்.

பிரிட்டிஷ் மனித உரிமைகள் ஆர்வலரான பீட்டர் தட்செல் கீஸிங்கரைக் கைது செய்ய வேண்டும் என்று லண்டன் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த மனு இரண்டாவது தடவையாகவும் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது. எனினும் கீஸிங்கருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற தனது போராட்டத்தைத் தொடரப்போவதாக தட்செல் கூறுகிறார்.

வியட்நாமிய போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பேச்சவார்த்தையை நடத்தியமை. 1973 இல் நோபல் சமாதானப்



பரிசைப் பெற்ற கீஸிங்கர் ஈராக்கிற்கு எதிராக மீண்டும் இராணுவ நடவடிக்கையில் இறங்கும் விடயத்தில் மேற்குநாடுகள் மிகுந்த நிதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் மத்திய கிழக்கு நெருக்கடி தொடர்பாக அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்குமிடையில் கூடுதலான அளவுக்கு ஒத்துழைப்புத் தேவை என்றும் வலியுறுத்தினார்.

## இத்தாலிய விமான விபத்தில் 3பேர் பலி! 60 பேர் காயம்

சுவிஸ் லூகரனோ நகரிலிருந்து இத்தாலி மிலான் நகரை நோக்கிச் சென்று கொண்டிருந்த பைபர் ஏர் கமாண்டர் என்ற விமானம் மிலான் நகரில் அமைந்துள்ள அதியுயர் கட்டிடமான பிறேலி டவர் மீது மோதியதில் மூவர் பலியானார்கள். அறுபதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்த விமானம் கட்டிடத்தின் 25 ஆவது மாடியில் மோதி தீப்பிடித்து எரிந்ததாகச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.



இந்த விமானத்தை ஓட்டிச் சென்ற 60 வயதான சுவிஸ் நாட்டைச் சேர்ந்த விமானி விபத்து சம்பவிப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன்னதாக விமானக் கட்டுப்பாட்டு நிலையத்துடன் தொடர்பு கொண்டு விமானத்தில் கோளாறு ஏற்பட்டுள்ளது என்பதை அறிவித்த ஒரு சில நிமிடங்களில் இந்த விபத்து சம்பவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆரம்பத்தில் இந்தச் சம்பவம் ஒரு தாக்குதல் சம்பவமாக இருக்கலாம் என்று அச்சம் நிலவிய போதிலும் பின்னர் இந்தச் சம்பவம் விபத்து என்பதை இத்தாலி உள்துறை அமைச்சகம் உறுதுப்படுத்தியுள்ளது.

விமானம் மோதிய கட்டிடத்தில் சுமார் 300க்கும் மேற்பட்டோர் பணியாற்றிக் கொண்டிருந்தனர். இந்த மாடிக் கட்டிடத்தில் பணியாற்றிய இரு பெண் சட்டத்தரணிகளும் விமான ஓட்டியுமேஇந்த விபத்தில் பலியானவர்கள்.




## திருமலையில் எண்ணெய் குதங்களை குத்தகைக்கு எடுக்கும் இந்தியா

திருகோணமலை சீனன்வாடியில் பிரட்டிசாரால் கட்டப்பட்டு தற்போது கைவிடப்பட்ட நிலையில் உள்ள 101 எண்ணெய்க்குதங்களில் சிலவற்றை குத்தகைக்கு எடுப்பதற்காக மனுக்களை இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் முதலீட்டுச் சபையிடம் கையளித்துள்ளது. சபையினட தலைவர் அர்ஜின் மகேந்திரன் இத்தகவலை தெரிவித்தார்.

எத்தனை எண்ணெய்க்குதங்கள் குத்தகைக்கு விடப்படும் என்பது முடியாகவில்லை என்றும் அவர் தெரிவித்தார். இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் திருகோணமலை துறைமுகத்திற்கு வந்து எரிபொருளை நிரப்ப இந்த எண்ணெய்க் குதங்களைப் பயன்படுத்தி வந்தன என்று தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை துறைமுகமும் சீனன்வாடி எண்ணெய்க்குதங்களும் இந்திய உபகண்ட புவியியல் அரசியல் நிலைப்பாட்டில் முக்கியத்துவம் வகிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. அண்மையில் இந்திய தூதுவரும் திருமலை சென்று வந்தார்.

**ஈழநாடு தற்காலிக தொலைபேசி எண்**
**(416) 528 - 1867**

**WEXFORD CASH MART**
FINANCIAL SERVICES

• MONEY TRANSFER (WORLDWIDE) • CHEQUES CASHED

பணமாற்றுச் சேவையில் ஒரு புதிய அலை

தொடர்புகளுக்கு கணேசமூர்த்தி

1823A Lawrence Ave. East, Scarborough, ON M1R 2Y3
TEL: (416) 285-7709 • FAX: (416) 752-1548

கொழும்பு, யாழ் மாவட்டம் முழுவதும் இல்லம் தேடிப் பணம் கொடுக்கின்றோம்.
மற்றும் வன்னி மாவட்டம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, ஸ்கந்தபுரம், புதுக்குடியிருப்பு மல்லாவிக்கும் எமது சேவை

உங்கள் பணம் உங்கள் உறவினரிடம் உயர்ந்த பெறுமதியில் ஒப்படைக்கப்படும்

- தன்னிகரற்ற சேவை
- நம்பமுடியாத சேவை
- ஒப்பற்ற சேவை
- இணையற்ற சேவை

MONEY ORDER
வசதி உண்டு

WESTERN UNION AGENCY
10 நிமிடத்தில் உலகின் எப்பாகத்திற்கும் பணம் அனுப்பலாம்

தொலைபேசி, மின் அஞ்சல், தொலைநகல் எமக்குத் துணை செய்வதில்லை. காடு, மேடு, கானகம் கடந்த சேவை. போக்குவரத்து வசதி இல்லாத கிராமங்களில் வாழும் உங்கள் உறவினர் இல்லம் தேடிப் பணம் கொடுக்கின்றோம். பணம் கொடுத்த பின் பதில் பெற்றுத் தருகின்றோம்.

# தீவுப்பகுதியில் புலிகள் அரசியலில் ஈடுபட படையினர் அனுமதி மறுப்பு!

## இராணுவ பிரதேசத்திற்குள் அனுமதிக்க முடியாது என கடற்படை அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தீவகப் பிரதேசத்தில் கடற்படை முன்னரங்க காவல் நிலைகளும் முகாம்களும் உள்ளன. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி ஒரு தரப்பின் இராணுவ பிரதேசத்திற்குள் மற்றைய தரப்பை அனுமதிக்காமல் தடை செய்ய முடியும். இதன்படி யாழ்.தீவகப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்களென கடற்படையின் வடபிராந்திய கட்டளைத் தளபதிரியல்அட்மிரல் எஸ்.பி.வீரசேன கண்காணிப்பு குழுவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 12ம்திகதி யாழ்.தீவகப் பிரதேசத்தில் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சென்ற தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் கடற்படையினரால் ஊர்காவற்றுறையில் வைத்து தடுக்கப்பட்டு திருப்பி அனுப்பட்டனர். இது தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு முறையிட்டிருந்தனர்.

விடுதலைப்புலிகள் தடுக்கப்பட்ட சம்பவம் குறித்து கண்காணிப்புக்குழுவிற்கு வடபிராந்தியக் கடற்படைக் கட்டளைஅதிகாரி எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

கடற்படையினர் தமது கட்டுப்பாட்டிலிருக்கும் ஊர்காவற்றுறை புங்குடுதீவு, மண்டைதீவு, எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு ஆகியவற்றை சுற்றி முன்னரங்க நிலைகளை நிறுவியுள்ளார். ஊடுருவலை தடுத்தல், பாதுகாப்பு ஆகிய காரணங்களுக்காக முன்னணி நிலைகள் நிறுவப்பட்டிருப்பதுடன் கண்காணிப்பு முகாம்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆதலால் தீவுப் பிரதேசங்கள் இராணுவ பிரதேசமாகக் கருதப்படுகின்றது. எனவே இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 1.13 பிரிவின் கீழ் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள புலிகள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனினும் 1.12 இன் கீழ் குடும்ப உறுப்பினர்கள். நண்பர்களின் திருமணம், மரணச்சடங்குகளில் கலந்து கொள்ள மட்டும் வரமுடியும். ஆனால் ஒப்பந்தத்தில் உள்ள ஏற்பாடுகள் நிபந்தனைகளுக்கு அமைவாக அனுமதிக்கப்படுவார்கள்.

வீடியோ, கமரா, புகைப்பட கமரா தொலைத்தொடர்புக் கருவி, சயனைட் வில்லைகளை எடுத்து வர முடியாது. கடற்படை பிராந்தியத்திற்குள் கமரா அனுமதிக்கப்படாததற்கான காணரம் வெளிப்படையானது. தொலைத்தொடர்பு கருவி மூலம் றிமோட் கொன்றோல் உபகரணங்களை இயக்க முடியும். அத்துடன் சயனைட் வில்லைகள் உயிராபத்து விளைவிக்கக்கூடிய ஆயுதமாகக் கருதமுடியும். இவ்வாறு வடபிராந்திய கடற் படைத் தளபதி கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு எழுதியுள் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 1.13 பிரிவு வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அரசியல் நடவடிக்கைகளில் விடுதலைப்புலிகள் ஈடுபடலாமென குறிப்பிடுகிறது.

பிரிவு 1.11 இரு தரப்பினரும் தமது குடும்ப உறுப்பினர்களைச் சந்திப்பதற்கு மாற்று தரப்பினரது பகுதிகளுக்கு கட்டளை அதிகாரியின் சிபாரிசுடன் செல்லலாம். முக்கியமான இராணுவ பிரதேசங்களுக்குள் பிரவேசிப்பதை தடுக்க இரு தரப்பினருக்கும் உரிமை உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

# மே 8 தமிழகத்தில் பிரபாகரனுக்கு எதிரான சட்டசபைத் தீர்மானத்தின் பிரதிகளுக்கு தீ வைக்கும் போராட்டம் – நெடுமாறன் தகவல்

விடுதலைப்புலிகளின் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களைக் கைது செய்து இந்தியாவுக்கு நாடு கடத்த இலங்கை அரசாங்கத்தினால் முடியாவிட்டால் இலங்கை அரசின் சம்மதத்துடன் இந்திய இராணுவத்தை அனுப்பி அவரைக் கைது செய்ய வேண்டுடென்று தமிழக முதல்வர் ஜெயலலிதாவினால் முன் மொழியப்பட்டு சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நகல்களை தமிழகத்தின் தலைநகர் சென்னையிலும் மாவட்டத் தலைநகரங்களிலும் எரிக்கும் போராட்டமொன்றை மே மாதம் 8ஆம்திகதி நடத்துவதற்கு பல கட்சிகள் தமிழ்அமைப்புக்கள் முடிவெடுத்திருக்கின்றன.

இத்தகவலை தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் அவர்கள் தெரிவித்தார். தமிழ் அமைப்புக்கள் மேற்கொண்ட தீர்மானங்கள் வருமாறு

0 வருடப் போருக்குப் பிறகு இலங்கையில் அமைதி ஏற்படும் நல்ல சூழ்நிலை உருவாகியுள்ளது. இதற்காக விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு தமிழ்நாட்டில் உள்ள ஆறு கோடி தமிழ்மக்களும் இணையாக நிற்க வேண்டும் என்று இந்தக் கூட்டம் வேண்டிக் கொள்கிறது.

பிரபாகரனைப் பிடித்து வர இந்திய இராணுவத்தை அனுப்ப வேண்டும் என்று தமிழக சட்ட மன்றத்தில் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானம் தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் தீர்மானம் அல்ல. இந்தத் தீர்மானத்தை எதிர்த்து வெளி நடப்பு செய்த கட்சிகளைப் பாராட்டுகிறோம். நடுநிலை வகித்த தி.மு.க.விற்கு ஆழ்ந்த கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இலங்கைத் தமிழர்களுக்கும் அமைதிப் பேச்சுக்கும் எதிரான இந்தத் தீர்மானத்தின் நகலை அடுத்த மாதம் (மே) 8ஆம் திகதியன்று எரிப்பது என்றும் சென்னையிலும் ஏனைய மாவட்ட தலைநகரங்களிலும் இந்தப் போராட்டத்தை அமைதியாக நடத்த அனைத்துக் கட்சிகளையும் தமிழர் அமைப்புக்களையும் இந்தக் கூட்டம் வேண்டிக் கொள்கிறது.

### சந்திரிகாவிடம் ராமதாஸ் மகஜர்

இதேவேளை இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளைத் துரிதப்படுத்துவதற்கும் இனநெருகடகடிக்குப் பேச்சவார்த்தை மூலமான நிரந்தர இணக்கத் தீர்வொன்றைக் காண்பிக்கும் நடைமுறைச் சாத்தியமான முன்முயற்சிகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி சந்திரிகாவிடம் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

ராமதாஸின் மகஜரை புதுடில்லியில் பா.ம.க. எம்.பி.க்கள் சந்திரிகாவிடம் கையளித்தனர். இலங்கையில் சமாதான முயற்சிகளை நீங்கள் துரிதப்படுத்த வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு. உங்களின் தலைமைத்துவத்தின் கீழ் நாடு இருக்கின்ற தருணத்தில் சமாதானம் நிலைநாட்டப்பட்டு, இரு பிரதான சமூகங்களைச் சேர்ந்த மக்களும் அமைதி, சௌஜன்யத்துடன் வாழும் நிலை உருவாக்கப்பட்டு, முன்னேற்றத்தினதும் அபிவிருத்தியினதும் விளை நிலமாக நாடு மாறுமேயானால் அதனால் உங்களுக்குப் பெரும் கௌரவம் ஏற்படும்.

இலங்கையில் ஆயுதப் போராட்டம் தொடர்வது இனநெருக்கடியின் துரதிஷ்டவசமான விளைவுகள் நீடிக்க உதவும் என்றே தமிழ் நாட்டு மக்கள் உணர்கிறார்கள். மனித குலத்தினதும் இலங்கையின் இனக்குழுக்களின் சக வாழ்வினதும் நலன்களுக்காக கடந்த கால கசப்பான நிகழ்வுகள் மறக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

## ஊர்காவற்றுறை பகுதி எப்போது இராணுவ பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டது?

ஸ்ரீலங்கா அரசும் விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் விடுதலைப்புலிகள் தமிழ்மக்கள் வாழும் இடங்களில் தமது அரசியல் நடவடிக்கைகளின் பொருட்டு சென்று அந்த மக்களை சந்திப்பதற்கு அனைத்து உரிமைகளையும் கொண்டுள்ளனர்.

இவ்வாறு தமிழ்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தெரிவித்தார். தீவகத்திற்குள் அரசியல் நடவடிக்கைக்காக விடுதலைப்புலிகள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று கடற்படையின் வடபிராந்திய கட்டளைத்தளபதி ரியல் அட்மிரல் எஸ்.பி.வீரசேன கண்காணிப்பு பிரிவினருக்கு அறிவித்துள்ளது குறித்து மாவை சேனாதிராசா கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது

மேற்படி ஒப்பந்தம் இருந்தால் என்ன இல்லாவிட்டால் என்ன எந்தவொரு பிரதேசத்தையும் இராணுவப் பிரதேசமென ஒரு இராணுவத்தளபதி குறிப்பிடுவதை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. தேர்தல் காலத்தில் இவர்களது கட்டுப்பாட்டுப் பிரதேசம் எனக் கூறப்படும் இதே இடத்தில் தான் எம்மில் சிலர் கொலை செய்யப்பட்டனர். சிலர் கொலை முயற்சிக்குள்ளானோம். அப்படியானால் ஊர்காவற்றுறைப் பிரதேசம் தங்களது இராணுவப் பிரதேசம் என இராணுவத்தளபதி கூறினால் தேர்தல் கால சம்பவத்திற்கும் தளபதியே முழுப்பொறுப்பேற்க வேண்டும். மேலும் தளபதியின் கூற்று அரசு கொண்டுள்ள ஒப்பந்தத்தை மீறுவதாகவுள்ளது.

ஊர்காவற்றுறைப் பிரதேசம் எப்போது இராணுவப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டதென்பது எவருக்குமே தெரியாது. அப்படியே இருந்தாலும் கூட அது தவறு. ஒப்பந்தத்தை மீறிச் செயற்படுவது தவறு.

இதில் இரண்டு விடயங்கள் கவனிக்கப்பட வேண்டியுள்ளது. முதலாவது கண்காணிப்புக்குழு தளபதியின் கருத்துக்குப் பதில் சொல்ல வேண்டும். மற்றையது தன்னிச்சையாக தளபதிகள் வெளியிடும் கூற்றைப் பற்றி அரசு தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும். இந்நிலை நீடித்தால் இந்த நடவடிக்கைளுக்கு எதிராக சம்பந்தப்பட்ட மக்கள் சாத்வீக போராட்டத்தில் ஈடுபடுவர் என்றார்.

இப்போது! உங்கள் அறிவித்தல்கள் ஈழநாட்டில் பிரசுரமாவதன் மூலம் யாழ்ப்பாணம், கொழும்பைச் சென்றடைகின்றது. விரைவில் வன்னி மட்டுநகர் எங்கும்

MARCHE
THURGA
444 Jean Talon Ave West
Montreal, Quebec
(514) 276-9262
இலங்கை, இந்தியா, ஆபிரிக்கா, கரிபியன் மற்றும் கனடிய நாட்டு உணவுப் பொருட்களுக்கும் அதி துரித பணமாற்றுச் சேவைக்கும் வாரத்தில் 7 நாட்களும் சேவை ஆற்றும் ஸ்தாபனம்.
மார்ஷே துர்க்கா
இலவச விநியோகமும் செய்து தரப்படும்.



உங்கள் சகல வைபவங்களுக்கும் சிற்றுண்டி வகைகளையும் உணவு வகைகளையும் பதிவு செய்து பெற்றிட எம்மை அழையுங்கள்
மொமோய் வெதுப்பகம்
BOULANGERIE BAKERY
MOMOI
இலங்கை முறையில் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட
• பாண்
• பணிஸ்
• றொட்டி



எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்
6953 Victoria Ave., Montreal, QUE
(514) 736-1925

# மாவீரரின் இரத்தத்தால் கழுவப்பட்ட பாதையில் சமாதானப் போராளிகளாக வந்துள்ளோம் என்கிறார் தமிழினி

ஐயாயிரத்திற்கு மேற்பட்ட மாவீரர்களின் இரத்தத்தால் கழுவப்பட்ட ஏ9 பாதை வழியாகத்தான் சமாதானப் போராளிகளாக உங்கள் முன்வந்துள்ளோம். இதனை மிகவும் ஆச்சரியத்துடன் நீங்கள் பார்த்துக் கொண்டிருப்பதும் எமக்குப் புரிகிறது.

இவ்வாறு வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் தமிழினி தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அவர் அங்கு மேலும் கூறியதாவது

தற்போது இருக்கும் அரசியல் நிலைப்பாடுகளில் நீண்டகால இடைவெளிக்குப் பின் உங்களைச் சந்திப்பதில் எமக்கு ஏற்படும் உணர்வலைகளை மீட்டுப் பார்க்க வேண்டிய தேவையுள்ளது. யாழ். மண்ணை விட்டு சென்றதில் இருந்து யுத்தகளங்களையே நாம் சந்தித்துக் கொண்டு இருந்தோம். சந்திரிகா அரசு எம்மீது யுத்தத்தைத் திணித்தது.

மாறிமாறி பல இராணுவ நடவடிக்கைகளை நாம் எதிர்கொண்டோம். யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னிக்கு சென்ற சமயம் மிகவும் பலவீனமடைந்திருந்தோம் என்பது உண்மை தான். இங்கு விடுதலைப் போராட்டம் முடியப் போகின்றது. விடுதலைப்புலிகளால் பலம் பொருந்திய அமைப்பாக செயற்பட முடியாது என்று தான் எல்லா ஊடகங்களும் செய்திகள் வெளியிட்டன.

ஆனால் எமது தேசியத்தலைவர் மிகவும் சாதுரியமாக நிதானமாக இந்த விடுதலைப் போராட்டத்தின் வெற்றி இலக்கை நோக்கி வழிநடத்தினார். மிகவும் வேதனையான, சோதனையான, அந்தக் கால கட்டத்தில் எமது போராளிகள் பல அர்ப்பணிப்புக்களைச் செய்தனர். அவர்களுக்கு எந்தவிதமான எதிர்பார்ப்புக்களும் இருக்கவில்லை.

ஒரு போராளி வீரச்சாவடைந்தால் அவனது வித்துடலின் அருகில் இருந்து அழுவதற்குக்கூட தாய், தந்தை, உறவுகள் இருக்க மாட்டார்கள். அந்த எதிர்பார்ப்புக் கூட இல்லாது எமது மண்ணை மீட்க வேண்டும். மக்கள் சந்தோஷமாக வாழவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் தம்மை அர்ப்பணித்தார்கள். எமது மக்கள் வடித்த கண்ணீர், பட்ட வேதனைகளை எந்த வரிகளிலும் அடக்க முடியாது. தமது கைகளில் அகப்பட்ட பொருட்களுடன் கால் போன போக்கில் நடந்த அந்த மக்களின் வேதனையை வார்த்தைகளில் சொல்ல முடியாது.

இந்த விடுதலைப் போராட்டத்தில் நாம் கொடுத்த விலைகள், செய்த அர்ப்பணிப்புக்கள், எம்முடைய வெற்றியை நோக்கிய பாதையில் முன் தள்ளியது. நாம் ஓயாத அலைகள் தாக்குதல்கள் மூலம் வன்னிப்பகுதிகளை மீட்டெடுத்தோம். இந்த வெற்றிகளுக்காக நாம் கொடுத்த விலைகள் நாம் யார் என்பதை உலகத்துக்குக் காட்டியது.

புலிகள் அழிந்து விட்டார்கள் என்று கூறிக் கொண்டிருந்தவர்கள் எல்லோரும் வாய்பொத்தி நின்றனர். உலகம் வன்னிக்கு எமது தலைவரைத் தேடி வந்தது. அப்போது தான் தெரிந்தது நாம் பலத்துடன் இருக்கிறோம் என்பது. நாம் எல்லோரும் கூறும் ஏ9 யாழ் - கண்டி வீதி எம்மைப் பொறுத்தவரையில் ஒரு சாதாரண பாதையல்ல. இந்த வீதி ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரர்களின் இரத்தத்தால் கழுவப்பட்டது. உங்கள் ஐயாயிரம் பிள்ளைகளின் தசைத்துண்டுகளால் திறக்கப்பட்டது இந்தவீதி.

இந்த வீதி வீதிக்கூடாகத் தான் நாம் சமாதானப் போராளிகளாக உங்களைச் சந்திக்க வந்துள்ளோம். கடலால் போனாம், கண்டி வீதியால் வந்தோம். நாம் இரத்த வெறி பிடித்தவர்களோ ஆயுத மேந்திய மனநோய் கொண்டவர்களோ அல்ல. சமாதானத்தையே நாம் விரும்புகின்றோம். நாம் உங்களின் பிள்ளைகள். ஆனால் நாம் போராளிகளாக மாறினோம்.

எம்மீது போர் திணிக்கப்பட்டது. போராடினால் தான் வாழ்வு என்ற கட்டத்தில் தான் நாம் போராடினோம். ஒரு போராளியைப் பொறுத்தவரையில் மிகவும் மென்மையான மனம் கொண்டவராகத் தான் இருக்கமுடியும். மற்றவரது துன்பங்களை சகிக்காது. நாம் போராளியாக மாற வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு மட்டுமே எழமுடியும்.

இன்று நாம் கைகளில் எதுவித ஆயுதங்களும் இல்லாமல் உங்களை நம்பியே வந்துள்ளோம். எமது விடுதலைப் போராட்டப் பாதையில் மாபெரும் அரசியல் சக்தியாக பரிணமித்து நிற்கின்றோம்.

தமிழன் என்று சொல்லிப் பயந்து வாழ்ந்த காலம் இருந்தது. ஆனால் இன்று தமிழன் என்று சொல்லி நிமிர்ந்து நிற்கின்றார்கள். அனைத்து மக்களும் ஒன்று திரண்டு பொங்குதமிழ் என்று பொங்கி நிற்கின்றனர். அண்மையில் ஆட்சி அமைந்துள்ள புதிய அரசுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துள்ளோம். இது சமாதானப் பேச்சுக்கான ஆரம்ப நடவடிக்கையாகும்.

நாம் போராட ஆரம்பித்தது எமது உரிமைகளுக்காகவே. சலுகைகளுக்காக அல்ல. எமக்கு அரசியல் பிரச்சனை இருக்கிறது. எமது பூர்வீக தாயகம், நாம் ஒரு தேசிய இனம். எமக்கு தன்னாட்சி உரிமை இருக்கிறது. இந்த அடிப்படை உரிமைகளை பெறத்தான் நாம் போராடி வருகின்றோம். போராட்டத்தை தொடங்கிய பிறகு தான் எம்மீது பயங்கரவாதத் தடைச்சட்டம், பொருளாதார தடை, மீன்பிடித்தடைச்சட்டம், அவசரகாலச் சட்டம் போன்றன போடப்பட்டன.

இடையே பல பேச்சுவார்த்தைகள் வந்திருக்கின்றன. போயிருக்கின்றன. இவை எதுவும் முன்னேறாமைக்குக் காரணம் அற்ப சொற்ப சலுகைகளைக் கொடுத்து எமது மக்களை திருப்திப்படுத்த அந்த அரசுகள் எண்ணியது தான். நீங்கள் பல பிரச்சனைகளை அனுபவித்துக் கொண்டிருக்கலாம். இந்தப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு மக்களாகிய உங்களிடமேயுள்ளது. நாங்கள் இடைக்கால நிர்வாகத்தை நடத்திக் கொண்டு தான் நிரந்தரமான தீர்வைப் பற்றிப் பேசுவோம். அப்போது தான் எமது தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை என்ற கோட்பாடுகள் முன்வைக்க பேச்சுக்கள் நடைபெறும். இவ்வாறு தமிழினி தெரிவித்தார்.



# 1995 இடப்பெயர்வு:

## தமிழ் மக்களைக் காப்பாற்றவே எம்முடன் அழைத்துச் சென்றோம்

## வட்டுக்கோட்டையில் புதுவை இரத்தினதுரை பேச்சு

1995ம் ஆண்டு நாம் அனைவரும் சந்தித்த இடம்பெயர்வு தொடர்பாக பலவித கருத்துக்கள். ஆனால் குடாநாட்டு தமிழ்மக்களைக் காப்பாற்றவே இடப்பெயர்வின் போது நம்முடன் அழைத்துச் சென்றோம்.

இவ்வாறு வட்டுக்கோட்டையில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றிய கவிஞரும் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளருமான புதுவை இரத்தினதுரை குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது

1995 ஆம் ஆண்டு நாம் அனைவரும் ஒரு மாபெரும் இடப்பெயர்வைச் சந்தித்தோம். அனைவரும் தென்மராட்சிக்குச் சென்றோம். அந்த இடப்பெயர்வு தொடர்பாக இன்றும் பலர் பலவிதமாகச் சொல்கின்றனர். நாம் எல்லோரும் ஒன்றாக இடம்பெயர்வதற்கு முக்கிய காரணம் 20 ஆயிரம் பேரைப் பலிகொண்டாவது யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற இராணுவத் தளபதியின் உத்தரவை நாம் அறிந்ததேயாகும். இதற்காகத் தான் நாம் மக்களை சற்று விலகி இருக்குமாறு கேட்டோமே தவிர, உங்களை நாங்கள் காவலர்களாக எங்களைச் சுற்றி வலயம் போட்டு அழைத்துச் செல்வதற்கல்ல. நாம் அழைத்துச் செல்வதாக இருந்தால் தென்மராட்சியில் இருந்து வன்னிக்கு வாருங்கள் என்று உத்தரவு போட்டிருப்போம். இதை நாம் செய்யவில்லை.

இதற்கு ஒரே காரணம் எமது உறவுகள் இங்கே தங்கி நின்றால் பலி கொள்ளப்படுவார்கள் என்பது தான். இதற்கு உதாரணம் செம்மணி புதைகுழிகள். மீண்டும் நீங்கள் இங்கு வந்தீர்கள். இராணுவமும் அவர்களுடன் இணைந்து செயற்பட்டவர்களும் இங்கு செய்த பெரும் தொண்டு உறவுகளை செம்மணியில் புதைத்தது தான்.

தென்மராட்சிக்குப் போய் ஆற ஆறி வந்தவர்களுக்கே இந்தக்கதியாக இருந்தால் அந்த இராணுவம் முன்னேறி வரும் போது நீங்கள் அகப்பட்டிருந்தால் நடந்திருக்கக் கூடியதைக் கற்பனை செய்து பாருங்கள். இதற்காகத் தான் எம் மக்களை இடம்பெயருமாறு நாம் கேட்டோம்.

நாம் வன்னிக்குப் போய் வளமான வாழ்வை அமைக்கவில்லை. ஐக்கியமும் தர்மமும் நீதியும் எம்பக்கம் இருந்ததால் நாம் இங்கு பெற்ற வெற்றியிலும் பார்க்க பலமடங்கு பெரிய பலத்துடன் வெற்றிகளைப் பெற்றோம். இன்று நாம் அரசியல் பணிகளைச் செய்வதற்காக இங்கு வந்திருக்கின்றோம். உண்மையில் இங்கு வருகையில் எனக்கு திருப்தியில்லை. நாம் நிமிர்ந்தவர்களாக வந்திருக்க வேண்டும்.

நாம் ஆயுதத்தைக் கைவிட்டு வரவில்லை. எதற்குமே அஞ்சாத உறுதி என்ற ஆயுதத்துடனும் எந்நேரமும் சாவைத் தழுவக்கூடிய சயனைட்குப்பிகளும் எம்மிடம் இருந்து அகற்றப்படவில்லை. சமாதானத்தின் மூலம் தீர்வு, இயல்பு வாழ்க்கை, உங்களுக்குக் கிடைக்குமானால் அதை ஏற்றுக் கொள்ள நாம் தயாராகவுள்ளோம். ஆனால் வழமை போன்று இதுவும் ஒன்பதாவது ஒப்பந்தமாக இருந்தால் எமது இலக்கைச் சென்றடைவதற்காக நாம் தொடர்ந்து பயணிப்போம். அதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. உண்மையில் சிங்கள மக்கள் நன்றாகப் புரிந்து கொண்டு விட்டார்கள். இந்த மண்ணில் அமைதியாக வாழ முடியும் என்ற செய்தியைத் தேர்தல் மூலம் அவர்கள் எமக்குத் தெரியப்படுத்தியுள்ளார்கள்.

எமது தலைவர் மாவீரர்தின உரையிலும் சமாதானத்தை நேசிப்பதாகவே செய்தி வெளியிட்டார். இன்றைய அரசு இதை ஏற்றுக் கொண்டுள்ளது. எமது பிள்ளைகளின் குருதியிலும் கண்ணீரிலும் வாழ்விலும் கிடைப்பது சமாதானத்தின் மூலம் எட்டுமாக இருந்தால் அதை உங்களுக்காக நாம் ஏற்றுக் கொள்ளுகின்றோம். சமாதானமும் விடுதலைக்காகவே. போரும் விடுதலைக்காகவே. எங்களுக்கு வேண்டும் விடுதலை. விடுதலைக்காக நாம் போரின் வழியில் நீண்டதூரம் நடந்தோம். தற்போது சமாதானப் பாதையிலும் நடந்த பார்க்க முற்பட்டுள்ளோம்.

விடுதலை என்பது நாமே எம்மை எழுதுகின்ற ஒரு தீர்ப்பு. ஒரு வயோதிபர் செத்தாலே ஒரு மாதம் நீங்கள் அழுவீர்கள். அந்தியேட்டி, ஆண்டுத்திவசம் எல்லாம் செய்வீர்கள். பாசம் இருக்கும். குடும்பத்தில் நாம் 17 ஆயிரம் பிள்ளைகளைப் பலிகொடுத்துள்ளோம். எமது வலிமையை நீங்களும் கொள்ள வேண்டும்.

இவ்வளவு விலை கொடுத்த பிறகும் நாம் இங்கு வந்தது அற்பசொற்ப சலுகைகளுக்காக அல்ல. நாங்கள் உங்களிடம் நிதி சேகரித்தது உண்மை. ஆனால் நாம் இங்கு நிதி சேகரித்தது ஆஸ்திரேலியாவில் அப்பிள் தோட்டம் வாங்கவில்லை. கொழும்பில் எங்களுக்கு வீடுகள் இல்லை. நாங்கள் உங்களிடம் கேட்பது இது தான். நீண்டகாலத்துக்கு இங்கு வீதிகள் சிறைப்பட்டு இருக்கிறது. நீண்ட காலத்துக்கு உங்களை இடைமறித்து அடையாளப்படுத்தும்படி எவரும் கேட்கக்கூடாது. நீண்டகாலத்திற்கு பத்து மணியுடன் திருவிழாவை முடியுங்கள் என்று கடிதம் வரக்கூடாது. அது ஒரு காலம் இருந்தது. மீண்டும் அந்தப் பொற்காலத்தைப் புதுப்பிப்போம். இவ்வாறு புதுவை இரத்தினதுரை குறிப்பிட்டார்.

# 'கிளிநொச்சிச் செய்தியாளர் மாநாட்டின் மூலமாக அரசியல் தீர்வுக்கான திறவுகோல் கிடைத்துள்ளது'



## பிரபாவின் பேட்டி குறித்து ரணில் பேட்டி

'தாய்லாந்துப் பேச்சுக்களில் இடைக்கால நிர்வாகம் பற்றிய யோசனையையே புலிகள் முன் வைப்பார்கள் எனத் தெரிகின்றது. ஆனால் நிகழ்ச்சி நிரல் தொடர்பாகவே நாம் முதலில் முடிவெடுக்க வேண்டும். அதனூடாகவே நாம் பேச்சுக்களைத் தொடரவேண்டும்'' என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார். கிளிநொச்சி செய்தியாளர் மாநாட்டில் தன் மீதான புலிகளின் புகழ்ச்சி தம் மீது சுமத்தப்படும் 'கௌரவமான சுமை' எனவும் தெரிவித்திருக்கின்றார்.

இந்தியாவுடன் - நோர்வே நல்லதொரு தொடர்பை ஏற்படுத்தி செயற்படுகின்றது. இந்நிலை தொடரவேண்டும். இதனால் சமாதான முயற்சிகளைப் பொறுத்தவரையில் இந்தியாவிற்கு எவ்வித செயற்பாடும் கிடையாது. ஆனால் பேச்சுக்கள் ஆரம்பித்த பின்னர் நிலைமை எவ்வாறு மாற்றமடையுமெனக் கூறமுடியாது. எது எப்படியிருப்பினும் இந்தியா தொடர்ந்து ஈடுபாடு காட்டி வருகின்றது. தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை அளிப்பதன் மூலம் நியாயமான தீர்வு வழங்கப்படுமானால் தனித்தமிழ் ஈழக்கோரிக்கையை கைவிடுவது தொடர்பில் யோசிக்கலாம் என புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அண்மையில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்திருப்பதன் மூலம் அரசியல் தீர்வுக்கான பாதையை கண்டுபிடிப்பதற்கான திறவுகோலைத் தெளிவுபடுத்தியுள்ளார் எனவும் கூறுகிறார்பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

இது விடயம் தொடர்பில் ரூபவாஹினியிலும் சிரச தொலைக்காட்சி சேவையிலும் அண்மையில் பிரதமர் அளித்த பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். அதன் தமிழ் வடிவம் இங்கு தரப்படுகின்றது:

கேள்வி:புலிகள் இயக்கத் தலைவர் அண்மையில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்துக்களில் முக்கியமானது எது எனக் கருதுகிறீர்கள்?

பதில்: 3 மணித்தியாலங்கள் இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் மூலம் அரசியல் தீர்வுக்கான பாதையை கண்டுபிடிக்க முடிந்துள்ளது. சுயநிர்ணய உரிமை என்பதன் அர்த்தத்தை புலிகள் இயக்கத்தினர் இதுவரையில் விபரித்திருக்கவில்லை. அதற்குப் பல்வேறுபட்ட காரணங்கள் உள்ளன. உள்நாட்டில் சுயநிர்ணய உரிமையுடனான ஆட்சிமுறையொன்றை ஏற்படுத்த முடியுமானால் ஈழக்கோரிக்கையை கைவிட்டு மாற்றுத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியுமென பிரபாகரன் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார். பத்திரிகையாளர் மாநாட்டின் முக்கிய பகுதி அது தான். ஒன்றுபட்ட இலங்கைக்குள் அவர்கள் வாழ விரும்புகிறார்கள் என்பது இதன் மூலம் புலனாகின்றது. இதுபோன்றதொரு தீர்வு எம்மால் கொடுக்கப்பட்டால் அதனை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்றே தெரிகிறது.

கேள்வி: இலங்கைக்குள் சுயநிர்ணய உரிமை மூலமான ஆட்சிமுறைக்கு பிரபாகரன் விருப்பம் தெரிவித்துள்ளதன் மூலம் எதிர்கால சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லலாம் என நினைக்கிறீர்களா?

பதில்: சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்கமுடியும். அதற்கான நடவடிக்கைகளை எம்மால் எடுக்கமுடியும். அவர்கள் கூறும் இறுதி நடவடிக்கை அதுவாக இருக்கலாம். சமாதானத்துக்குள் இரு வழிகளில் அவர்கள் பிரவேசிக்கின்றார்கள். முதலாவது இடைக்கால அரசு. அதன் பின்னர் இறுதியான அரசியல் தீர்வு. ஆனால் அவர்களுடனான பேச்சுக்களின்போது மாற்றுக் கருத்துக்கள் தொடர்பாகவும் எம்மால் ஆராயமுடியும்.

கேள்வி: சமாதனப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கு முன்னர் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீக்கவேண்டுமென்கிறார் பிரபாகரன். யுத்த நிறுத்த உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டு சமாதானச்சூழல் நிலவும் இத்தருணத்தில் புலிகள் இயக்கத் தடையுடன் முன்னோக்கிச் செல்வீர்களா?

பதில்:நான் பாராளுமன்றத்திலும் கூறினேன். தங்கள் இயக்கத்தின் தடையை நீக்கவேண்டுமென புலிகள் விடுக்கும் கோரிக்கையையும் இலங்கை சர்வதேச ரீதியில் எடுத்துள்ள நடவடிக்கையையும் சமநிலைப்படுத்த எவ்வாறு முடியும் என்பதை யோசித்து வருகின்றோம். புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் நடத்திய பத்திரிகையாளர் மாநாடு மூலம் உட்கார்ந்து இரு தரப்பும் பேசுவதற்கான பல்வேறு சமிக்ஞைகள் கிடைத்துள்ளன.

கேள்வி: இடைக்கால அரசு பற்றியே தாய்லாந்து பேச்சுக்களில் ஆராயப்படுமென பிரபாகரன் தெரிவித்துள்ளார். வட கிழக்கிற்கு இடைக்கால அரசொன்றை வழங்கவேண்டுமென நீங்கள் கூறி வந்துள்ளீர்கள். சகல கட்சிகளும் உள்ளடக்கப் பட்ட இடைக்கால நிர்வாகம் பற்றியேபுலிகள் கூறுகின்றனர். இது சாத்தியமாகுமென நீங்கள் நினைக்கின்றீர்களா?

பதில்:தாய்லாந்துப் பேச்சுக்களில் இடைக்கால நிர்வாகம் தொடர்பானகருத்துக்களையே புலிகள் முன் வைப்பார்களென தெரிகிறது. ஆனால் நிகழ்ச்சி நிரல் தொடர்பாகவே நாம் முதலில் முடிவெடுக்கவேண்டும். அதனூடாக முன்னேற வேண்டும். வட - கிழக்கில் சகல அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால நிர்வாகத்தைப்புலிகள் விரும்புவதை நாம் வரவேற்கிறோம். அவர்கள் வெளியிடும் சகல கருத்துக்களிலும் இடைக்கால நிர்வாகம் தொற்றி நிற்கிறது.

கேள்வி: பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றவுடன் நீங்கள் முதல் முதலாக இந்தியாவிற்கே சென்றீர்கள். இந்தியாவின் பங்களிப்பு இல்லாமல் நிரந்தரத் தீர்வு இல்லையென புலிகள் இயக்கமும் தெரிவிக்கின்றது. எனவே நோர்வேயின் மத்தியஸ்தத்திற்கு இடையில் நீங்கள் மீண்டும் இந்தியாவிற்குச்சென்று பங்களிப்புக்கான கோரிக்கை விடுப்பீர்களா?

பதில்: பிரச்னைக்கான தீர்வை எட்டுவதில் நோர்வே தொடர்ந்து உதவி வருகின்றது. அது தவிர இலங்கை அரசுடனும் புலிகள் இயக்கத்துடனும் நடத்தப்படும் பேச்சுக்கள் தொடர்பாக இந்திய அரசாங்கத்துடன் நோர்வே நல்லமுறையில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. இது தொடர்ந்து பேணப்படல் வேண்டும் என்பது எனது கருத்தாகும். இது தொடர்பில் இந்தியாவிற்கு எதுவித செயற்பாடும்கிடையாது. ஆனால் பேச்சுக்கள் நடைபெறும் போது எந்தவிதமான மாற்றங்கள் ஏற்படும் என என்னால் கூறமுடியாது. எது எப்படியெனினும் இந்தியா தொடர்ந்தும் ஈடுபட்டுக் கொண்டு தான் உள்ளது.

கேள்வி: சமாதானத்திற்காக உங்களை முழுமையாக ஈடுபடுத்தியுள்ளீர்களென புலிகள் இயக்கத்தினர் புகழ்ந்துள்ளனர். இது சமாதான முன்னெடுப்புக்களை அவசரப்படுத்துவதற்கான அழுத்தமா?

பதில்: ஆம்! அதனை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதுவொரு கௌரவமான சுமை. சகலருக்கும் சமாதானம் வேண்டுமென்பதாலேயே நான் அவ்வாறு கூறுகிறேன். ஆனால் இந்த இடைவெளியை எவ்வாறு நிரப்புவது. அனைவரது ஒத்துழைப்பும் இல்லாது இதனை செய்யமுடியாது.

கேள்வி: பேச்சுவார்த்தைகளுக்கு ஜனாதிபதி இடையூறு செய்யமாட்டார் என பிரபாகரன் கூறியிருக்கின்றார். அப்படி ஏதும் நிகழ்ந்தால் அதனை நீங்கள் தான் தீர்க்கவேண்டுமெனவும் கூறியுள்ளார். நீங்கள் எதிர்க்கட்சிகளுடன் நல்லுறவை பேணுவீர்களா? ஜனாதிபதி உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவாரா?

பதில்: சமாதானப் பேச்சுக்களுக்கு எதுவிதத்திலும் இடையூறு செய்வதில்லையென ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். இதுவரையிலும் அதுபோன்ற செயல்களில் அவர் ஈடுபடவில்லை. பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும்

(27ம் பக்கத் தொடர்ச்சி)

## நமது நோக்கு

## பிரதமர் ரணில் சமாளிப்பாரா?

சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் இரு பக்கங்களிலிருந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீது சுமைகள் தீவிர அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றது. புரிந்துணர்வு உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகளைப் பொறுத்தவரையில் பல விடயங்களில் முட்டுக்கட்டை நிலை ஏற்பட்டுள்ளது. அதேவேளையில் சமாதான முயற்சிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை சிங்கள தீவிரவாத அமைப்புக்கள் தீவிரப்படுத்தியிருக்கின்றன. ஜனாதிபதி சந்திரிகாவின் இந்திய விஜயமும் பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்கொள்ளவேண்டியுள்ள நெருக்கடிகளை இந்த நிலைமைகள் சுட்டிக்காட்டுகின்றன.

மே மாதம் நடுப்பகுதியில் நேரடிப்பேச்சுவார்த்தைகள் தாய்லாந்தில் ஆரம்பமாகும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அது ஜூன்மாதம் வரையில் ஒத்திவைக்கப்பட்டிருப்பது இந்த அழுத்தங்களின் பின்னணியில் தான். புரிந்துணர்வு உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பல நிபந்தனைகள் நிறைவேற்றப்படவில்லை. இவை அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்டிருக்கவேண்டும். இது தொடர்பாக வன்னி சென்ற நோர்வே தூதுக்குழுவிடம் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் சுட்டிக்காட்டியிருந்தார். அத்துடன் புலிகள்அமைப்பின் மீதான தடையைத் தளர்த்துவதிலும் அரசு எதிர்ப்புக்களை எதிர்கொள்கின்றது.

புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி பாடசாலைகள், மற்றும் மத வழிபாட்டுத் தலங்களிலிருந்து படையினர் வெளியேறியிருக்க வேண்டும். இருந்தபோதிலும் பெரும்பாலான வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பாடசாலைகளிலிருந்து இராணுவத்தினர் இன்னமும் நிலை கொண்டிருக்கின்றார்கள். சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பில் ஆலோசனைகளை நடத்துவதற்காக கடந்த வாரம் இலங்கை வந்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசனிடம் இது தொடர்பாகச் சுட்டிக்காட்டியுள்ள பிரபாகரன், புரிந்துணர்வு உடன்படிக்கையிலுள்ள அம்சங்களே நிறைவேற்றப்படாத நிலையில் சமாதானப் பேச்சுக்களுக்கு எப்படிச் செல்லமுடியும் எனக் கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

சமாதானப் பேச்சுக்களில் முழுமையாக ஈடுபடுவதற்கு அரசாங்கம் முற்படுகின்றபோதிலும் இராணுவத் தரப்பிலிருந்து சில நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியிருப்பதைத் தான் இச்சம்பவங்கள் உணர்த்துகின்றன. பிரபாகரன் தெரிவித்த ஆட்சேபனைகளை கண்காணிப்புக் குழுவிடமும் இலங்கை அரசாங்கத்திடமும் நோர்வே தூதுக்குழு தெரியப்படுத்தியிருக்கின்றது. இப்போது இப்பிரச்னைக்குத் தீர்வு காணவேண்டிய பொறுப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கைகளில் உள்ளது.

இதேவேளையில் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிராகவும் சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு ஆட்சேபனை தெரிவித்தும் பேரினவாத அமைப்புக்கள் தமது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளன.

சமாதான முயற்சிகளுக்கு எதிராக சிங்கள மக்களை ஒருங்கிணைக்கும் நோக்கத்துடனும் நாடு தழுவிய ரீதியில் போராட்டங்களை நடத்துவதற்கு சிஹல உறுமைய திட்டமிட்டுள்ளது. வடக்கு கிழக்கிலிருந்து இடம் பெயர்ந்த சிங்களவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான அமைப்பு ஒன்றையும் சிஹல உறுமைய அமைத்திருக்கின்றது. இவற்றின் மூலமாகவும் சமாதான முயற்சிகளுக்கு எதிரான அழுத்தங்கள் கொடுக்கப்படவுள்ளன.

இதனை விட இலங்கை அரசியலில் மூன்றாவது சக்தியாகவுள்ள ஜேவிபி யும் மாபெரும் பேரணி ஒன்றை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது. புலிகள் மீதான தடை நீக்கப்படுவதற்கும் இடைக்கால நிர்வாகத்தை வழங்குவதற்கும் எதிர்ப்புத் தெரிவித்துமே இந்த ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடத்தப்படவுள்ளன. ஜேவிபி, சிஹல உறுமைய போன்ற இனவாதக் கட்சிகள் தான் இவ்வாறான பிரச்சாரத்தை முன்னெடுக்கின்றன என்றால் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றும் இப்போது இதற்காக அமைக்கப்பட்டிருக்கின்றது. சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்களின் குழு என்ற பெயரில் செயற்படத்தொடங்கியுள்ள இக்குழுவும் சமாதான முயற்சிகளுக்கு எதிரான கடுமையான நிலைப்பாட்டை எடுத்திருக்கின்றது.

இவற்றின் மூலமாக சமாதான முயற்சிகளுக்கு எதிராக விடுக்கப்பட்டுள்ள சவால் எந்தளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது தெரியவில்லை. இருந்தாலும் இதனை பிரதமர் ரணில் எப்படிச் சமாளிக்கப்போகின்றார்? சமாதான முயற்சிகளின் வெற்றி இக்கேள்விக்கான பதிலிலேயே தங்கியுள்ளது.

# அன்டன் பாலசிங்கம் தம்பதியர் பயணித்த விமானத்தைத் தாக்க முற்பட்ட ஸ்ரீலங்கா படை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச மட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும். லண்டனிலிருந்து செயற்பட்டு யுத்தநிறுத்தம் ஒன்று ஏற்படுவதற்கும் பெரும் பங்களிப்புச் செய்த கலாநிதி பாலசிங்கம் சமாதானத்துக்கான முயற்சிகளை மேலும் ஊக்குவிக்கும் விதத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பிரதேசம் சென்று இயக்கத்தின் தலைவரான மேதகு பிரபாகரன் அவர்களை நேரடியாகச் சந்தித்துக் கலந்தாலோசித்து அடுத்தகட்ட நடவடிக்கைளுக்கு அடித்தளம் போட உத்தேசித்திருந்தார்.

இதேவேளை கலாநிதி பாலசிங்கம் உடல நிலை காரணமாகவும் பாதுகாப்பு காரணமாகவும் சில விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இலங்கைத்தீவில் உள்ள அத்தனை விமான நிலையங்களிலும் சிங்கள முப்படைகளின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிரிவினர் நிலை கொண்டிருந்தமையால் அத்தகைய விமான நிலையங்கள் ஊடாக கலாநிதி பாலசிங்கம் இலங்கை திரும்ப விரும்பவில்லை.

ஏனெனில் சமாதானத்தீர்ப்பை விரும்பாத சிங்களப் பேரினவாத ஆக்கிரமிப்புப்படையினரில் ஒரு சாரார் சதி முயற்சியில் ஈடுபட்டு கலாநிதி பாலசிங்கத்துக்கு ஊறுவிளைவிக்கக்கூடும் என்ற நியாயமான சந்தேகம் விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடத்திற்கு இருந்தது.

அதேசமயம் விடுதலைப்புலிகள் மீதான தடை இன்னும் நீக்கப்படாததால் ஒரு தடைசெய்யப்பட்ட அமைப்பின் பிரதிநிதி என்ற முறையில் ஒரு புற்றவாளி போல் தென்னிலங்கை ஊடாக அரசாங்கம் சலுகையுடன் நாடு திரும்பவும் கலாநிதி பாலசிஙகம் விரும்பவில்லை.

இதனால் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மத்திய கிழக்கின் துபாய் ஊடாக மாலைதீவுக்குப் பயணிகள் விமானத்தில் சென்ற கலாநிதி பாலசிங்கம் அங்கிருந்து விசேட விமானத்தில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரணைமடு நீரேரியில் சென்று இறங்கினார்.

மேதகு பிரபாகரன் மற்றும் திருமதி மதிவதனி பிரபாகரன். மற்றும் விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகள் பலர் நேராக இரணைமடு சென்றிருந்து கலாநிதி பாலசிங்கம் தம்பதியரை வரவேற்றனர்.

வன்னி சென்ற கலாநிதி பாலசிங்கம் நோர்வே அரசாங்கப் பிரதிநிதிகள். அதிகாரிகள். கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் ஆகியோருடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதில் தலைவர் மேதகு பிரபாகரனுக்குப் பக்கபலமாக இருந்து செயற்பட்டார்.

தமிழர் தேசியக்கூட்டமைப்பு.முஸ்லிம் காங்கிரஸ். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் தலைவர்களுடன் தலைவர் பிரபாகரன் வன்னியில் நடத்திய கலந்துரையாடல்களிலும் ஏற்படுத்திக் கொண்ட இணக்கங்களிலும் முக்கிய பங்கு வகித்தார்.

இது தவிர மேதகு பிரபாகரன் நடத்திய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஊடகவியலாளர் சந்திப்பிலும் அவருடன் இணைவாகக் கலந்து கொண்டு தத்துவார்த்த விரிவாக்க. விளக்கங்களுடன் மொழிபெயர்ப்புச் செய்தும் கலாநிதி பாலசிங்கம் சிறப்பாகச் செயற்பட்டார்.

இச்செயற்பாடுகள் மூலம் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் கலாநிதி பாலசிங்கம் வகிக்கும் முக்கியத்துவம் சகல தரப்பினராலும் குறிப்பாகச் சிங்கள ஆக்கிரமிப்புப் படைத்தரப்பால் உணரப்பட்டது.

இதேவேளை உடல்நலம் குன்றிய கலாநிதி பாலசிங்கத்திற்கு ஊறுதுணையாக விளங்குவதுடன் அனைத்துப் பேச்சுவார்த்தைகளிலும் உடனிருந்து கௌரவ செயலாளராகக் கடமையாற்றி வந்துள்ள திருமதி அடேல் பாலசிங்கத்தின் முக்கியத்துவமும் தற்போது தெளிவாகப் புலப்பட்டுள்ளது.

இக்காரணங்களால் சமாதானச் சூழலைச் சீர்குலைக்க விரும்பும் சிங்களப் பேரினவாதச் சக்திகள் குறிப்பாக ஆயுதப்படை மட்டத்தில் உள்ளவர்கள் கலாநிதி பாலசிங்கம் தம்பதியரில் பெருங்கோபமுற்றிருந்தனர்.

இவர்கள் இங்கிலாந்திற்குத் திரும்பிச் செல்லும் வேளையில் ஏதாவது ஒருவகையில் இவர்கள் உயிருக்கு ஊறு விளைவித்து விட்டு "விபத்து" நடந்து விட்டது என்று நொண்டிச்சமாதானம் கூறலாம் என்று சதித்திட்டம் வரைந்ததாக நம்பப்படுகின்றது.

ஏதாவதொரு "விபத்து" சம்பவத்தில் கலாநிதி பாலசிங்கம் தம்பதியருக்கு ஆபத்து நேர்ந்து விட்டால் தமிழர் தரப்பிலிருந்து கண்டனக்குரல் எழுப்பினாலும் "காரியம்" முடிந்து விடும் தானே என்ற நினைப்பு சிங்களத்தரப்புக்கு.

அத்துடன் கலாநிதி பாலசிங்கம் தம்பதியர்க்கு ஆபத்து நேர்ந்தால் விடுதலைப்புலிகள் தலைவர் பெரும் சீற்றம் கொள்வார். இதன் விளைவாக போர் மூண்டு சமாதான சூழல் கெட்டுவிடும். மீண்டும் போர் என்ற நிலைமை ஏற்படும் போது தற்போதைய சூழ்நிலை மாறி விடும். புதிய போர்ச்சூழலில் கலாநிதி பாலசிங்கம் "விபத்து" மறக்கப்படும் என்ற கணக்கிலேயே இச்சதித்திட்டம் வகுக்கப்பட்டது என்று கருதக்கூடியதாக உள்ளது.

மார்ச் மாதம் 25ஆம்திகதி இரணைமடு வந்திறங்கிய கலாநிதி பாலசிங்கம் தம்பதியர் சரியாக முப்பது நாட்களின் பின் மீண்டும் இரணைமடுவில் இருந்து லண்டன் நோக்கிய பயணத்தை ஆரம்பித்தனர்.

கனேடிய நாட்டவரான விமானி. உதவி விமானி. நோர்வேஜிய தூதரக அதிகாரி மற்றும் பாலசிங்கம் தம்பதியர் என ஐந்து பேர் மேற்படி சீபிளேன் விமானத்தில் ஏறி மாலைதீவு நோக்கிய பயணத்தை ஆரம்பித்தனர்.

இதற்கு முன்னர் நோர்வே மூலம் ரணில்விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்திற்கு தகவல் அறிவிக்கப்பட்டது. குடிவரவு அதிகாரிகளை அனுப்பி வன்னியில் வைத்து கடவுச்சீட்டுக்களில் வெளிக் கிளம்புவதற்கான முத்திரையும் பொறிக்கப்பட்டது.

அத்துடன் விமானம் பயணிக்கும் வேளையில் வடக்கு கிழக்கு வான்பரப்பில் சிங்கள விமானப்படையின் விமானங்கள் பறக்க மாட்டாது என்ற உறுதிமொழியும் வழங்கப்பட்டது.

கலாநிதி பாலசிங்கம் தம்பதியரை ஏற்றிச் செல்ல மாலைதீவில் இருந்து வந்த சீபிளேன் விமானம் முதலில் இலங்கைத்தீவின் தென் பகுதியைக் கடந்து பிக் மேற்குப்புறக் கடல் ஓரமாகப் பறந்த மன்னார் பகுதியில் வைத்து உட்பரப்பில் நுழைந்து இரணைமடவில் இறங்கியது.

பின் பாலசிங்கம் தம்பதியருடன் கிழக்குப் புறமாகப் பறந்து முல்லைத்தீவுக் கரையோரமாகப் பறந்து கிழக்குக்கடற்பரப்பில் தெற்கு நோக்கிச் சென்றது.

இவ்வாறு விமானம் செல்லும் போது திருகோணமலைக் கடற்பரப்பில் ஒரு பரபரப்பான சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

விடுதலைப்புலி முக்கியஸ்தர்களைக் கொண்ட சில படகுகளை சிங்களக் கடற்படை கடற்பரப்பில் தடுத்து நிறுத்தி வைத்துக் கொண்டிருந்தது.

எக்காரணம் கொண்டும் மோதல் ஈடுபடக்கூடாது என்று விடுதலைப்புலிகள் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் தன் போராளிகளுக்கு உத்தரவு வழங்கியிருந்தார். தலைவரின் கட்டளையை மதித்து நடக்கும் போராளிகளும் அமைதி காத்த வண்ணம் நடுக்கடலில் தரித்து நின்றனர்.

இக்கட்டத்தில் கலாநிதி பாலசிங்கம் தம்பதியரை ஏற்றிச் சென்று கொண்டிருந்த விமானம் தாழப்பறந்தபடி வந்து கொண்டிருந்தது.

உடனே கடற்படைக்கப்பல்கள் தம்மிடம் இருந்த சுடுகலன்களை வான் நோக்கி திருப்பி விமானத்தைக் குறி வைத்து குண்டுகளை ஏவினர்.

ஆபத்தை உணர்ந்த விமானமும் உடனே உயரமாக எழுந்த ஆழ்கடல் மேல்பரப்பு நோக்கியும் வேகத்தை அதிகரித்துச் சென்று இக்கட்டிலிருந்து விடுபட்டது. ஆனால் ஒரு சில நிமிடங்களிலேயே திருகோணமலை சீனன் குடா விமானத்தளத்திலிருந்து இரண்டு கிபீர் இஸ்ரேலியப் போர் விமானங்கள் சீறிக்கிளம்பிக் கொண்டு வான்பரப்பை வல்லூறுகள் போல் வட்டமிட்டன.

பாலசிங்கம் தம்பதியர் சென்ற விமானத்தை குறி வைத்து போர்விமானங்கள் தேடுதல் வேட்டை நடத்திய போதும் கனடிய விமானிகளின் சமயோசித சாமர்த்தியத்துடன் கூடிய துரிதகதியில் தூரச்சென்று பயணத்தைத் தொடர்ந்ததால் விமானம் தப்பிச் சென்று விட்டது.

இவ்விடயம் பற்றி விடுதலைப்புலித்தரப்பு கொழும்ப அரசாங்கத்தை கேள்வி கேட்க முன்னர் அனுசரணையாளர் நாடான நோர்வே ராஜதந்திர முறைமைகளுக்குட்பட்ட நிலையில் வினா எழுப்பியுள்ளதாக அறியப்படுகின்றது.

நோர்வே அதிகாரி ஒருவர் விமானத்தில் இருந்தபடியால் உடனடியாகவே நோர்வே இவ்விடயக்கில் கலையிட்டுக் கேள்வி எழுப்பியது. அதற்குப் பதிலாகச் சிங்களதரப்பு கடல் பரப்பில் நின்றிருந்த கடற்படைக் கப்பல்களை குண்டுவீசித் தாக்க விடுதலைப் புலிகளின் வான்புலிப்பிரிவு வந்து கொண்டிருந்ததாகத் தாம் நினைத்தபடியால் தான் தாக்குதல நடத்தியதாகவும் பின்னர் வான் படையை வரவழைத்துத் தேடுதல் வேட்டையை நடத்தியதாகவும் கடற்படை கூறியுள்ளது.

அதேவேளை பாலசிங்கம் விமானம் மேற்குப் புறத்தில் வந்தது போலவே செல்லும் என்று தான் கருதியதாக கிழக்குப்பகுதியில் கண்ட விமானம் பாலசிங்கம் தம்பதியர் பயணித்த விமானம் என்று தாம் எண்ணவில்லை என்றும் நியாயம் தெரிவிக்கின்றது.

பாலசிங்கம் தம்பதியரைத் தற்செயல் விபத்து என்ற போர்வையில் படுகொலை செய்வதற்கான சதிமுயற்சி இதுவென்று சந்தேகிக்கும் விடுதலைப்புலிகள் தரப்பு நோர்வே ஊடாக இது பற்றிய பூரண விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கூறியுள்ளனர்.




BUYING – SELLING

NADA G. NADARAJAH B.V.Se

*Sales Representative*
*Gold Award Winner 2000*

Bus: (416) 293-5093
Fax: (416) 293-5237
Res: (905) 472-8703

- வீடுகள் வாங்க அல்லது விற்க,
- அதற்கான இலவச ஆலோசனைகள் பெற்றிட,
- குறைவான வட்டி விகிதத்தில் அடமான ஒழுங்குகள் செய்திட

இன்றே அழையுங்கள்

நடா. ஜி. நடராசா

HOMELIFE

HomeLife Metro Realty Inc.
*Real Estate Broker*

5200 Finch Ave. East,
Suite 206, Scarborough,
ON M1S 4Z4

# மக்கள் எழுச்சியைக்கண்டு கலக்கமடையும் படையினர்

## படையினரின் கெடுபிடிகள் திடீரென்று அதிகரிப்பு!



**யாழ். நகரிலிருந்து கதிரவன்**

யாழ்ப்பாண வரலாற்றில் இடம்பெறக் கூடிய முக்கியமானதும் பிரமாண்டமானது மான நிகழ்வாக பொங்கு தமிழ் நிகழ்வு நடந்தேறியிருக்கின்றது. கடந்த பதினேழாம் திகதியன்று இப்பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

ஆறு வருடங்களுக்கு முன்னர் அரச படைகளினால் யாழ்ப்பாண மண் ஆக்கிரமிக்கப் பட்டதைத் தொடர்ந்து மக்களின் உரிமைகள் நசுக்கப்பட்டிருந்தமை உலகமே அறிந்த விடயம் தான்.

இந்தக் காலகட்டத்தில் மக்கள் பெரியளவில் ஒன்று கூடுவதற்கு பல்வேறு தடைகளைப் படையினர் போட்டு வைத்திருந்தனர். இப்படிப்பட்டதொரு நெருக்கடியான கால கட்டத்தில் தான் யாழ். பல்கலைக்கழக சமூகத்தினால் தமிழ் மக்களின் அபிலாஷைகளை சர்வதேசசமூகத்துக்கு வெளிக்காட்டும் வகையிலான பொங்கு தமிழ் எழுச்சி முன்னெடுக்கப்பட்டது.

2001 ஆம் ஆண்டு ஜனவரி 17 ஆம் திகதி பெரியளவில் பொதுமக்களை அணி திரட்டி தமிழரின் அபிலாஷைகளை வெளிக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்தது. எனினும் கடைசி நேரத்தில் அரச படைகளின் மிரட்டல் காரணமாக ஆயுதப்படைகளின் முன்பாக நிராயுத பாணிகளான மக்களை முன்னிறுத்துவதை தவிர்த்துக் கொண்டு பல்கலைக்கழக சமூகமே இப்பொங்கு தமிழ் நிகழ்வினை நடத்தி அபிலாஷைகளை வெளிக்கொணர்ந்தது.

அந்தப் பொங்கு தமிழ் எழுச்சி இன்று பலமாற்றங்களுக்கும் காரணமாகியிருக்கின்றது. அது மக்கள் எழுச்சியாக மாற்றம் கண்டிருக்கின்றது. இதனை வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார் என பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்து கொண்டு தமது அரசியல் அபிலாஷைகளை உலகிற்கு வெளிப்படுத்திய இலட்சக்கணக்கான மக்களின் பங்கேற்பு உறுதி செய்திருக்கின்றது.

படைகளின் கெடுபிடிகளால் மக்களை அணி திரட்டாமல் மாணவர்கள், பல்கலைக்கழக ஆசிரியர் மட்டங்களிலேயே நடத்தப்பட்ட பொங்கு தமிழ் நிகழ்வில் பொதுமக்களையும் அணி திரட்டி அபிலாஷைகளை வெளிக் காட்டும் கனவு கடந்த வாரம் நனவாகியது. அலைகடலெனத் திரண்டு வந்த ஆயிரமாயிரம் பேர் பேரணியாக வந்து நிகழ்வில் பங்கேற்றார்கள். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானம் பொதுமக்களால் நிரம்பிக் கிடந்தது.

பொங்கு தமிழ் எழுச்சி கீதம் இசைக்கப்பட்டு சுதந்திரச் சுடர் ஏற்றப்பட்டதையடுத்து மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து பொங்கு தமிழ்ப்பிரகடனம் வாசிக்கப்பட நிகழ்வில் பங்கேற்ற அனைவரும் உறுதியெடுத்துக் கொண்டனர். பிரகடனத்தில் தமிழ் மக்களின் பிரச்னைக்கு சமாதான வழியில் தீர்வு காணப்படுவதற்கான விருப்பை வெளிப்படுத்தியதுடன் தமிழரின் அபிலாஷைகளான மரபுவழித் தாயகம் தேசியம், சுயநிர்ணய உரிமை என்பன அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதும் வலியுறுத்தப் பட்டிருந்தது.

அத்துடன் தமிழர்கள் சிங்கள மக்களின் உரிமை களைத் தட்டிப் பறிக்க வில்லை என்பதைச்சுட்டிக்காட்ட நாம் எமது உரிமைகளையே கேட்கிறோம். இதற்கு சிங்கள சகோதரர்கள் ஆதரவு தர வேண்டும் என்றும் தாயகப்பிரதேசத்தில் சிங்களப் படைகளின் இருப்பு எமது வாழ்வை பாதிப்பதால் படைகள் இங்கிருந்து விலக்கப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டது.

கடைசியாக எமது அபிலாஷைகளை வென்றெடுக்கும் நோக்கில் செயற்படும் விடுதலைப் புலிகளுடன் அனைவரும் ஒன்றுபட்ட சக்தியாக இணைந்து கொள்கிறோம் என அப்பிரகடனத்தின் மூலம் அனைவரும் உறுதியெடுத்துக் கொண்டனர்.

இதையடுத்து பிரமுகர்களின் உரை நிகழ்த்தப் பட்டது. அரசியல் கட்சிகளின் சார்பிலும் பொதுஅமைப்புக்களின் சார்பிலும் பல்கலைக் கழகங்களின் சார்பிலும் பலர் உரை நிகழ்த்தினர். இந்த எழுச்சி நிகழ்வில் முக்கியமான அம்சமாக இருந்தது யாதெனில் நிகழ்வில் கலந்து கொள்வதற்கு வன்னியில் இருந்து வந்திருந்த விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் உரையாற்றியதேயாகும்.

கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையும் தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினியும் நிகழ்வில் சிறப்புரைகள் நிகழ்த்தியிருந்தனர். ஆறு வருடங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்து மக்களின் முன்பாக வந்து நின்று உரை நிகழ்த்தியபோது புலிகளின் பிரமுகர்கள் கண்கலங்கி உணர்ச்சிவசப் பட்டவர்களாக காணப்பட்டனர்.

புதுவை இரத்தின துரையின் உரையில் பல முக்கியமான விடயங்கள் எடுத்துரைக்கப்பட்டிருந்தன. இடைக்கால நிர்வாகத்தைப் பொறுப்பேற்கவுள்ளதாகவும் இதை திறம்பட நடத்துவதற்குத் தேவையான ஆளணி வளத்தை யாழ்ப்பாண இளைஞர், யுவதிகள் தந்துதவவேண்டுமென்ற கோரிக்கை முக்கியமானது.

தமிழரின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வொன்றைத் தர வேண்டியது அரசின் கடமை என்றும் இதன்மூலம் தமிழர் பிரச்னைக்குத் தீர்வு காண முடியும் என்பதனையும் அவர் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டிருந்தார்.

கடந்த காலங்களில் சிங்கள அரசாங்கங்கள் எமது மக்களுக்குச் செய்த அனைத்து அட்டூழியங்களையும் மறந்து மன்னித்து விடுகின்றோம். சமாதானத்தின் மூலம் பிரச்னைகளுக்குத் தீர்வு காண கடைசிச் சந்தர்ப்பம் தருகின்றோம். இப்போதைய அரசாங்கத்தை நாம் உறுதியாகவே நம்புகின்றோம். பிரச்னைக்குத் தீர்வைத் தரும் என்று சமாதானத்தை உறுதியாக வரவேற்கும் வகையிலும் அரசாங்கம் தொடர்பான நம்பிக்கையை வெளிக்காட்டும் வகையிலும் புதுவை இரத்தின துரை உரையாற்றிருந்தார்.

மேலும் கட்டுநாயக்கா வான்படைத்தளம் மீதான தாக்குதலைத் தாமே செய்ததாக பகிரங்கமாக அறிவித்த அவர் இது தொடர்பான பாடல் ஒலிப் பதிவு நாடா வீடியோவில் வெளியிடப்படவுள்ளதாகவும் பலத்த கரகோசத்தின் மத்தியில் தகவல் வெளியிட்டார். மிகச் சிறந்த தலைவரின் வழியில் தமிழ்க்கட்சிகள் கூட்டமைப்பாக அணி திரண்டிருக்கும் நிலையில் பொங்கு தமிழ் எழுச்சியில் பங்கேற்றுள்ள மக்கள் எழுச்சியின் மூலம் எமக்கு உரிமைகளைப் பெற்றுக் கொள்ள வாய்ப்புக்கிட்டும்.

இந்த எழுச்சியே யாழ்ப்பாணத்தில் உள்ள தடைகளும் காவலரண்களும் முன்னரண்களும் தகர்க்கப்படுவதற்குப் போதுமானவை எனக் கூறி எமது உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கில் அனைவரும் இணைந்து நிற்பதற்கு நன்றி கூறி விடைபெற்றார்.

அறுபதாயிரத்துக்கும் அதிகமான பொது மக்கள் அணி திரண்டு அபிலாஷைகளை வெளியிட்ட நிகழ்வு மாலை நான்கு மணி முதல் ஏழுமணிக்குப் பின்னர் நிறைவு பெற்றிருந்தது.

தமிழரின் வரலாற்றில் இப்பொங்கு தமிழ் முக்கியமானதொன்றாகக் கருதப்படுகின்றது. நிகழ்வில் புலிகளின் பிரமுகர்கள் உரையாற்றும்போது மக்கள் உணர்ச்சி வசப்பட்டுக் கைதட்டி வரவேற்புக் கொடுத்தபடி இருந்ததையும் காணமுடிந்தது. மொத்தத்தில் பல்கலைக்கழக சமூகத்தின் கனவு ஒன்று நனவாகியது. மக்களின் எழுச்சியும் அபிலாஷைகளும் சர்வதேச சமூகத்துக்கு சென்றடைந்திருக்கின்றது. இனிமேல் தமிழ் மக்களுக்கு நியாயமானதும் நிரந்தரமானதுமான தீர்வு ஒன்று சமாதான வழிமுறை மூலம் வழங்கவேண்டியது அனைத்துத் தரப்பினரதும் கடமையாகும். சிங்கள அரசோ சர்வதேச சமூகமோ இதைத் தட்டிக் கழிக்க முயலுமானால் அது ஆபத்தானதாகவே அமையும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களே எச்சரித்துள்ள நிலையில் புலிகளின் நிலைப்பாடு எத்தகையதாக இருக்கும் எனச் சொல்லிக் கொண்டிருக்கத் தேவையில்லை.

பொங்குதமிழ் நிகழ்வில் அறுபதாயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் தலைவர் பிரபாகரனின்படங்களைத் தாங்கியபடி உரிமைக் கோசம் எழுப்பிச் சென்ற வழிகளில் படையினர் எவரையும் காணமுடிவில்லை. வீதிகளில் பொலிசார் காவல் கடமையில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் எவரிடமு ஆயுதம் இருக்கவில்லை. ஓரமாக நின்று அவர்கள் பார்த்துக் கொண்டிரு ந்தனரே தவிர ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதை அவதானிக்க முடிய வில்லை.

அதேவேளை படையினர் இந்த பொங்கு தமிழ் நிகழ்வினால் குழப்பமடைந்து போயிருக்கின்றார்கள் என்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்து கொண்டு விட்டுத் திரும்பிய மக்கள் மீதும் நிகழ்வின் பின்னரும் பொதுமக்கள் மீதான இராணுவக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளது. படையினர் திடீரெனக் கெடுபிடிகளை அதிகரித்துள்ளதற்கு தமிழ் மக்களின் எழுச்சி குறித்த அச்சமே காரணம் எனக் கருதப்படுகின்றது.

பொங்கு தமிழ் மற்றும் புலிகளை வரவேற்கக் கூடிய சனத்திரள் என்பனவற்றைக் கண்டு படையினர் திரளத் தொடங்கியிருக்கின்றனர். அவர்கள் யாழ்ப்பாண மக்கள் மீது ஆத்திரம் கொண்டுள்ளனர் என்பதையும் உணர முடிகின்றது. இதன் காரணமாகவே எப்படியாவது பொதுமக்களைச் சிரமப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் செயற்படத் தொடங்கியிருக்கின்றனர்.

புரிந்துணர்வு உடன்பாட்டில் யாழ்ப்பாணக்குடாநாட்டில் முகமாலை வீதியில் சோதனை தடைமுகாம் அமையும் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் பிரதேச சோதனைநிலையங்கள் தொடர்ந்து பொது மக்கள் மீது கெடுபிடிகளைக் கட்டவிழ்த்து விட்டிருப்பது உடன்பாட்டு மீறலாகவே கருதப்படவேண்டியிருக்கின்றது.

வல்வையிலும் அல்லைப்பிட்டியிலும் கடற்படையினரும் இராணுவத்தினரும் மக்களை கடுமையாக துன்புறுத்துகின்றனர். முன்னரிலும் பார்க்க அதிகமான சோதனைக் கெடுபிடிகளுக்கு மக்கள் முகம் கொடுக்க வேண்டியிருப்பது பலருக்கும் ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

தமிழ் மக்கள் கௌரவமான - சமாதானத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஆனால் படையினரின் நடவடிக்கைகள் கௌரவமான வாழ்வு, நீதியான தீர்வு என்பன குறித்து நம்பிக்கை கொள்ளமுடியாத நிலையைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றது.

எல்லையில் பொங்கு தமிழ் நிகழ்வுக்குப் பின்னர் பழைய நிலையைப் போலவே பயணிகள் சோதனையிடப்பட்டு வாகனங்களில் இருந்து கீழே இறங்கி சிறிது தூரம் நடந்து செல்ல பணிக்கப்படுகின்றது.

சோதனையிடப்படாத சந்தர்ப்பங்களிலும் கூட பயணிகள் தமக்கு முன்பாக நடந்து செல்லவேண்டும் எனப் படையினர் பணிப்பது இன்னமும் அவர்கள் தமிழ் மக்களை அடிமை கொள்ளும் மனப்போக்கில் இருந்து மாறவில்லை என்பதையே புலப்படுத்துகின்றது.

இதேபோல அல்லைப்பிட்டியில் சமீப காலமாக அனைத்துப் பயணிகளையும் வாகனத்தில் இருந்து கீழிறங்கி நடந்து செல்லப் பணிக்கப்படுகின்றது. சண்டை நடந்த சமயத்தில் கூட இப்படி கெடுபிடிகள் காட்டப்

(27ம் பக்கம் பார்க்க)

# தீவுப்பகுதிக்கு விடுதலைப்புலிகள் வருவதைத் தடுக்க
# ஸ்ரீலங்காகடற்படை – ஈ.பி.டி.பி. கூட்டுச்சதி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்லலாம் என்பது யுத்தநிறுத்த ஒப்பந்த விதியாகும். இதன்படி விடுதலைப்புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவைச் சேர்ந்தவர்கள் பல்வேறு தமிழ்மாவட்டங்களுக்குச் சென்று அரசியல் பணிகளைத் தொடங்கியுள்ளனர்.

தமிழ்மக்களும் பெரும் மகிழ்ச்சியுடன் விடுதலைப்புலிகளை வரவேற்றும் புலிகள் அரசியல் பணிமனைகள் அமைத்துச் செயற்பட பூரண ஒத்துழைப்பு வழங்குகின்றனர்.

இதேவேளை யுத்தநிறுத்த ஒப்பந்த விதிகளின் கீழ் சில விசேட சந்தர்ப்பங்களுக்காக விடுதலைப்புலிப் போராளிகள் தனிப்பட்ட காரணங்களுக்காக இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்ல அனுமதியுண்டு.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் குடும்பத்தவர்களைக் கொண்டபோராளிகள் இரண்டு மாதத்துக்கு ஒருமுறை அங்கு சென்று நான்கு நாட்கள் தங்கி வர ஏற்பாடுகள் உண்டு. ஆயினும் ஆயுதமற்ற நிலையில் சம்பந்தப்பட்ட இராணுவக் கட்டுப்பாட்டதிகாரியின் முன் அனுமதி பெற்றே இவ்வாறு செய்ய வேண்டும்.

இதேவேளை குடும்பத்தவர்களின் மரணம், திருமணம், கவலைக்கிடமான சுகவீனம், பிறப்புக்கள், போன்ற விசேட காரணங்களுக்கு எந்நேரமும் வேண்டுமானாலும் புலிப் போராளிகள் இராணுவ அனுமதியுடன் செல்லலாம்.

யுத்தநிறுத்த விதிகளின்படி விடுதலைப்புலிகள் அரசியல் நடவடிக்கைகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சீராயும் சிறப்பாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆயினும் யாழ்ப்பாண மாவட்டத்தில் மாத்திரம் இச் செயற்பாடுகளுக்கு விரோதமாக யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்கே குந்தகமான முறையில் விரும்பத்தகாத திருப்பம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

பாப்பா, இளம்பரிதி ஆகிய சிரேஷ்ட விடுதலைப்புலித் தலைமைப் போராளிகளின் மேற்பார்வையின் கீழேயே யாழ்ப்பாணக் குடாநாட்டில் அரசியல் பணிகள் நடைபெற்று வருகின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டை புவியியல் ரீதியாக இணைக்காவிட்டாலும் கூட யாழ்ப்பாண மாவட்டத்தில் பின்னிப் பிணைந்த அம்சமாகவும் பொலிவுடனும் வலியுடனும் நிகழ்வது தீவுப்பகுதியாகும்.

மக்கள் குடியிருக்கின்ற 13 பிரதான தீவுகளில் காரைநகர் தவிர்ந்த ஏனையவை தனித்தேர்தல் பிரிவுத் தொகுதியான காவலூர் எனும் ஊர்காவற்றுறையாக விளங்குகின்றது. பொன்னாலைப் பாலம் மூலம் பெருநிலப் பரப்புடன் இணைக்கப்பட்ட காரைநகர் மாத்திரம் வட்டுக்கோட்டைத் தேர்தல் தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

காவலூரைச் சேர்ந்த தீவுப்பகுதியைப் பொறுத்தவரை அது காவலூர், வேலணை, நெடுந்தீவு ஆகிய மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைக் கொண்டதாக விளங்குகின்றது.

1990 ஆம்ஆண்டு தமிழ்ஈழ விடுதலைப்புலிகள் சில இராணுவ தந்திரோபாயக் காரணங்களுக்காக தீவுப்பகுதியை விட்டு வெளியேறினர். அச்சமயம் அரசியல் பொறுப்பாளராக இருந்தவரும் பின்னர் பதவி நீக்கம் செய்யப்பட்டவருமான கோகி என்ற யோகரத்தினம் நரேன் "தீவுப்பகுதி கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த பகுதி அல்ல" என்று விளக்கம் கூற முற்பட்டு தீவுப்பகுதி மக்களின் கண்டனங்களைச் சம்பாதித்துக் கொண்டவர்.

இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் வந்த தீவுப்பகுதிக்குள் சிங்களப் பேரினவாதிகளின் அடிவருடிகளான ஈ.பி.டி.பி. கும்பல் புகுந்து கொண்டது. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி என்று தம்மை அழைத்துக் கொண்டு டக்ளஸ் தேவானந்தா தலைமையில் ஈ.பி.டி.பி. தீவுப்பகுதிக்குள் தலையை நுழைத்தது.

சிங்களக்கடற்படைக்குத் துணையாகவும் பக்கபலமாகவும் ஈ.பி.டி.பி. குழு தீவுப்பகுதியில் செயற்பட்டது. தீவுப்பகுதி மக்களை தம் கொடுங்கோலாட்சியின் கீழ் கொண்டு வந்த ஈ.பி.டி.பி. அங்கு பல அட்டூழியங்களையும் மனித உரிமை மீறல்களையும் புரிந்து வந்தது.

அத்துடன் ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா ஒரு வர்த்தக நிறுவனத்தை ஆரம்பித்து தீவுப்பகுதியில் இருந்து கடல் உணவுகள் மற்றும் கருவாடு போன்றவற்றை ஏகபோகமாக மிகக் குறைந்த விலைகளில் கொள்வனவு செய்து தென்னிலங்கைக்குக் கொண்டு சென்று ஏற்றுமதி செய்தும் கோடிக்கணக்கான ரூபாய்களைச் சம்பாதித்தார்.

எத்தனையோ குளறுபடிகளுடன் நடைபெறும் தேர்தல்களில் தீவுப்பகுதிக்கும் ஏனைய கட்சிகள் வருவதைத் தடுத்தும் பெருமளவு கள்ள வாக்குப் போட்டும் ஈ.பி.டி.பி. தன் ஆதிக்கத்தைத் தொடர்ந்து நிலைநாட்டி வந்தது.

சென்ற பொதுத்தேர்தலில் பிரச்சாரம் செய்யச் சென்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரை ஆயுதங்களுடன் வழிமறித்து தாக்கி இருவரைக் கொலை செய்த சம்பவம் ஈ.பி.டி.பி.யின் அசுரத்தனமான அராஜகத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இதேவேளை தீவுப்பகுதி மக்களைச் சுரண்டிச் சம்பாதிக்கும் பணத்தில் ஒரு பங்கைச் சிங்களக் கடற்படையினர் பொருட்கள் மூலம் டக்ளஸ் ஈ.பி.டி.பி.யும் தமது ஆதிக்கத்தை தீவுப்பகுதிகளில் பேணுவதற்குக் கடற்படையினரும் ஒத்துழைப்பையும் பெற்றனர்.

இந்தச் சுரண்டல் வாழ்க்கை முறையை ஒழித்துத் தீவுப்பகுதி மக்களுக்கு சுபீட்சமான சுதந்திரம் கிட்டக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது.

யுத்தநிறுத்தத்தையடுத்து விடுதலைப்புலிகள் தீவுப்பகுதிக்குச் சென்று முழுமையான அரசியல் பணிகளை ஆரம்பிக்கும் போது ஈ.பி.டி.பி. மூட்டையைக் கட்டிக் கொண்டு முற்றாக வெளியேற வேண்டி நேரிடும் என்பது தெட்டத் தெளிவாகியது.

ஆனால் கொழுத்த சுரண்டல் வருமானத்தை இழக்கவும் தன் அரசியல் கோட்டை பறிபோவதையும் விரும்பாத ஈ.பி.டி.பி. கடற்படையினரை "லஞ்சம்" மூலம் கைக்குள் போட்டுக் கொண்டு புலிகள் தீவுப்பகுதிக்குள் பிரவேசிப்பதைத் தடுத்து வருகிறது.

சில தினங்களுக்கு முன் விடுதலைப்புலிகளை அல்லைப்பிட்டிச் சந்தியில் வைத்து மறித்து உள்ளே அனுமதிக்க முடியாது என்று கடற்படை அதிகாரிகள் திருப்பி அனுப்பி விட்டனர். புலிகளை வரவேற்கத் திரண்டிருந்த தீவுப்பகுதி பொதுமக்களையும் துரத்தியடித்தது கடற்படை.

இது தவிர உணர்ச்சியுள்ள எந்தத் தமிழனையும் கோபமுறச் செய்யும் வகையில் தலைவர் பிரபாகரன் திருவுருவம் தாங்கிய சுவரொட்டிகள் ஆர்வமுள்ள பொதுமக்களால் ஒட்டப்பட்ட போது அவற்றைக் கிழித்து, சாணம் அடித்து அவமானம் செய்தனர் ஈ.பி.டி.பி.யும் கடற்படையும்.

இவ்வாறு விடுதலைப்புலிகள் தீவுப்பகுதிக்குச் செல்வதை தடுப்பது யுத்தநிறுத்த மீறல் என்று நியாயமான குற்றச்சாட்டு ஒன்றை கண்காணிபஸிபுக் குழுவிடம் விடுதலைப்புலிகள் சமர்ப்பித்தனர். இதையொட்டி விளக்கம் கேட்டுக் கண்காணிப்புக்குழுவினர் கடிதம் அனுப்பிய போது அதற்குப் பதிலாக வடபகுதிக் கடற்படைப் பிரிவுக் கட்டளை அதிகாரி றியர் அட்மிரல் வீரசேன வித்தியாசமான ஒரு பதிலை சமர்ப்பித்தார்.

யுத்தநிறுத்த ஒப்பந்த விதிகளின்படி இராணுவக் கட்டுப்பாட்ட முகாம்கள் மற்றும் அவற்றை அண்டிய பகுதிகள் சில உயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனம் செய்யபபடலாம். உதாரணமாக பலாலி, காங்கேசன் துறை, பகுதிகளும் அவற்றை அண்டிய வலிகாமம் வடக்குப் பிரதேசமும் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப் பட்டுள்ளது.

இத்தகைய பாதுகாப்பு வலயங்களுக்குள் விடுதலைப்புலிகள் சென்று அரசியல் நடத்த முடியாது. அங்குள்ள வழிபாட்டுத் தலங்களுக்கு வரையறுக்கப்பட்ட முறையில் பொதுமக்கள் மாத்திரம் சில தினங்களில் அனுமதிக்கப்படுவர். ஆனால் ஈ.பி.டி.பி.யின் சதியாலோசனையின் பேரில் சிங்களக் கடற்படை வடக்குத்தளபதி வீரசேன நெடுந்தீவு நீங்கலாக எஞ்சிய காவலூர் தொகுதித் தீவுப் பிரதேசங்கள் அனைத்தையும் ஓர் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியுள்ளார்.

இங்குள்ள முகாம்கள் எல்லாம் முன்னிலைக் காவலரண்கள் என்றும் கூறியுள்ளார். எனவே இங்கு புலிகள் தனிப்பட்ட முறையில் ஆயுதமற்ற நிலையில் உறவினர்களைக் காண அனுமதிக்கலாமே தவிர அரசியல் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று கூறியுள்ளார்.

யுத்த நிறுத்த விதிகளில் ஒன்றை குள்ளநரித்தனத்துடன் பயன்படுத்திக் கொண்டு ஒப்பந்தத்தின் ஆக்கபூர்வமான விதிகளைப் புறந்தள்ளி உதாசீனம் செய்ய ஈ.பி.டி.பி. ஆதரவுடன் கடற்படை மேற்கொள்ளும் முயற்சி கடும் கண்டனத்தை ஈர்த்துள்ளது.

பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் வசிக்கும் தீவுப்பகுதியை பொதுமக்களின்றி வெறிஞ்சோடிக் கிடக்கும் வலிகாமம் வடக்குப் பகுதியுடன் ஒப்பிட்டு உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்வது பொருத்தமாகாது என்று கண்காணிப்புக்குழுவிடம் மீளவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி. தனது கோரப்பிடிக்குள் தீவுப்பகுதியைத் தொடர்ந்து வைத்திருக்கவே சிங்களக் கடற்படையுடன் சேர்ந்து இவ்வாறு செயற்படுகிறது என்றும் கடற்படையின் நிலைப்பாடு யுத்தநிறுத்தத்தின் சாராம்சத்தையே ஒழித்துக்கட்டுகிறது என்றும் புகார் செய்யப பட்டுள்ளது.

## யாழ்ப்பாணக் கல்லூரியின் இராப்போசன விருந்து நிகழ்வு

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி பழைய மாணவர்களின் மாலை நேர ஒன்றுகூடலும் இராப்போசன விருந்தும் அடுத்தவாரம் ஸ்காபரோவில் நடை பெறவுள்ளது. பழைய மாணவ, மாணவியர், ஆசிரியர்கள், தம் குடும்பங்களுடன் சமூகமளிக்குமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

இடம்– மெகா பார்ட்டி ஹோல் – 3330 பார்மஸி அவனியு (மக்நிக்கல் சந்தி)

காலம் – 03ம்திகதி வெள்ளிக்கிழமை (03.05.2002) நேரம் 7.00 மணி

கட்டணம் – 15.00 டொலர் (பெரியவர்கள்) 10.00 டொலர் (சிறியவர்கள்)

தொடர்புகளுக்கு உமாசுதன் (416) 724 – 7839 கருணா (416) 332 – 1026




R ROYAL ACCIDENT BENEFITS

நீங்கள் வாகன விபத்துக்களினால் பாதிக்கப்பட்டுள்ளீர்களா?
இலவச ஆலோசனைகளுக்கு அழையுங்கள்!
வாகன விபத்தால் பாதிப்பானவர்களுக்குரிய
- உரிமைகள்
- நன்மைகள்
- பாதுகாப்புகள்

உங்களுக்குரிய
- தற்போதைய / எதிர்காலச் சம்பள இழப்புகள்
- கல்வி /வணிக இழப்புகள்
- வீட்டு /குழந்தைப் பராமரிப்புச் செலவுகள்
- மருத்துவ வசதிகள்

போன்றவற்றை உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள அழையுங்கள்
குமார்

To claim proper compensation for your damages, wage loss and all insurance benefits you are legally entitled to.
"We Fight For Your Right"

Call: KUMAR
TEL: (416) 283-8000
FAX: (416) 283-3567
1200 Markham Road, Suite 105
Scarborough, ON M1H 3C3
(Markham & Ellesmere)

# வன்னியில் தொடரும் அரசியல் சந்திப்புக்கள்!

வன்னியிலிருந்து
தம்பு விவேகராசா

## மலையகத் தலைவர்களும் வன்னியில் ஆலோசனை

தற்போது புதிதாக எழுந்துள்ள வரலாற்று சூழ்நிலையில் வடக்கு கிழக்கு அரசியல் தலைமைகள் மட்டுமன்றி முஸ்லிம் மக்களுடைய அரசியல் பிரதிநிதிகளும் மலையக மக்களின் அரசியல் தலைவர்களும் ஒன்றுபட்ட சக்தியாக விடுதலைப் புலிகள் அமைப்புடன் ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டும் என்ற கருத்து மலையக அரசியல் தலைவர்களிடம் விடுதலைப் புலிகளுடைய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

தமிழீழத்தில் வாழும் மக்களை நாம் எமது மக்களாக தமிழீழ தேசிய இனத்தின் இணைபிரியாத அங்கமாக அங்கீகரிக்கப் பட்டு இங்குள்ள மக்களுடன் அவர்கள் ஒன்று கலந்து வாழுகின்றார்கள் எனவும் அவர்களது பிரச்னை எங்களது பிரச்னை அவர்களது உரிமைக்காகவும் நாம் போராடி வருகின்றோம் எனவும் தேசிய தலைவர் பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

மலையகத்தில் வாழும் தமிழ் மக்களின் உரிமைக்காகவும் விடுதலைப் புலிகள் இயக்கம் குரல் கொடுக்கத் தயாராக உள்ளது என குறிப்பிட்ட அவர் மலையகத்தில் உள்ள அரசியல் தலைமைகள் பிளவுபட்டு இருக்காது ஒன்றுபட்ட ஒரே சக்தியாக சேர்ந்து இந்த மக்களின் உரிமைக்காக போராட வேண்டும் என்பதினையும் திரு. பிரபாகரன் வலியுறுத்தியுள்ளார்.

நாம் தொடர்ந்தும் மலையக மக்களின் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள் இங்கு உள்ள எமது செயற்றிட்டங்களை அரசியல் வேலைத்திட்டங்கள் பற்றி பார்த்து கலந்துரையாடி எந்த வழியில் இரு சமூகத்தினரும் ஒத்துழைக்கமுடியும் என்பதனை தொடர்ந்து பேசி இணக்கப்பாடு காணப்படும் எனவும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான ஐவரைக் கொண்ட குழுவில் எம்.எஸ்.செல்லச்சாமி, நாடாளு மன்ற உறுப்பினர்களான முத்துசிவலிங்கம், ஆர்.யோகராஜன் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

இவர்கள் புத்தாண்டு தினத்தன்று காலை 9 மணிக்கு விமானப்படையினரின் ஹெலி கொப்டர் மூலம் கிளிநொச்சி விளையாட்டு மைதானத்தை சென்றடைந்தனர்.

மாலை 1.30 மணிக்கு அமைச்சர் பி. சந்திரசேகரன் தலைமையிலான ஒன்பது பேர் கொண்ட குழுவில் திரு.இராதாகிருஷ்ணனும் இடம்பெற்றிருந்தார்.

மலையகத் தலைவர்களுடன் திரு.பிரபாகரன் நடத்திய சந்திப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இவர்களுடனான சந்திப்பிற்கு முதல் நாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்மட்ட குழு வன்னிக்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகளின் தலைவரையும் அவரது குழுவினரையும் சந்தித்து மூன்று மணி நேரம் கலந்துரையாடியபோது வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் இடம் பெயர்ந்து வாழும் முஸ்லிம் மக்களை மீண்டும் தமது சொந்த இடங்களில் வந்து குடியமருமாறு தமிழீழ விடுதலைப் புலிகளுடைய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்த மீள்குடியமருவதற்கு ஏதுவான புறநிலையை ஏற்படுத்தும் வகையில் நிலைமைகளை ஆராய்வதற்கு விடுதலைப் புலிகள் தரப்பிலும் முஸ்லிம் காங்கிரஸ் தரப்பிலும் ஒரு குழுவை அமைப்பதென முடிவு செய்யப்பட்டது.

இவாறே கிழக்கு மாகாணத்தின் பல குக்கிராமங்களிலிருந்தும் இடம் பெயர்ந்த முஸ்லிம்களை மீண்டும் தமது பழைய இடங்களில் குடியமர்த்துவதற்கு உகந்த



சூழலை ஏற்படுத்துவதென விடுதலைப் புலிகளுடைய தலைவர் திரு.பிரபாகரனும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி யில் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர். இந்த இரு தலைவர்களும் இந்தக் கூட்டறிக்கையில் ஒப்பமிட்டு பரிமாறிக்கொண்டு கைகுலுக்கிக் கொண்டனர்.

விடுதலைப் புலிகளின் உயர்மட்ட தலைவர்



களை கிளிநொச்சிக்கு சென்ற முஸ்லிம் காங்கிரஸ் ஏழு பேர் கொண்ட குழு சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது.

இக்குழுவில் அமைச்சர ரவூப் ஹக்கீம், தவிசாளர் அதாவுல்லா , பிரதி தலைவர் டாக்டர் உதுமான் லெப்பை, பிரதி தலைவர் முகைதீன் அப்துல் காதல், கொள்கை பரப்புச் செயலாளர் பசீர் சேகுதாவூத், பிரதி தவிசாளர் நூர்தீன் மசூர், மேலதிக கொள்கை பரப்புச் செயலாளர் மசூர் மௌலானா ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களிட மிருந்து போராட்டத்திற்கு பணம் பெறும் நடைமுறையை உடனடியாக நிறுத்தவும் விடுதலைப் புலிகள் சம்மதம் தெரிவித்து ள்ளனர்.

வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களுடைய அடிப்படை மற்றும் அரசியல் பிரச்னையினை கோட்பாட்டு ரீதியாக அணுகி அவர்களையும் அரசியல், கலாச்சார தனித்துவ உரிமைகளை பேணுவதற்கு முடிவு செய்யும் பொருட்டு தொடர்ச்சியாக பேசுவதெனவும் முஸ்லிம் மக்களுடைய அதிக பட்ச ஆதரவை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பெற்றுள்ள தினால் வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் தொடர்பில் அவர்களுடனே பேசுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக வெளியிடப் பட்டுள்ள கூட்டு அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் முக்கிய நடைமுறை பிரச்னை களுக்கும் சந்திப்பின்போது தீர்வு காணப் பட்டது.

வடகிழக்கில் செய்கை பண்ணப்படாது இருக்கும் முஸ்லிம் மக்களுடைய விவசாய நிலங்களில் மீண்டும் பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்த வசதி செய்து கொடுப்பது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் வடகிழக்கு மாவட்டம் தோறும் முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னை களை மூத்த தளபதிகளுடன் பேசித் தீர்க்கும் நோக்குடனும் தமிழ் முஸ்லிம் புரிந்துணர்வை வலுப்படுத்துவதற்காகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக ஒவ்வொரு பிரதிநிதிகளை நியமிப்பது இவ்வாறான சந்திப்புக்களை நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஆரம்பிக்கப்படவுள்ள சமாதான பேச்சுவார்த்தையின்போது முஸ்லிம் மக்கள் சார்பாக முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதியும் பங்குபற்ற இணக்கம் காணப்பட்டுள்ளது.

இச்சந்திப்பின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் தலைவர், ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம், அரசியல்துறை தலைவர் சு.ப.தமிழ்ச் செல்வன், தளபதிகளான கேணல் கருணா, கேணல் பதுமன் ஆகியோர் கலந்து கொண்ட னர். கிளிநொச்சியில் உள்ள அரசியல் பிரிவு நடுவை பணியகத்தில் சந்திப்பு நடை பெற்றுள்ளது.

மதியம் முஸ்லிம் பிரதிநிதிகளுடைய மதக் கடமைக்காக விசேடமாக ஒழுங்குகளும் செய்யப்பட்டு இருந்தது.

கிளிநொச்சி விளையாட்டு மைதானத்தினை ஹெலி மூலம் சென்றடைந்த இவர்களை நடுவை பணியகத்தைச் சேர்ந்த எஸ்.தங்கன், எஸ்.புலித்தேவன் ஆகியோர் வரவேற்று அழைத்துச் சென்று திரு தமிழ்ச்செல்வனை அறிமுகம் செய்து வைத்தனர்.

சந்திப்பு நடைபெறும் மண்டபத்திற்கு தமிழ்ச்செல்வன் அவர்களை அழைத்துச் சென்றபோது தலைவர் பிரபாகரன் முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளை கைலாகு கொடுத்து வரவேற்றுள்ளார்.

இதற்கிடையில் கடந்த புதன்கிழமை கிளிநொச்சிக்கு சென்ற நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் தலைமையிலான குழுவினரை தேசிய தலைவர் தலைமையிலான குழுவினர் இரண்டு மணி நேரம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

போர்நிறுத்த விதிமுறைகள் மற்றும் அரசு உறுதியளித்த நல்லெண்ண நடவடிக்கைகள் பூரணமாக நிறைவு செய்து தாயகத்தில் இயல்பு நிலை தோற்றுவிக்கப்பட்டு விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்ட பின்னரே பேச்சுவார்த்தைக்கு இணக்கம் தெரிவிப்போம் என விடுதலைப் புலிகள் தரப்பில் நோர்வே குழுவினருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோர்வேயின் பிரதி வெளியுறவு அமைச்சர் விடார் ஹெல்கிசன் தலைமையிலான குழுவினர் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் குழுவினரை கிளிநொச்சியில் உள்ள புலிகளின் அரசியல் துறை பணிமனையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் தேசிய தலைவர் வெளியுறவு அமைச்சருக்கு நினைவு பரிசாக பதக்கம் ஒன்றினையும் வழங்கினார்.

அதில் தமிழர் தாயகபடமும் விடுதலைப் புலிகளுடைய சின்னமும் பொறிக்கப் பட்டிருந்தது.

நோர்வே குழுவினர் யுத்தத்தினால் பாதிக்கப் பட்ட வன்னிப் பிரதேசத்தையும் சுற்றி பார்வை யிட்ட பின்னர் கொழும்பு திரும்பியுள்ளனர். வன்னிக்கு விஜயம் செய்ய முன்னர் நோர்வே குழுவினர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியிருந்தனர்.




## ‘திம்புக் கோட்பாட்டுக்கு குறைவான எந்தத் தீர்வையும் ஏற்க தயாரில்லை’

திம்புக்கோட்பாடுகளுக்கு குறைவான எந்தவொரு தீர்வையும் ஏற்க நாம் தயாராக இல்லை. தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளமுடியாத எந்தத் தீர்வையும் பலாத்காரமாக திணிக்கமுடியாது. தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாத எந்தவொரு தீர்வையும் அவர்கள் மீது பலவந்தமாக திணிக்கக்கூடாது. அவை நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தாது. சிங்களத் தேசியம் திம்பு கோட்பாட்டை ஏற்றுக்கொள்கிறதா என்பதைத் தெளிவுபடுத்தவேண்டும். எமது பிரச்னைகளுக்கு தீர்வெதனையும் பெற்றுத் தராது தமிழ்த்தேசியம் கடந்த காலங்களில் பல முறை ஏமாற்றப்பட்டிருக்கின்றது. அந்த அனுபவம்எமக்கு இருக்கின்றது. இந்த விடயத்தில் நாம் மிக விழிப்பாக இருக்கின்றோம்.

திம்புக்கோட்பாட்டைத் தவிர்ந்த வேறு அடிப்படைகளை எம்மால் நாடமுடியாது. சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான சூழல் ஏற்பட்டு வரும் இச்சந்தர்ப்பத்தில் பாதுகாப்புத்துறைக்கு பெருந்தொகைப் பணம் ஒதுக்கியிருப்பதன் அர்த்தம் என்னவென விளங்கவில்லை. அது சந்தேகத்தையே ஏற்படுத்துகின்றது. ஆயுதங்களை கொள்முதல் செய்து குவித்துக்கொண்டு சர்வதேச ஆதரவுடன் போரொன்றை நடத்த அரசு ஆலோசிக்கின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது.

**- தமிழர் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரையில் கூறியிருப்பது**

## ‘துக்கத்துக்கும் வெட்கத்துக்குமுரிய நாள் அந்த நாள்’

உலகில் எந்தச் சக்தியும் எங்களை மிரட்டமுடியாது. உணர்வு பூர்வமாக எது நியாயமோ அதைச் சொல்கிறோம். நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே என்ற நக்கீரன் போன்றவர்கள் நாங்கள். சட்டசபையிலே தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றார்கள்.

நியாயம் தானா? அந்த நாள் துக்கத்துக்கும் வெட்கத்துக்கும் உரிய நாள். நான் வன்முறைக்கு ஆதரவாளன் இல்லை. கடந்த 8 ஆண்டுகளில் எங்கள் கட்சி நடத்திய எந்த நிகழ்ச்சியிலும் வன்முறை கிடையாது. திடீரென அவசர அவசரமாக இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வர அவசியம் என்ன? ஈழப்பிரச்னை எப்படி உருவானது என்று ஆரம்பத்திலிருந்து விவாதிக்கத் தயாரா? நான் தயார். பழைய சம்பவத்தைக் கிளறவேண்டாம் என்றால் ஒட்டு மொத்த பழைய சம்பவத்தையும் கிளறக்கூடாது. ராஜீவ் படுகொலை துன்பகரமான சம்பவம் தான். அதை ஒருபோதும் நியாயப்படுத்தமாட்டோம். இலங்கை அமைச்சரே இப்போது ஒற்றுமைக்கான முயற்சி நடக்கின்றது. அதைக் கெடுத்துவிடாதீர்கள் என்று கூறியிருக்கின்றாரே?

**- மறுமலர்ச்சி திமுக தலைவர் வை.கோ சென்னையில் நிருபர்கள் மத்தியில் உரையாற்றுகையில் தெரிவித்தது.**

## ‘அமைச்சர்கள்வருகின்றார்கள் திரும்பிச்செல்கின்றார்கள் நடைமுறையில் ஒன்றும் இல்லை’

நான் சிறிய பையனாக இருந்தபோது அன்றைய நீர்ப்பாசன அமைச்சராக இருந்த சீ.பி.டீ.சில்வா தொண்டமானாறு நன்னேரித்திட்டத்தை பார்வையிட்டுச் சென்றார். அவர் சென்று 35 வருடங்களாகியும் இத்திட்டம் செயற்படுத்தப்படவில்லை. குடாநாட்டுக்கு அமைச்சர்கள் வருகிறார்கள். போகிறார்கள். ஆனால் அவர்களால் எதனையும் இங்கு செயற்படுத்த முடிவதில்லை. எனவே இது மாறவேண்டும் அமைச்சர்கள் செயலில் காட்டவேண்டும். இங்கு வருகின்ற அமைச்சர்கள் வந்தோம் பார்த்தோம் என்று சொல்லாமல் இங்குள்ள தமது திணைக்களங்கள் மற்றும் அபிவிருத்திகளுக்கு நிதி ஒதுக்கிச் செயற்படுமாறு வேண்டுகிறேன். போர் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தை நேரடியாகவே காண வந்துள்ள அமைச்சர்கள் அதனை அபிவிருத்தி செய்ய முன் வரவேண்டும். வெறுமனே வந்தோம். பார்த்தோம். சென்றோம் என்று பத்திரிகைச் செய்திகளில் வெளிவருவதை விட வேறு எதுவும் இங்கு நடப்பதில்லை.

**- யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் யாழ்ப்பாணம் கச்சேரியில் நடைபெற்ற உயர் மட்ட அதிகாரிகளின் கூட்டத்தில் தெரிவித்தது.**

## ‘எல்லா அமைச்சர்களும் உல்லாசப் பயணிகளாக வந்து போபவர்கள் அல்ல’

யாழ்ப்பாணத்துக்கு வருகின்ற அமைச்சர்கள் உல்லாசப் பயணிகள் போல வந்து போகிறார்கள் என பாராளுமன்றத்தில் குறை கூறப்பட்டது. யாழ்ப்பாணத்துக்கு வரும் ஒரு சில அமைச்சர்களே களியாட்டங்களுக்காக வருகை தரலாம். ஆனால் எல்லோரும் அப்படியல்ல. அண்மையில் வந்த விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ 10 இலட்ச ரூபாய் பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை வழங்கியுள்ளார். அத்துடன் துரையப்பா விளையாட்டரங்கின் அபிவிருத்திக்கும் 10 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளார். 20 வருடங்களாக அபிவிருத்தி செய்யப்படாத குடாநாட்டை ஒரே நாளில் அபிவிருத்தி செய்யவும் முடியாது. நீர்ப்பாசன முகாமைத்துவ அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா தமது உரையில் யாழ்.மாவட்டத்தில் மழை நீர் கடலுக்குள் சென்று கடலில் கலப்பதை தடுக்கவும் கிடைக்கக்கூடிய நீர் வளங்களை விவசாய முயற்சிகளுக்குப் பயன்படுத்தும் திட்டங்களையும் வரைவு செய்வதற்கு நிபுணர் குழு ஒன்று அமைக்கப்படும்.

**- யாழ்ப்பாணம் கச்சேரியில் நடைபெற்ற இதே கூட்டத்தில் இந்து சமய விவகார அமைச்சர் தியாகராஜா மகேஸ்வரன் தமது உரையில் கூறியது.**

## ‘உலகத்தமிழர்களின் பொது எதிரியாகியுள்ள முதலமைச்சர்ஜெயலலிதா’

பிரபாகரனைக் கைது செய்யவேண்டுமெனத் தமிழக சட்டசபையில் தீர்மானம்கொண்டு வந்து நிறைவேற்றியதன் மூலம் தமிழக முதல்வர் ஜெயலலிதா இன்று உலகத் தமிழர்களின் பொது எதிரியாக மாறியுள்ளார். பிரபாகரனைக் கைது செய்து தண்டனை வழங்கவேண்டுமென ஜெயலலிதாவால் கூறமுடியுமானால் எங்களது தமிழீழச் சட்டப்படி அவரைக் (ஜெயலலிதாவை) கைது செய்து இலங்கைக்கு கொண்டு வந்து தண்டனை வழங்கவேண்டுமென நாம் கோரித்தான் ஆகவேண்டும். ஒவ்வொரு தமிழ் மகனும் இதனை நினைவில் எப்போதும் கொள்ளவேண்டும். ஜெயலலிதாவின் கொடும்பாவினை உலகெங்கும் எரிக்கவேண்டும். உலகிலேயே வல்லமை பொருந்திய இந்திய இராணுவத்தால் முடியாமல்போன ஒரு கருத்தைச் செய்துவிடலாமென ஜெயலலிதா இதன் மூலம் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கின்றார். இந்த அரக்க குணம் படைத்த ஜெயலலிதாவிடம் ஏமாந்து முதலமைச்சராக்கிய தமிழகத் தமிழ் மக்கள் இனியும் ஏமாறாது தக்க பாடத்தை அவருக்கு புகட்டவேண்டும். இன்று உலகமே தலைவர் பிரபாகரனின் காலடிக்குச் சென்ற வண்ணமுள்ளது. எனவே எமது மக்கள் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை.

**- அம்பாறை மாவட்ட எம்.பி. சந்திரநேரு திருக்கோவிலில் நடைபெற்ற விடுதலைப் புலிகளுக்கு வரவேற்பளிக்கும் கூட்டத்தில் கூறியது.**

## ‘விடுதலைப் புலிகளைப் பற்றிப் பேச ஜெயலலிதாவுக்கு தகுதி இல்லை’

விடுதலைப் புலிகள் இயக்கத்தை குறைகூற ஜெயலலிதாவுக்கு தகுதி இல்லை. புலிகளை ஆதரிப்பவர்கள் மீது பொடோ சட்டம் பாயும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார். தீவிரவாதத்துக்கும் விடுதலைப் போராட்டத்துக்கும் வித்தியாசம் உள்ளது. காஷ்மீரில் பொது இடங்களில் குண்டு வைத்து மக்களைக் கொல்வோரும் அமெரிக்க உலக வர்த்தக மையத்தை தாக்கியோரும் தான் தீவிரவாதிகள். பறிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளுக்காகப் போராடுவது தீவிரவாதம் அல்ல. ராஜீவ் காந்தி கொலையில் குற்றம் நிரூபிக்கப்பட்டு குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதை மதிமுக எதிர்க்கவில்லை. ஆனால் இக்காரணத்தைக் காட்டி தமிழர் பிரச்னைக்காக 20 ஆண்டுகள் போராடி வரும் ஓர் இயக்கத்தைக் குறை கூறுவதுதவறு. விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துக்கு இந்தியாவில் எங்கும் சிகிச்சை அளிக்கக்கூடாது என்று ஜெயலலிதா கூறியுள்ளார். அனுமதி அளிக்கும் அதிகாரம் மத்திய அரசிடம் தான் உள்ளது. ஜெயலலிதாவிடம் இல்லை. கோடிக்கணக்கில் ஊழல் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளானவர் ஜெயலலிதா. இன்னும் வழக்குகள் நிலுவையில் உள்ளன. விடுதலைப் புலிகள் இயக்கத்தை குறை கூறும் தகுதி ஜெயலலிதாவுக்கு இல்லை.

**- இந்திய மத்தியநிதித்துறை இணையமைச்சர் செஞ்சி ராமச்சந்திரன் தருமபுரியில் நடந்த மதிமுக செயல்வீரர்கள் கூட்டத்தில் பேசியது.**

# கடிக்க....

முஸ்லிம் தலைவர்கள் தலைவரைச் சந்திக்கச் சென்றபோது மதிய உணவு விருந்திலும் கலந்து கொண்டனர். சாப்பாடு பரிமாறப்பட்ட பின்னர் அதில் கைவைப்பதற்கு முன்னர் ஹக்கீம் குழுவினரிடம் ஒருவித தயக்கம் காணப்பட்டது. அதனைக் கவனித்த தேசியத்தலைவர் முஸ்லிம் பெயர் ஒன்றைக் குறிப்பிட்டு அழைத்துள்ளார். அழைப்புக் கிடைத்தவுடன் குறிப்பிட்ட முஸ்லிம் நபர் அங்கு வந்தார். இந்த உணவு எப்படித் தயாரிக்கப்பட்டது என அவரிடம் தலைவர் கேட்க ,இது ‘முஸ்லிம்களின் வழக்கப்படி ஹலால்முறையில் தான் தயாரிக்கப்பட்டது’ என அவரிடமிருந்து பதில் வந்தது. அதன் பின்னரே ஹக்கீம் குழுவினர் மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் உணவருந்தத் தொடங்கினார்கள். புலிகள் அமைப்பில் இப்போதும்கூட பல முஸ்லிம்கள் இருக்கின்றார்கள் என்பது பலருக்கும் தெரியாத சங்கதி. தமக்குக் கிடைத்த உபசரிப்பையிட்டு அவர்கள் உருகிப்போயுள்ளார்கள்.

கொழும்பில் இனவாதத்தைக் கக்கும் வகையில் எழுதும் பத்திரிகையாளர் ஒருவர் வன்னிச்சந்திப்புக்கும் சென்றிருந்தார். கொழும்பிலுள்ள பத்திரிகை ஒன்றின் மூலமே அவர் அனைவருக்கும் அறிமுகம். ஆனால் கேள்வி கேட்கும்போது சிங்கப்பூரின் பிரபல பத்திரிகை ஒன்றின் பெயரைக் குறிப்பிட்டே அவர் தன்னை அறிமுகம் செய்து கொண்டார். சிங்கப்பூர் பத்திரிகைக்கு எப்போதாவது அவர் கட்டுரை எதனையாவது எழுதியிருக்கலாம் தான். ஆனால் தான் பிரபலமான பத்திரிகையின் பெயரையே சொல்லி அறிமுகம் செய்வதற்கு ஏன் தான் இந்தளவுக்குப் பயப்படவேண்டும்?

ஹக்கீம் வன்னி சென்று திரும்பியதைத் தொடர்ந்து அவருக்குப் போட்டியாக அரசியல்நடத்தும் அம்மணி சற்றுப் பலவீனப்பட்டுப்போயுள்ளது தெரிகின்றது. புரிந்துணர்வு உடன்படிக்கையை அடிப்படையாக வைத்து ஹக்கீமைப் பலப்படுத்தலாம் என்று பார்த்தால் அவர் தானே வன்னி சென்று தன்னைப் பலப்படுத்திக் கொண்டு விட்டார். அம்மணியான் துணையுடன் நிற்கும் ஹிஸ்புல்லாவும் சற்று விரக்தியடைந்தவராகத் தான் உள்ளார். இப்போதைக்கு ஹக்கீமை அசைக்கமுடியாது என்று சொல்கின்றார்கள்.

தலைமைப் பதவியை எதிர்பார்த்து பிறந்த வீட்டுக்கு திரும்பி வந்த தம்பியாருக்கு கிடைத்த ஏமாற்றம் பழைய சங்கதி தான். இப்போது பிரபலமடைவதற்கு அவர் ஒரேயடியாக இனவாதத்தைத் தூக்கிச் செல்ல முற்பட்டிருப்பது தான் பலருக்கும் ஆச்சரியம். ஆனால் பண்டாரநாயக்கா குடும்பம் அரசியல் பிரபலத்துக்காக இனவாதத்தைத் தான் நம்பியிருக்கின்றது என்பது இந்நாட்டின் சரித்திரத்தைப் படித்தவர்களுக்குத் தெரியும். இனவாதத்தையாவது பேசி அரசியலில் நிலைத்திருக்கப்பார் என்று அக்காவும் அனுமதி கொடுத்துவிட்டார் போலும். முன்னாள் பிரதமர் இரத்தினசிறியும் தம்பியாரும் இந்த இனவாதத்தைப் பொறுத்தவரையில் இப்போது இணைந்து செயற்படுகின்றார்கள்.

மக்கள் அங்கீகாரத்தைப் பெரிதாகக் கருதிய மலையக அரசியல் தலைவர்கள் இப்போது மக்கள் அங்கீகாரம் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை வன்னியின் அங்கீகாரம் கிடைத்தால் போதும் என்ற நிலைக்கு வந்துவிட்டனர். வன்னி சென்று வந்த இரு மலையகத் தலைவர்களிடமும் தேசியத் தலைவர் ஒன்றைத் தான் முக்கியமாகக் கூறினார். அதாவது ஒற்றுமையாகச் செயற்படுங்கள் என்பது தான் அது. ஆனால் இருவருமே அந்த ஒற்றுமையை விட்டு விட்டு மற்றெல்லாவற்றையும் பற்றித் தான் பேசுகின்றார்கள். அத்துடன் வன்னியில் கிடைத்த அங்கீகாரம் தான் அவர்களது அரசியலின் அடுத்த நகர்வுக்கான அத்திவாரமாகவே இருக்கும்போல...!

## பேராசிரியன் எழுதும் சிறப்புக் கட்டுரை

# இழக்கப்பட்ட பொருளாதார வாய்ப்புக்கள்? சமாதான நகர்வின் பின்னணியில் உபாயம்

இரண்டு தசாப்த காலமாக தீவிரமாக இடம்பெற்ற யுத்தத்தின் பின்னர் இப்போது தான் இதற்குக் காரணமான பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்கான யதார்த்தமான அணுகுமுறை ஒன்று முன்னெடுக்கப்படுவதைக் காண முடிகின்றது.

யுத்தத்துக்காகக் கொடுக்கப்படும் விலை தொடர்பாக தெளிவான முறையில் உணரப்பட்ட நிலையிலேயே தற்போதைய யதார்த்தமான அணுகுமுறை முன்னெடுக்கப்படுகின்றது.

யுத்தத்துக்காகக் கொடுத்துள்ள விலை என்பதை விட முக்கியமாக யுத்தத்தால் இழக்கப்பட்டுள்ள பொருளாதார வாய்ப்புக்கள் தொடர்பாக ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் கரிசனை செலுத்துவது தான் இந்தப் புதிய அணுகுமுறைக்கான காரணம் இந்த "அர்த்தமற்ற யுத்தம்?" நடைபெறவில்லை என்றால் நாட்டின் பொருளாதாரம் முற்றிலும்

முக்கிய காரணியாக அமைந்தது. நாட்டின் பொருளாதாரத்தை தீர்மானிக்கும் காரணியாகவும் யுத்தமே விளங்கியது.

இறுதியில் யுத்தத்தை முன்னெடுக்க முடியாத நிலைமைக்கு பொருளாதாரம் வந்துள்ள நிலைமையிலேயே தற்போதைய யுத்த

தடையின்றிக் கிடைக்க வேண்டும் என்பதிலும் ஐ.தே.மு. அரசாங்கம் மிகவுட் அக்கறையாகவுள்ளது என்பதை இது வெளிப்படுத்துகின்றது.

ஆசியாவிலுள்ள பெரும்பாலான நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையின் பொரு

அரச மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் அதிகளவு அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் துறைகளில் உல்லாசப் பயணத் துறை இருந்தது. தீவிரமடைந்த யுத்தம் இந்த நிலைமையை முற்றாகவே மாற்றியது.

குறிப்பாக கட்டுநாயக்கா விமானப்படைத் தளம். விமான நிலையம் ஆகியவற்றின் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து உல்லாசப் பயணிகளின் விடுதிகள் அனைத்துமே வெறிஞ்சோடிப் போய் காணப்பட்டன. ஆனால் இப்போதோ விடுதிகளில் இடம் கிடைக்குமா என ஏங்கும் நிலையில் உல்லாசப் பயணிகள் காணப்படுகின்றனர்.

போர் நிறுத்தம் உடனடியாகவே பலனளிக்கத் தொடங்கியுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் யுத்தம் தொடர்பான அணுகுமுறையில் பொதுஜன முன்னணி அரசுக்கும் ஐ.தே.மு. அரசிற்கும் இடையேயுள்ள முரண்பாட்டையிட்டுக் கவனம் செலுத்துவது அவசியம்.

ஜெயவர்த்தனாவின் காலத்தில் இருந்து பிரேமதாசா காலம் வரையில் யுத்தத்தின் நேரடியான பாதிப்பு தென்பகுதியில் பெருமளவிற்கு இருக்கவில்லை. அதாவது யுத்தத்தின் தாக்கம் வடக்கு கிழக்கு பகுதிக்கு உட்பட்டதாகவே மட்டுப்படுத்தி வைத்துக் கொள்வதில் முன்னைய ஐ.தே.க அரசுகள் வெற்றி கண்டிருந்தன. இதனால் யுத்தம் பொருளாதாரத்தை பெருமளவிற்கு பாதிக்கவில்லை.

மாறுபட்ட ஒரு நிலையில் இருந்திருக்கும் என்பதை ஐ.தே.மு.வின் பொருளாதார நிபுணர்கள் தெளிவாக உணர்ந்துள்ளனர். பெருமளவிற்கு வர்த்தக முயற்சிகளை ஊக்குவிக்கும் முதலீட்டாளர்களை உற்சாகப்படுத்தும் கொள்கையைக் கொண்டுள்ள ஐ.தே.மு. தலைவர்களை இழந்து போன இந்த பொருளாதார வாய்ப்புக்களை எவ்வாறு மீளப்பெற்றுக் கொள்ளமுடியும் என்பதில் தமது முழுக் கவனத்தையும் இப்போது செலுத்துகின்றனர்.

அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம் அதில் முதலீட்டாளர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ள வரிச்சலுகைகள் என்பன ஐ.தே.மு. அரசின் அணுகுமுறைக்கு உத்தரவாதமாகவுள்ளது.

இந்த இருபது வருடகால யுத்தத்தின் சுமையை இந்தநாட்டின் ஒவ்வொரு பிரஜையுமே சுமக்க வேண்டியிருந்தது. வறியவர்களின் நிலை மேலும் மோசமடைந்தது.

உண்மையில் தமிழர்களின் பொருளாதாரமும் வாழ்க்கைத்தரமும் தான் இந்த யுத்தத்தால் பெரிதும் சீர்குலைந்தது. பொருளாதாரத் தடைகள். சொந்த இடங்களில் இருந்து வெளியேற வேண்டிய நிலைமை என்பவற்றுடன் தமிழர்கள் தொழில் வாய்ப்புக்களையும் இழந்ததால் அவர்களது பொருளாதாரத்தின் அடித்தளமே ஆட்டம் கண்டது.

குடாநாட்டு மக்களுடைய பொருளாதாரத்தில் விவசாயமும் மீன்பிடியும் வகித்த பங்கு முக்கியமானது. இந்த இரண்டினதும் வளர்ச்சி கடந்த காலத்தில் எவ்வாறாக இருந்தது என்பதை சொல்லத் தேவையில்லை. இருந்தபோதும் ஐ.தே.மு. அரசாங்கமானது வடக்கு கிழக்கு அபிவிருத்தி என்பதை விட தென்பகுதியில் கடந்த காலத்தில் இழக்கப்பட்ட பொருளாதார வாய்ப்புக்களை மீண்டும் பெற்றுக் கொள்வதில் தான் அக்கறையுடன் செயற்பட்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. தற்போதுள்ள யுத்தநிறுத்த சூழ்நிலையைப் பயன்படுத்தி பொருளாதாரத்தை எந்தளவுக்கு கட்டியெழுப்ப முடியும் என்பதில் தான் ஐ.தே.மு.வின் முழுக்கவனமும் உள்ளது.

சிங்கள இளைஞர்களைப் பொறுத்தவரையில் யுத்தம் காரணமாக அவர்களும் பல வாய்ப்புக்களை இழந்துள்ளனர். இராணுவத்தைத் தவிர வேறு எங்குமே வேலை வாய்ப்புக்களை அவர்களால் உறுதி செய்து கொள்ள முடியவில்லை.

நாட்டில் வறுமை தலைவிரித்தாடுவதற்கு அதிகரித்து வந்த யுத்த செலவினமே

நிறுத்தம் அவசியமாகியது.

ஐ.தே.மு. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் யுத்தமா சமாதானமா என்ற கேள்வி ஒருபுறம் இருக்க பாதாளத்தில் வீழ்ந்துள்ள பொருளாதாரத்தை தூக்கி விடுவதும் இழக்கப்பட்ட பொருளாதார வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதும் தான் கரிசனைக்குரிய விடயங்களாக உள்ளன.

தற்போதைய யுத்த சூழ்நிலையை பயன்படுத்திக் கொள்வது இதற்கான தந்திரோபாயங்களில் ஒன்றாகவே கருதப்பட வேண்டியதாகவுள்ளது. பொருளாதாரம் சிதைவடைந்து யுத்தத்தையும் தொடர்ந்து முன்னெடுக்க முடியாத இராணுவ பொருளாதார சூழ்நிலையிலேயே ஐ.தே.மு. ஆட்சிப் பொறுப்பையேற்றது.

இப்போது யுத்தத்தை நிறுத்தி பொருளாதார முன்னேற்றத்தில் அரசு அக்கறை காட்டினாலும் கூட அரசின் உபாயங்களில் மற்றொரு மறைபொருள் இருப்பதையும் உணர முடிகின்றது.

அதாவது சமாதான முயற்சிகள் முறிவடைந்து மீண்டும் ஒரு யுத்தம் என்ற நிலைமை ஏற்பட்டால் பொருளாதாரத்தை எவ்வாறு பாதுகாப்பது? யுத்தத்திற்கான சுமைகள் பொருளாதாரத்தை பாதிக்காமல் இருக்க கடைப்பிடிக்க வேண்டிய உபாயங்கள் தொடர்பாகவும் ஐ.தே.மு. அரசாங்கம் தெளிவாக இருப்பதாகவே தெரிகின்றது.

அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்திலேயே இதற்கான உதாரணத்தைக் காணமுடிகின்றது. அனைத்துப் பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக கடந்த காலத்தில் அறவிடப்பட்ட 7.5 வீதமான தேசிய பாதுகாப்பு வரி நீக்கப்பட்டதாக அரசு அறிவித்தது.

வரியின் சுமையைத் தாங்க முடியாது தள்ளாடிய மக்கள் மத்தியில் இந்த அறிவிப்பிற்கு பெரும் வரவேற்புக் கிடைத்தது.

யுத்தம் இல்லாத நிலையில் யுத்தத்திற்கான வரி எதற்கு? என்ற கேள்விகள் எழுவதையும் அரசு இதன்மூலம் தவிர்த்துக் கொண்டது.

இருந்த போதிலும் உண்மை நிலையோ வேறு.

அரசு புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள விஏரி எனப்படும் பெறுமானம் சேர்க்கப்பட்ட வரியில் 7.5வீதம் வழமை போல பாதுகாப்புச் செலவினத்திற்காகவே எடுக்கப்படுகின்றது. அதாவது வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாவிட்டாலும் படையினரைப் பலப்படுத்துவதிலும் அதற்கான ஒதுக்கீடுகள்

ளாதார வளர்ச்சி வீதம் மிகவும் குறைவானதாகவே இருக்கின்றது என்பதுடன் நபர் ஒருவருடைய தலா வருமானமும் மிகவும் குறைவாகவே உள்ளது.

உதாரணமாக மலேசியாவில் 8000 அமெரிக்க டொலராகவும். சிங்கப்பூரில் 30.000 அமெரிக்க டொலராகவும் தாய்லாந்தில் 2200 ஆகவும் தனிநபர் வருமானம் இலங்கையில் 815 அமெரிக்க டொலராக மட்டுமே உள்ளது.

யுத்தத்தின் தாக்கம் தான் இந்த நிலைமைக்குக் காரணம் என்பது சொல்லாமலேயே தெரிந்து கொள்ளப்படும். பொருளாதார அபிவிருத்தியின் காரணமாகவே தனிநபர் தலா வருமானத்தை அதிகரிக்க முடியும். பொருளாதார அபிவிருத்திக்கு முதலீடுகள் அதிகரிப்பது அவசியமானதாகும். அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் முதலீடுகளை குறிப்பாக வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிப்பதற்கான சலுகைகள் ஊக்குவிப்புக்கள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் தணிக்கப்பட்டு நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் தற்போதைய சூழ்நிலையில் இந்த அறிவிப்பு குறிப்பிடத்தக்க அளவு பலாபலன்பனைத் தரும் என்றே அரசு எதிர்பார்க்கின்றது.

இதனைவிட அமைச்சர்களான பேராசிரியர் பீரிஸ். மஸிந்த மொறகொட மற்றும் டிரோன் பெர்னாண்டோ போன்றவர்கள் மேற்குநாடுகளில் மேற்கொண்டு வரும் பிரச்சாரங்கள் பெருமளவு வெளிநாட்டு முதலீடுகளைக் கொண்டுவரக்கூடியதாகவே உள்ளன.

அமைச்சர் மொறகொட அண்மையில் அமெரிக்காவிற்கு மேற்கொண்டிருந்த விஜயம் இது தொடர்பில் குறிப்பிடத்தக்கது. நிதியமைச்சருடைய சுமையை பெருமளவிற்குக் குறைக்கக்கூடியதாகவே அவரது செயற்பாடுகள் அமைந்துள்ளன.

இத்தோடு மீண்டும் அதிவேகத்துடன் முன்னேற்றமடைந்து வரும் உல்லாசப் பயணத்துறையை துரித வேகத்தில் வளர்த்தெடுப்பதற்கான நடவடிக்கைகளும்

இருந்த போதிலும் 1994 இல் பதவிக்கு வந்த பொதுஜன முன்னணி அரசின் அணுகுமுறை இந்த நிலைமையை முழுமையாக மாற்றியமைத்து மலிவான அரசியற் பிரச்சாரங்களிற்காக யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற அரசு எடுத்த முடிவு எதிர்மறையான விளைவுகளைக் கொடுத்தது.

யாழ்ப்பாணத்தைப் படையினர் கைப்பற்றிய பின்னரே தலைநகர் கொழும்பில் பாரிய தாக்குதல்கள் இடம்பெற்றன.

உறுகொடவத்த. கொலன்னாவ எண்ணெய்க்குதங்கள். மத்தியவங்கி. உலகவர்த்தக மையம். கலதாரிஹோட்டல். தலதாமாளிகை. கட்டுநாயக்கா விமானத்தளம் என்பன தாக்கப்பட்டமை பொருளாதாரத்தில் பாரிய பாதிப்பையும் நிச்சயமற்ற நிலைமையையும் ஏற்படுத்தியது.

ஐ.தே.கட்சியின் அணுகுமுறையானது யுத்தம் தொடர்ந்தாலும் பொருளாதாரத்தைத் தாங்கிச் செல்லக்கூடிய ஒன்றாகவே இருந்துள்ளது. தற்போது ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கமும் இவ்வாறான ஒரு திட்டத்தை வைத்துக் கொண்டே சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதாக கருதப்படுகின்றது.

தற்போதைய சமாதான சூழ்நிலையில் வரவு செலவுத்திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டு நீண்டகாலத்திற்கு வருமானத்தைத் தரக்கூடிய முதலீடுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என அரசு கருதுகின்றது.

அதேவேளையில் யுத்தத்துக்காக கடந்த ஆண்டில் ஒதுக்கப்பட்டதை விட சற்றுக் குறைந்த தொகை தான் ஒதுக்கப்பட்டுள்ளது. இது அரசு யுத்தத்துக்கும் தயாராகவே உள்ளது என்பதைத்தான் வெளிப்படுத்துகின்றது.

ஈழநாட்டில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்களும் ஐரோப்பிய மற்றும் அவுஸ்திரேலிய நாடுகளில் வெளியாகும் பதிப்புக்களிலும் இடம் பெறும் என்பதையும் ஐரோப் பிய வானொலியில் உடனுக்குடன் இலவசமாக ஒலிபரப்பாகும் என்பதையும் அறியத்தருகின்றோம். மேலதிக விபரங்கள் தேவைப்படின் தொடர்பு கொள்ளவும்.

# பாலா செல்வம் நகை மாளிகை

## SALE மலிவு விற்பனை

**ஏப்ரல் 26 முதல் மே 05, 2002 வரை**



- 1987ம் ஆண்டில் இருந்து எமது இறுக்கமான வாடிக்கையாளர்களுக்கு ஓர் இங்கிதமான மலிவு விற்பனை.
- ரொரன்றோ மாநகரில் மலிவு விற்பனை என்று சொல்லி ஏமாற்றும் வியாபாரத் தந்திரம் அல்ல இது.
- எங்கள் இலாபத்தின் முழு வீதத்தையும் நிறுத்திக் கொண்டு உங்கள் நிறைவான மகிழ்ச்சிக்காகவும் எமது நீண்டகால வாடிக்கையாளருக்காகவும் நாம் தரும் ஓர் அரிய வாய்ப்பு.
- துரித பணமாற்றுச் சேவையில் நேர்மையானவர்கள் இன்று தூய்மையான சிங்கப்பூர் தங்கத்தை மலிவு விலையில் தருகின்றார்கள்.
- பழைய நகைகள் மாற்றித் தரப்படும். சிங்கப்பூரிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய டிசைன்களையும் எண்ணற்ற தெரிவுகளையும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

வாரத்தில் 7 நாட்களும்
காலை 9:00 மணி முதல்
மாலை 9:00 மணி வரை




**பாலா செல்வம்**
**நகை மாளிகை**

**2480 Eglinton Avenue East, # 06**
*(Midland Plaza - Midland & Eglinton)*
Scarborough, ON M1K 2R5

**(416) 264-4000**

© ஈழநாடு விளம்பரம்

# ஸ்டாலினின் பதவியை பறிக்க சட்டசபையில் முயற்சி



(சென்னை)

ஒருவர் ஒரே சமயம் இரண்டு பதவிகள் வகிப்பதைத் தடை செய்யும் சட்ட மசோதா தமிழக சட்டப்பேரவையில் திங்கட்கிழமை தாக்கலானது.

மசோதாவை அறிமுக நிலையிலேயே திமுக உள்ளிட்ட அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒட்டு மொத்தமாக எதிர்த்தன.

சென்னை மாநகர மேயர் ஸ்டாலின் தற்போது சட்டப்பேரவை உறுப்பினராகவும் உள்ளார். இதனால் அவரது பதவிகளில் ஒன்றுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. மசோதா மீது மே 8 இல் விவாதம் நடைபெறுகின்றது.

நடப்புக்கூட்டத் தொடரிலேயே இது தொடர்பான சட்டத்திருத்தம் கொண்டு வரப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா பேரவையில் கடந்த 3 ஆம் திகதி அறிவித்திருக்கின்றார். இது பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியது

இந்நிலையில் மிகவும் பரபரப்புடன் எதிர்பார்க்கப்பட்ட மசோதா பேரவையில் திங்கட்கிழமை தாக்கலானது.

தமிழ்நாடு ஊராட்சிகள் இரண்டாம் திருத்தச் சட்ட மசோதா, தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான திருத்த சட்ட மசோதா ஆகிய இரண்டு மசோதாக்களை உள்ளாட்சித் துறை அமைச்சர் சி.துரைராஜ் அறிமகம் செய்தார்.

மசோதா விபரம் வருமாறு:

சட்டப்பேரவை உறுப்பினராக அல்லது நாடாளுமன்றத்தின் இரு அவைகளில் ஏதாவது ஒன்றில் உறுப்பினராக ஒருவர் இருப்பாரானால் அவர் சிற்றூராட்சியின் தலைவராகவோ துணைத்தலைவராகவோ அல்லது ஊராட்சி ஒன்றியத்தின் மாவட்ட ஊராட்சியின் தலைவராகவோ துணைத் தலைவராகவோ தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் அவ்வாறுஇருந்து வருவதற்கும் தகுதி கிடையாது.

இவ்வாறு இரு பதவிகளில் இருப்போர் தம்முடைய கடமைகளையும் பொறுப்புக்களையும் திறம்பட ஆற்ற இயலாது. எம்.எல்.ஏ., எம்.பி.க்களாக இருப்போர் உள்ளாட்சி அமைப்புப் பதவிகளுக்கு போட்டியிடுவதைத்தடை செய்யுமாறு முறையீடுகள் வந்தன. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் இம்முறையீட்டை அரசின் பரிசீலனைக்கு அனுப்பி வைத்துள்ளது.



## மேயரா? எம்.எல்.ஏ.யா?

இந்த முறையீடுகளை கவனமாகப் பரிசீலனை செய்த பின்பு பேரவை உறுப்பினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளாட்சிப் பதவிகளுக்குப் போட்டியிடுவதை தடுக்க ஊராட்சிகள் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரமுடிவு செய்யப்பட்டது.

இச்சட்டம் அரசிதழில் வெளியிடப்பட்ட 15 நாட்களுக்குள் எம்.எல்.ஏ. பதவி அல்லது எம்.பி.பதவியை ராஜிநாமாச் செய்ய வேண்டும். அவ்வாறில்லாவிடில் மேயர் பதவியை ராஜிநாமாச் செய்யவேண்டும். அவ்வாறில்லாவிடின் மேயர்,துணைமேயர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புப் பதவி பறிக்கப்படும்.

**இந்தியா**

இவ்வாறு மசோதாவில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த இரண்டு மசோதாக்களும் தற்போது தேவையில்லை. இதை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறோம்' என்று ஜி. பழினிச்சாமி (இந்திய கம்யூ), நன்மாறன் (மார்க்சிஸ்ட்), ஜெகவீரபாண்டியன் (பாஜக),ஜி.கே.மணி (பாமக) ஆகியோர் தெரிவித்தனர்.

எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியன் (தமாகா): முழுமையாக ஆய்வு செய்த பின்னரே இந்த மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கவேண்டும். அறிமுக நிலையிலேயே இதை எதிர்க்கிறோம். இம் மசோதாவை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்றார்.

அன்பழகன்(திமுக): ஒருவர் இரு பதவிகளை வகிக்கக்கூடாது என்பது உயரிய கொள்கை .எனினும் அதைவர இருக்கின்ற தேர்தலில் பயன்படுத்தலாம் . ஒரே ஒரு மாநகராட்சி மேயர் பாதிக்கப்படும் விதத்தில் இம் மசோதா அமைந்திருக்கின்றது. இதற்கு உள்நோக்கம் இருப்பதாகக் கருதுவதால் அறிமுக நிலையிலேயே இதை எதிர்க்கின்றோம்.

யசோதா(காங்கிரஸ்): ஒருவருக்கு இரண்டு பதவிகள் இருக்கக்கூடாது என்ற கொள்கை ஏற்புடையது தான். இதை வருங்காலத்தில் வைத்துக் கொள்ளலாம்.இப்போது உறுப்பினர்கள் பலர் உள்ளாட்சிப் பதவிகளில் உள்ளனர். எனவே இந்த மசோதா தேவையில்லை.

விவாதங்களுக்குப் பிறகு குரல் வாக்குமூலம் 2 மசோதாக்களும் தாக்கலாயின.

# குஜராத்தில் மீண்டும் பரவும் வன்முறை

(அகமதாபாத்)

குஜராத்தில் திங்களன்று காவல்துறையினரின் துப்பாக்கிச் சூட்டில் 3 பேரும் வன்முறையாளர்களின் தாக்குதலில் 2 பேரும் கொல்லப்பட்டதையடுத்து 2 நாட்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 21 ஆக உயர்ந்துள்ளது.

அகமதாபாத் மருத்துவமனையில் கத்திக் குத்துக் காயங்களுடன் அனுமதிக்கப் பட்டிருந்த நான்கு பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். 125க்கும் மேற்பட்டோர் வன்முறை மோதல்களில் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

கோம்திபூர், பாபநகர், ரக்கியால் ஆகிய பல்வேறு பகுதியில் திங்களன்று வன்முறை நீடித்தது. மேஷானா மாவட்டம் கடிநகரிலும் கபாட்வஞ் உள்ளிட்ட பகுதிகளிலும் ஊரடங்கு உத்தரவு தொடர்ந்து நீடிக்கின்றது. காவல்துறையினரின் துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் உயிரிழந்தனர்.

அகமதாபாத்தில் காவல்துறைவட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன. அகமதாபாத்தின் சுற்றுவட்டாரப் பகுதியில் வன்முறைக் கும்பல் அமிலம் நிரப்பிய பல்புகளையும் நாட்டு வெடிகுண்டுகளையும் வீசி தாக்குதலில் ஈடுபட்டனர்.இதையடுத்து வன்முறைக்கும்பலைக் கலைக்க காவல்துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

# சென்னை அஞ்சல்:

கோபால் பல்பொடியாரிடம் 35000 ரூபாய் வாங்கிக் கொண்டு இரண்டரைமணி நேரம் பிரபாகரனின் பேட்டியை ஒளிப்பரப்பியது சன் தொலைக்காட்சி அந்த ஒளிப்பரப்பு, சன் தெலைக்காட்சியின் செய்தித்தடத்தில் உலாவந்தது. முதல் தடத்தில் வந்திருந்தால் விளம்பரத் தொகை பல இலட்சங்கள்.

ஏறத்தாழ 30 லட்சம் தொலைக்காட்சி பெட்டிகள் முன் கண்களை விரித்துக் கொண்டு அப்பேட்டியை 100 நாடுகளில் தமிழர்கள் பார்த்தார்களாம்.

துடுப்பு எடுத்து ஆடுவோர் ஓட்டங்கள் எடுக்க, பந்து வீச்சாளர் தடிகளை விழ்த்த, பார்த்துச் சுவைக்கும் கண்களுடன் தமிழக மக்கள் இப்பேட்டியைப் பார்த்தாகச் சன் தொலைக்காட்சி அன்பர் கூறினார். விளையாட்டு நிகழ்ச்சியின் சுவையை மகிழ்வது போல் ஈடுபாடின்றிப் பேட்டியைப் பார்த்துத் தமிழகத்தவர் சுவைத்தனர்.

அதனாலன்றோ புதுவை மற்றும் தமிழகச் சட்டமன்றங்கள், -படை அனுப்பிப் பிடித்து வா, பிரபகரனை- எனத் தனித்தனித் தீர்மானங்களைத் தில்லிக்கு அனுப்பிய போதும் தமிழகத்தில் ஒருபெருமூச்சுக் கூட இல்லை. ஆனால் அதே வாரத்தில் நடிகை மோனால் தற்கொலையை அறிந்த மூன்று தமிழ் இளைஞர் தாமும் மூச்சை அடக்கினர். தற்கொலை செய்தனர்.

ராஜீவ் கொலையில் பிரபகரனுக்குத் தொடர்ப்பு உண்டு என்பதைப் பேட்டியில் மறைமுகமாகக் கூறியதால் தமிழகத்தில் எவரும் பிரபகரனைத் திரும்பிப்பார்க்க மாட்டார் என்கிறார், கதர்ச் சட்டையை மாற்றமாலே காங்கிரஸ், திமுக, மதிமுக, சுயேச்சை எனக் கட்சி மாறிய எழுத்தளாரும் திரைப்படத் தயாரிப்பாளருமான ஒருவர்.

-ரணில் விக்கரமசிங்கா ஒத்துக் கொள்வரா?- எனப் பாலசிங்கத்திடம் கேட்ட பின்பு செய்தியாளரிடம் பதில் சொல்கிறாரே அவ்வளவு விவரம் தெரியாதவரா பிரபாகரன் என்கிறார் இராமச்சந்திரன். மதிமுக வைகோவுடன் நெருக்கமாக இருந்த இவர், இப்பொழுது இருப்பது அதிமுகவில். பிரபாகரனை என்றும் எங்கிருந்தாலும் போற்றுபவர் இவர். இவருக்கே பேட்டி சுவைக்கவில்லையாம். தலைவர் இப்படித் தன் புகழைக் குறைத்து கொண்டரே என்பதில் இவருக்கு வருத்தமாம்.

## பிரபாவின் மாநாடும் தமிழகமும்

பாஞ்சாலியைத் துகிலுரிய முனைந்த பொழுது பாண்டவர் நின்ற காட்சியைப் பாரதி பாஞ்சாலி சபதத்தில் பாடியதைப் பார்க்க வில்லையா? கையறு நிலையிலி நின்றனரே பாண்டவர். அவர்களைப் போல 140 சட்டசபை அதிமுக உறுப்பினரும் பிரபாகரன் தொடர்பான தீர்மானத்தில் கையறு நிலைகொண்டு வரலாற்றுப் பழியைத் தமிழகத்தில் சுமத்தியுளரே என்றார் இராமச்சந்திரன்.

பிரபாகரன் செயல் வீரன், பேச்சாளி அல்ல. 25 ஆண்டுகளில் இருமுறை மட்டுமே செய்தியாளர் முன் தோன்றியவர் பிரபாகரன். அவரிடம் அரசியல் வாடை இருக்காத பேச்சே இருக்கும். மேற்கோளும் உவமை நயமும் கொண்ட கலைஞர் மற்றும் ஜெயலலிதா பேட்டிகளுடன் பிரபாகரன் பேட்டியை ஒப்பிடுவது மடமை என்றார் ஈழத்து உணர்ச்சியாளர் ஒருவர்.

பிரபாகரனை ஈழத்து நரேந்திர மோடி (குஜராத் முதல்வர்) எனப் போற்றிப் பாராரட்டுகின்றனர் நம்ம தொண்டர்கள் என்றார் பாஜகவின் தொடர்பாளர் ஒருவர்.

தொலைக்காட்சி அலைவரிசைகள் பல பிரபாகரனின் பேட்டியைப் பிரபலங்களை வைத்து அலச, நெடுமாறன் தனிக்கூட்டம் போட்டே அலசினார். போடாச் சட்டம் பாயும் என்ற ஜெயின் அச்சுறுத்தலையும் மீறி அலைகடல் போல் திரண்ட தமிழ் உணர்வாளரிடை நெடுமாறன் ஒன்றரை மணிநேரம் பேசினார். இன்றுவரை அவர் கைதாகவில்லை. கைதை எதிர்பார்த்துத் தன் சுற்றுப்பயணங்களையும் தள்ளிப்போட்டு விட்டார்.

தமிழக அரசியல் வாதிகள் பிரபாகரன் பாணியில் பேட்டி கொடுக்கத் தொடங்கலாம் என்றார் இளம் வழக்குரைஞர் ஒருவர். போராளி ஒருவர் மறைவு வாழ்விலிருந்து வெளிவந்தால் பேட்டி இவ்வாறன்றி வேறு எப்படி அமையும் என்பது அவர் கேள்வி?

யானையைக் குருடர் பார்த்த மாதிரி அமைந்த தமிழகக் கருத்துவெளிப்பாடுகள் வேறொரு பரபரப்பை நோக்கி நகர்கின்றன. யாருக்கும் வெட்கமில்லை.

நமது சென்னை நிருபர்

# மரணஅறிவித்தல்



மலர்வு
15.10.1934

உதிர்வு
24.04.2002

## திருமதி துரைச்சாமி கௌரியம்பாள்
### (நவாலி வடக்கு - மானிப்பாய்)

நவாலி வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த திருமதி துரைச்சாமி கௌரியம்பாள் அவர்கள் 24.04.2002 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற இலட்சுமணர் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தசாமியின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சண்முகசுந்தரத்தின் அன்பு மாமியாரும், திரு துரைச்சாமி அவர்களின் அன்பு மனைவியும், பேபி சரோஜா (யாழ்) வரதராஜன் (யாழ்) யோகராசன் (பிரான்ஸ்) யோகராணி (திருமலை) தனராஜன் (கனடா) ஜெயராஜன் (லண்டன்) விமலராணி (ஜேர்மனி) கோமதி (கனடா) கல்யாணி (கொழும்பு) ஆகியோரின் பாசமுள்ள அன்னையும், விஜயரட்ணம், செல்வராசா, லோகநாதன், சந்திரமோகன், பிறேம்தாஸ், புஸ்பதேவி, அருள்மொழி, தயா, ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், தயாபரன், கௌசிகன், பிரியா, துசிகரன், சுகந்தி, சுபா, கிச்சா, சுப்பர், பிரகாசினி, வினோத், அருண், சுஜன், அஸ்வின், லவன்யா, அகல்யா, ஹம்சா, ஜனுஜா ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்: அன்பு மகன், மகள், மருமகன்,
*(கனடா - மொன்றியல்) (514) 856 - 8329 (மகன்)*
*(கனடா - மொன்றியல்) (514) 331 - 0192 (மகள்)*

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
13.09.1930

உதிர்வு
25.04.1997

## திருமதி மாட்டின் பேபி
### (சில்லாலை)

*இனிய இதயமே!*
*இறைவன் அடியில் உறைந்து*
*ஐந்தாண்டுகள் கழிந்தன*
*ஆண்டுகளால் அழியுமோ அன்பு முகம்*
*எட்டுப் பேர் நாம் உயிர்த்திட*
*உயிர் தந்த அன்னையே*
*பாசமாய் உடனிருந்து வளர்ந்தாயே*
*வாடியது எங்கள் மனம்*
*பாசத்தில் ஏங்கி நிற்கின்றோம் தினம்*
*உன் பிள்ளைகள் இங்கே துடிக்கின்றார்கள்*
*உனையிழந்து!*
*விழியோடும் நீரோடும் அழியாத நினைவோடும்*
*வாழ்கின்றோம் அன்னையே*

என்றும் உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்
அன்பு கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# மரண அறிவித்தல்

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பேரானந்தமுத்து சிவனடியான் அவர்கள் 27.04.2002 அன்று ஸ்காபரோ - கனடாவில் இறைவனடி சேர்ந்தார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத் தருகின்றோம்.

அன்னார் மறைந்த கந்தர் சிவனடியான் (இளைப்பாறிய ஆசிரியர் - யாழ்.இந்துக்கல்லூரி, அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயம் ) அவர்களின் அன்பு மனைவியும்

காலஞ்சென்ற குழந்தைவேலு, கதிராசி தம்பதிகளின் அன்பு மகளும்

காலஞ்சென்ற கந்தர் - பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும்

காலஞ்சென்ற அருணாசலம், காலஞ்சென்ற விஞ்ஞானமுத்து, கெங்காதேவி, காலஞ்சென்ற திருச்செல்வம் ஆகியோரின் அன்புச் சகோதரியும்

காலஞ்சென்ற பொன்னம்மா, காலஞ்சென்ற சீவரட்ணம், காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை, பூமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும்

சிவசுந்தரா, பேரானந்தசிவம், தயானந்தசிவம், விமலசுந்தரா, கலைசுந்தரா, சதானந்தசிவம், கீதானந்தசிவம், ஜெயானந்தசிவம், ஜீவானந்தசிவம், ஜெகானந்தசிவம், பாலானந்தசிவம், ரூபானந்தசிவம் ஆகியோரின் அன்புத் தாயாரும்

றொட்றிக்கோ சிங்கராயர், வசந்தா, செல்வராணி, சிவநேசன், யோகேஸ்வரன், அனிலா, றெபேக்கா, நிரஞ்சன், தர்ஷினி, பாமினி, லெயனோர், பிரவீனாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும்

ரேணுகா, ரஞ்சித், கிருலஷ்சுமி, சரதலஷ்சுமி, பஹா, ஸ்கந்தா, அர்ச்சனா,அபர்ணா, ஹரன், குமரன், சாயிஅனோஜன், சாயிபிரசாந், அமீக்கா, பூமிக்கா, ஜோனதன், ஏஞ்சல், சிவசிந்து, சிவஜனனி, அபிலாஷன், அஸ்வின், துளஷி, சங்கவி, ஆதவன், ஆதித்தன், சிவானா, சக்தி ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

*தகவல்களுக்கு - பேரானந்தசிவம் (அவுஸ்திரேலியா) 612 970 63655 தயா (519) 681 - 3483 சதா (416) 335 - 8725 கீதா (416) 293 - 9902 ஜெயா (416) 289 - 7896 ஜெகா (416) 425 - 6135 ஜீவா (519) 685 - 6220. விமலா (416)431 - 2565 கலா (416)614 - 6257*



## திருமதி
## பேரானந்தமுத்து சிவனடியான்

மலர்வு
23.06.1929

உதிர்வு
27.04.2002

# MILLENNIUM LEISURE TRAVELS INC.




அனைத்து பிரயாண வசதிகளும் எம்மால் ஒழுங்கு செய்யப்படும்

ஆசியா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா, வட-தென்-மத்திய அமெரிக்க நாடுகளிற்குக் குறைந்த விலையில் சிறந்த சேவையுடன் உங்கள் பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

எந்த ஐரோப்பிய நாட்டிற்கும் விமானச்சீட்டு முதல் EuroRail Pass, Rental Car வரையில் சிறந்த விலையில் வசதிசெய்து தரப்படும்

இலங்கையிலிருந்து கனடாவிற்கு மட்டுமல்ல, வேறு எந்த நாடுகளிற்கும் பிரயாண ஒழுங்குகள் ஏற்பாடு செய்யப்படும்



**Florida, Cuba, Carribean** நாடுகளுக்குக் குடும்பத்துடனோ தனியாகவோ விடுமுறையைக் கழிக்க விரும்புகிறீர்களா? நியாயமான விலையில் **Package** வசதிகள், **Car Rentals, Cruise** வசதிகளும் அத்துடன் **Disney World Tickets** அமெரிக்க டொலர் பெறுமதியைக் கனேடியன் டொலரில் எம்மிடம் பெறலாம்

நாள்தோறும் எத்தனையோ விளம்பரங்களைப் பார்க்கிறீர்கள். எங்களுடன் ஒருமுறை தொடர்புகொண்டு உங்கள் பயணத்தைத் தொடங்குங்கள்.

விலையிலும் தரத்திலும் சேவையிலும் நீங்கள் மிகப்பெரிய வித்தியாசத்தை உணர்வீர்கள்

பலவருட அனுபவம் கொண்ட எங்கள் பிரதிநிதிகளை உடனே தொடர்பு கொள்ளுங்கள்

**108 Corporate Drive, Suite 8, Scarborough, ON M1H 3H9**

**TEL: (416) 431-9100 FAX: (416) 431-5722**

---

**THE CRISPY MOISTURIZED CHICKEN BY**

**CHESTER FRIED**

**AVAILABLE AT**

**PHALAPPASS**

TAKE-OUT & CATERING
**416-614-9669**

1635 LAWRENCE AVE. W,
UNIT # 5
NORTH YORK, ONTARIO

**CHICKEN TO GO**
**416 248-5999**

நோர்த்யோக் நகரில் உன்னதமான உணவுகளுக்கு **பாலப்பாஸ்.**
ஈழத்தின் சுவைகாண, உணவுகளின் தரம் காண இன்றே நாடுங்கள் **பாலப்பாஸ்.**

உங்களுக்குத் தேவையான அன்றாட உணவுவகைகள், சிற்றுண்டி வகைகள் என நாவிற்கு ருசியான உணவுகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளத் தயாராகுங்கள்

# பாலப்பாஸ்

வெள்ளிக்கிழமை விரதச் சாப்பாடு (5 மரக்கறி, பாயாசம், அப்பளம், மோர்மிளகாயுடன்) — **FRIDAY SPECIAL $ 4.99**

பிரைட் பிஷ் - Fried Fish ............$ 1.99

மாதாந்தச் சாப்பாடு **SPECIAL - $ 299**

சனி, ஞாயிறு தினங்களில் நாவுக்கு ருசியூட்டும் **கடலுணவுக்கூழ்**

100 இடியப்பம் சொதி சம்பலுடன் $ 10.00

குறிப்பிட்ட பகுதிகளுக்கு $25க்கு மேற்பட்ட ஓடர்கள் நேரடி விநியோகம்
Lawrence/Bathurst முதல் Weston/Lawrence வரையான பகுதிகளுக்கு நேரடி விநியோகம்

சிங்கப்பூர் நூடில்ஸ் பாலப்பாஸ் ஸ்பெஷல் கடலுணவு **$ 5.99**

NORTH YORK தமிழ் மக்களின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் திருமண விழாக்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள் உட்பட சகல மங்களகரமான நிகழ்ச்சிகளையும் ஒரே கூரையின் கீழ் ஒழுங்கு செய்து உங்களின் எண்ணங்களை நிறைவேற்றத் தயாராகி விட்டோம்.

**பாலப்பாஸ்**
பார்ட்டி சேர்விஸ் அன்ட் கேற்றரிங்

**PHALAPPASS**

**1635 LAWRENCE AVE. W,**
**UNIT # 5**
**NORTH YORK, ONTARIO**

**(416) 614-9669**
**(416) 248-5999**

# உருளும் உலகில்...

## பத்திரிகையாளர்களும் பணமுடிச்சும்

இப்பொழுதெல்லாம் நமது வாழ்க்கையில் பணம் என்பது முக்கிய பங்கேற்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை. எந்த விடயத்தையும் பணம் கொண்டு சாதித்து விடலாம் என்ற நிலை தோன்றியிருக்கின்றது. உலக நாடுகளில் அடி மட்டம் தொடக்கம் உயர்மட்டம் வரை இந்தப் பணம் என்பது பெரிய பெரிய சித்து விளையாட்டுக்களையெல்லாம் காண்பித்து வருகின்றது.



நைஜீரியாவில் பணத்தை லஞ்சமாகக் கொடுத்து பல விடயங்களைச் சாதிப்பது என்பது பிரச்னைக்குரிய விடயமாகி வருகின்றது. இங்கே சர்வாதிகார ஆட்சி என்பது அழிந்து படிப்படியாக குடியரசு ஆட்சி அமுலுக்கு வரும் நிலையில் லஞ்ச ஊழல் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றது.

ஆபிரிக்க கண்டத்தில் நைஜீரிய பத்திரிகையாளர்கள் தான் சிறப்பாகச் பேசப்படுபவர்கள். இங்கு பன்னிரண்டுக்கு மேற்பட்ட தினசரிகள் வெளியாகின்றன. இதைவிட பல வாராந்த சஞ்சிகைகளும் பிரசுரமாகின்றன.

1960 இல் இந்த நாடு சுதந்திரத்திற்காகப் போராடியபோது பத்திரிகைகளின் பணி பெரிதாக இருந்திருக்கின்றது. சுய ஆட்சி இங்கு வந்த பின்பு நைஜீரியாவின் பத்திரிகைகளும் வானொலிகளும் பெரிதாகப் புகழ் பெற்று ஆபிரிக்காவிலேயே சிறந்தவைகளாகின.

அந்தக் காரணங்களினாலோ தெரியவில்லை. ஏறத்தாழ 30 வருட இராணுவ ஆட்சியில் பல இராணுவ ஆட்சியாளர்கள் பத்திரிகைகளை விலைக்கு வாங்க முயற்சித்திருக்கின்றார். பத்திரிகையாளர்கள் அடித்துத் துன்புறுத்தப்பட்டிருக்கின்றார்கள். சுடப்பட்டிருக்கின்றார்கள். இதனால் தலைமறைவாகி இரகசியமாகப் பத்திரிகைகள் அச்சிடப்பட்டிருக்கின்றன.

1999 இல் மக்கள் ஆட்சி மீண்டும் வந்ததும் நிம்மதிப் பெருமூச்சு விட்டவர்கள் பத்திரிகையாளர்கள் தான். எந்தவித நிர்ப்பந்தமும் இன்றிப் பணியாற்றலாம் என்ற நிலை திடீரென்று அவர்களுக்கு வந்து சேர்ந்தது.

பத்திரிகையாளர் மாநாட்டில் அரச அதிகாரிகள் பத்திரிகையாளர்களுக்கு பணம் கொடுத்து அவர்களைத் தம் பக்கம் இழுப்பது இங்கே அடிக்கடி ஏற்படும் நிகழ்வாகும். இங்கே பத்திரிகையாளர்களின் மாத ஊதியம் மிகக் குறைவாக இருப்பதால் இவர்கள் கொடுக்கும் பணம் இவர்களைக் கவர்ந்திழுப்பதில் வியப்பேதும் இல்லை.

பத்திரிகை ஆசிரியரின் அலுவலகத்திற்கு பணம் தொகையாக வந்து சேர்ந்து விடுகின்றது. மூத்த பத்திரிகை ஆசிரியர் ஒருவருக்கும் சில மாதங்களுக்கு ஒரு முறை 200 டாலர் தொகையை அரச அதிகாரிகள் அனுப்பிவைத்து தமக்குச் சாதகமான செய்திகளைப் பிரசுரிக்க வைத்து விடுகின்றார்கள்.

சுதந்திரமாக இயங்கும் பத்திரிகைகளோடு நைஜீரியாவின் ஆட்சியாளர்கள் தொடர்பு கொள்ளத் தயாராக இல்லை. இந்த அனுபவமும் இல்லை. அரச பேச்சாளர்கள் அடிக்கடி பத்திரிகையாளர்களோடு நேர்முகம் காணலில் ஈடுபட மறுத்து வருகின்றார்கள். இதே சமயம் அரச வானொலிகள், தொலைக்காட்சிகள், அரசின் நடவடிக்கைகளை புகழ்ந்துரைக்கும் ஊடகங்களாகவே பணியாற்றி வருகின்றன.

இந்த நிலைமை சீக்கிரம் மாறும் என்று பலரும் நம்புகிறார்கள்?

நம்பிக்கை வீண்போகுமா?

## பதவி ஓய்வும் பாப்பரசரும்

நமக்கு ஒரு வயதெல்லையின் பின்பு நாளாந்த கடமைகளை வழமையான வேகத்தில் செய்யமுடியாத நிர்ப்பந்தம் சூழ்ந்து விடுகின்றது. மூப்பின் ஆதிக்கம் நமது உடலில் பல மாற்றங்களை ஏற்படுத்தி விடுவதால் உடலுக்கு ஓய்வு கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் நம்மை வந்தடைந்து விடுகின்றத. இதன் விளைவாகத் தான் வேலை ஸ்தலங்களில் நமக்கு வயதெல்லை விதித்து ஓய்வு பெற அனுமதித்து ஓய்வூதியமும் தரப்படுகின்றது.



பாப்பரசர் இரண்டாவது ஜோண் போல் தனது 82 வயதிலும் ஓய்வு பெறத் தயராக இல்லை. தன் இயலாமையை மீறி இவர் தன் வழமையான பணிகளை செய்ய முற்பட்டாலும் இவரது உடல் நிலை அதற்குத் தடையாக இருப்பது பலராலும் அவதானிக்கப்பட்டுள்ளது.

வெறும் அவதானிப்போடு நின்று விடாமல் இவர் ஏன் இன்னமும் பதவி ஓய்வு பெறவில்லை என்ற விவாதங்களும் வத்திக்கானின் சில வட்டாரங்களில் இடம் பெற ஆரம்பித்துவிட்டன.

கடந்த குருத்தோலை ஞாயிறன்று பாப்பரசர் தன் வழமையான பணிகளைச் செய்ய முடியாமல் திணறியபோது பலர் இதை நன்றாகவே அவதானித்திருக்கின்றார்கள். இந்த நிகழ்வின் பின்னர் ஒரு கத்தோலிக்க தினசரியின் பத்திரிகையாளர் பாப்பரசரைப் பேட்டி கண்டிருக்கின்றார். இதன் பின்பு பத்திரிகையின் முன்பக்கத்தில் பாப்பரசரின் இயலாமை பற்றி கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. இப்படி இது தொடரலாமா என்று கேட்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலங்களில் பல தடவைகள் தன் நோய்வாய்ப்பட்ட உடல் நிலையையும் மீறி தன் அன்றாடப் பணிகளை முடிப்பதில் பாப்பரசர் வெற்றி கண்டிருக்கின்றார். ஆனால் ஈஸ்டர் காலம் இவரால் அப்படி நடந்து கொள்ளமுடியவில்லை. தள்ளுவண்டியில் இவர் கொண்டு வரப்பட்டிருக்கின்றார். கால்களை கழுவும் முக்கிய சடங்கை இவரால் மேற்கொள்ளமுடியவில்லை. வத்திக்கானின் ராஜாங்க அமைச்சரான கார்டினல் சொடானோவிடமே இந்தப் பணி விடப்பட்டது.

(27 ம் பக்கம் பார்க்க)

## தடுக்கப்படமுடியாத தற்கொலைகள்

நமது தேவைகள் சாதாரண வழிகளில் பூர்த்தியாகாத போது அவற்றை அடைய அசாதாரண வழிகளில் இறங்குவது நமது வழமையாகிவிட்டது. குழந்தை கூட தனக்கு வேண்டியதைப் பெற்றுக் கொள்ள அழுது அடம் பிடிக்கின்றது. அதற்குத் தெரிந்த ஒரேயொரு வழிமுறை அது தான். ஆனால் வளர்ந்தவர்களுக்கோ தமது தேவைகளை அடையப் பல வழிகள் கிடைத்து விடுகின்றன.



தற்கொலைகள் மூலம் தாம் நினைப்பது கிடைக்கவேண்டும் என்ற உந்துதல் இப்பொழுதெல்லாம் ஏற்படத் தொடங்கியுள்ளது. என் உயிர் தொலையட்டும். என் மரணம் மூலமாவாது எண்ணியது கிடைக்கட்டும் என்ற நினைப்பில் இப்பொழுதெல்லாம் தற்கொலை செய்பவர்கள் பட்டியல் நீண்டு கொண்டே போகின்றது.

பாலஸ்தீனியரின் தற்கொலைப்படை உலகப் பிரசித்தி பெற்றது. தம் மரணம் மூலம் நாட்டுக்குச் சுதந்திரம் தேடும் முனைப்போடு வீர மரணம் தேடும் இவர்கள் தொகை அண்மைக்காலங்களில் அதிகரித்த வண்ணமாகவே இருக்கின்றது என்கிறார்கள் அவதானிகள்.

இஸ்ரேல் - பாலஸ்தின மோதலில் முதல் தற்கொலைத் தாக்குதல் 1993 இல் தான் ஆரம்பமாயிற்று. வெடிமருந்துகள் நிரப்பிய வாகனமொன்றை தன் கூட்டாளி சகிதமாக ஓட்டிச்சென்ற 22 வயதான நபுல்சி என்ற இளைஞன் பயணிகளுடன் வந்த இரண்டு பஸ் வண்டிகளின் மீது மோதி தன் உயிரை மாய்த்துக் கொண்டான். இந்தச் சம்பவத்திலவ் 8 இஸ்ரேல் பயணிகள் காயப்பட்டார்கள்.

இச்சம்பவத்தை அப்பொழுது இஸ்ரேல் அதிகாரிகள் பெரிதுபடுத்தவில்லை. பத்தோடு பதினொன்றாக நடந்த சம்பவம் என்றே எடுத்துக் கொண்டார்கள். ஆனால் இத்தொகை இன்று 105 ஆக அதிகரித்து கொல்லப்பட்டவர்கள் தொகை 339 ஆக அதிகரிக்கும் என்று அடியோடு நினைத்திருக்கவில்லை.

அப்பொழுதெல்லாம் தற்கொலை போராளிகளாக மாறியவர்கள் 17 க்கும் 22 வயதுக்கும் உட்பட்டவர்களாக இருந்திருக்கின்றார்கள். திருமணம் செய்யாதவர்களாகவும் எதிர்காலம் இருட்டடிக்கப்பட்டதாகவும் இருந்திருக்கின்றது. வீரமரணம் அடைந்தால் இஸ்லாமிய மதநம்பிக்கையின்படி மோட்சத்தில் உன்னத இடத்தில் இருப்போம் என்று இவர்கள் திடமாக நம்பினார்கள்.

ஆனால் இன்றைய தற்கொலைப் போராளிகளோ வித்தியாசமானவர்களாகி இருக்கின்றார்கள். கடந்த ஆகஸ்டில் ஒரு போசனசாலையில் குண்டை வெடிக்க வைத்து தன்னையும் அழித்து 15 பேரையும் கொன்ற 23 வயதான மஸ்ரி என்பவன் ஒரு பணக்காரத் தந்தையின் மகன். 47 வயதுடைய எட்டுப்பிள்ளைகளின் தந்தை தற்கொலைப் போராளியாக மாறியது கடந்த டிசம்பரில் இடம்பெற்றுள்ளது.

இதையெல்லாம் மிஞ்சும் விதமாக பட்டப்படிப்பை முடித்து திருமணம் செய்ய இருந்த 18 வயதான கல்லூரி மாணவி சென்ற மாதம் ஜெருசலம் சுப்பர் மார்க்கட் ஒன்றில் தற்கொலைப் போராளியாகி உயிரை விட்டுள்ளார்.

கோலம் அடியோடு மாறிவிட்டது நன்றாகவே தெரிகின்றது. கடந்த ஜுன் மாதம் எடுத்த வாக்கெடுப்பு ஒன்றில் 78 வீதமான பாலஸ்தீனியர்கள் தற்கொலைத் தாக்குதல்களை ஆதரித்திருப்பது தெரிந்துள்ளது.

தற்கொலை நிகழ்வுகளும் திருமண வைபவங்கள் போல பாலஸ்தீன பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுகின்றது.

போகிற போக்கில் முழுப் பாலஸ்தீனியர்களுமே தற்கொலை போராளிகளாகி விடுவார்களோ?

## போகாத போதை

மனிதனைப் பிடித்தாட்டும் 'பிசாசுகள்' பல. மதுவின் மயக்கத்தில் வாழ்க்கையை அழித்துக் கொள்பவர்கள் ஏராளம். அதுபோல மாதுகளின் மயக்கத்தில் தம்மை நாசமாக்கிக் கொள்பவர்களுக்கும் பஞ்சமில்லை. இதைவிடப் பல்வேறு பெயர்களில் நடமாடும் போதை வஸ்துக்களுக்கு அடிமையாகிப் போய் சமுதாயத்திற்கு வேண்டப் படாதவர்களாக இருப்பவர்கள் தொகை அதிகம். இத்தொகை காலத்திற்குக் காலம் அதிகரித்துக் கொண்டு போகிறதேயொழிய எந்த வழியிலும் குறைகின்ற ஒன்றாகத் தெரியவில்லை.

ஒப்பியம் என்பது உலக நாடுகளிடையே மிகப் பிரபல்யமாக இருக்கும் ஒரு போதைவஸ்தாகும். இதன் பிடியில் மயங்கிக் கிடப்பவர்கள் கோடி கோடியாக இருக்கின்றார்கள் என்பதால் இதன் உலக சந்தை விலையும் அதிகம். இதனால் இதைப் பயிரிட்டு ஏராளமாகப் பணம் சம்பாதிப்பதில் பலர் குறியாக இருக்கின்றார்கள்.

ஆப்கானிஸ்தான் இந்த ஒப்பியத் தயாரிப்பிற்குப் பயன்படும் செடியான பொப்பியை வளர்ப்பதில் உலகப் பிரபல்யம் பெற்றது. உலக சந்தையில் கிடைக்கும் ஒப்பியத்தில் 70 வீதமான அளவை ஆப்கானிஸ்தானில் தான் உற்பத்தி செய்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்க விடயம். ஆனால் தலிபான் ஆட்சியில் இந்த உற்பத்தியில் பெரிய வீழ்ச்சி ஏற்பட்டு விட்டது. தலிபான் ஆட்சியாளர்கள் இதற்கு தடைவிதித்ததே காரணம்.

இப்பொழுது பழையபடி இங்கு பொப்பி உற்பத்தி செழித்தோங்க ஆரம்பித்துவிட்டது என்கிறார்கள். பூனையில்லா வீட்டில் எலிகளுக்கு கொண்டாட்டம் என்ற நிலை தான்.

ஆப்கானிஸ்தானின் புதிய தலைவர்கள் விட்ட இடத்தில் தொடரும் இந்த போதை உற்பத்தி விவகாரத்தை அடியோடு அழிப்பது என்று உறுதி பூண்டிருக்கின்றார்கள்.

(27 ம் பக்கம் பார்க்க)




24

# சந்திரிகா ஆட்சிக்கு வந்த போது தமிழ்மக்களின் நம்பிக்கை!

## அனிதா பிரதாப்



மூன்று வருடங்களின் பின்பு பிரபாகரனை மீண்டும் நான் சந்தித்தேன். சந்திரிகா குமாரதுங்கா அதிகாரத்திற்கு வந்த சமயம் அது. சமாதானத்திற்கான மக்கள்ஆணை என்று பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று இலங்கையின் ஜனாதிபதியாக அவர் அச்சமயமே பொறுப்பேற்றிருந்தார். இலங் கையில் புதிய நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. சமாதானம் தொடர்பான சந்திரிகாவின் ஈடு பாடு. சமாதான உடன்பாட்டை மேற்கொள் வதற்கான விருப்பம் என்பன யாவரும் அறிந்ததொன்று. அவருடைய முயற்சியில் வெற்றியடைய வேண்டுமென ஒவ்வொரு வருமே வாழ்த்தினார்கள். பிரான்ஸில் கல்வி கற்றிருந்த சந்திரிகா தாராளவாதச் சிந்தனை கொண்டவர்.

அவருடைய கணவர் இடதுசாரிகளின் ஆதரவைப் பெற்றிருந்தவர். சந்திரிகாவும் கொள்கைப் பற்றுக் கொண்டவராக இருந் தார். அத்துடன் யாவரிலும் பார்க்க இலங்கையின் துன்பியல் அரசியலில் அவருடைய தந்தையும் கணவனும் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். வன்செயல் தொடர் வதை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று அவர் விரும்பியிருந்தார்.

நவம்பர் 1994 இல் சந்திரிகாவைப் பேட்டி கண்ட பின் பிரபாகரனைச் சந்திப்பதற்காக யாழ்ப்பாணம் சென்றேன்.

மிக அதிகளவில் துரோகமிழைக்கப பட்ட மக்களையும் இந்த எதிர்பார்ப்பு பூச்சி நன்றான கடித்திருப்பதை நான் புரிந்து கொண்டேன். அங்கு கடைகள் திறந்திரிந்த விதம் நம்பிக்கையை ஏற்படுத்துவதாகக் காணப்பட்டது. மக்கள் அச்சமின்றி நட மாடிய விதம் அவர்கள் கதைத்த மாதிரிகள் யாவற்றுக்கும் மேலாக அவர்களின் கண் களில் தெரிந்த நம்பிக்கைகள். யாவற்றிற்கும் மேலாக மிகநீண்ட காலத்திற்குப் பின்பே தலையை நிமிர்த்திக் கொண்டு தமிழ்மக்கள் வீதிகளில் சென்றார்கள். அச்சத்தாலும் சோகத் தாலும் தலைகளைத் தாழப்போட்டவாறே அப்பகுதிகளில் மக்கள் வீதிகளில் நடந்து சென்ற தன்மை மாறியிருந்தது.

சந்திரிகா மீது தமிழர்கள் இப்போது நம்பிக்கை கொண்டிருந்தனர். யாழ்ப்பாணத்தில் அவர் மிக பிரசித்தி பெற்றவராக இருந்தார். அவரின் உருவப்படங்கள் பொதுஇடங்களில் தொங்க விடப்பட்டிருந்தன. சுவரொட்டிகள் வீதிகளில் ஒட்டப்பட்டிருந்தன. சந்திரிகாவின் பெயர் சூட்டப்பட்ட சேவைகள் நன்கு விற்பனையாகின.

இந்தப் புதிய சமாதான சூழ்நிலையால் நானும் கொஞ்சம் பீடிக்கப்பட்டேன். ஆனால் பிரபாகரனுடனான சந்திப்பு நோய்த்தடுப்பு மருந்து எடுத்தது போன்றிருந்தது.

யாழ்ப்பாண மக்கள் போரினால் களைப் படைந்து விட்டனர் என்பதைப் பிரபாகரன் மறுத்தார். இராணுவம் சமாதானத்தைத் தடுத்து விடும் எனவும் சமாதானம் தொடர் பான சந்திரிகாவின் ஈடுபாடு குறைந்து விடுமெனவும் பிரபாகரன் கூறினார்.

ஏற்கனவே எனக்கிருந்த சந்தேகங்களுக்கு இது மேலும் வலுவூட்டியது. யுத்தநிறுத்தம் தற்காலிகமானது. ஆம்பிக்கப்பட்டாலும் சமாதானப் பேச்சுக்கள் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். ஏனெனில் நான் அவரைச் சந்தித்த முதல்நாள் ஈழம் தொடர் பாக அவர் கொண்டிருந்த உறுதிப்பாட் டிலே தொடர்ந்தும் இருந்தார்.

பிரபாகரன் முற்கூட்டியே தெரிவித்தது நடந்துவிட்டது. மோதல் நிறுத்தம் நான்கு மாதங்கள் மட்டுமே நீடித்தது. 1995 ஏப்ரலில் வெடித்த மூன்றாம் ஈழப்போர் தொடர்கின் றது. இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் வரலாற்றுப் பகைவர்களாக மீண் டும் மாறினர்.

இரு சாராரும் சில வெற்றிகளைப் பெற்றிருந்தனர். சில தோல்விகளையும் எதிர்கொண்டனர். சுமார் 2 ஆயிரம் பேரை இழந்து 1995 இல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதில் ஜனாதிபதி குமாரதுங்க வெற்றி கண்டார். இந்த வழியில் தனது வாழ்வையே அநேகமான இழந்தார். படு கொலை முயற்சியொன்றில் தனது கண்ணை இழந்தார்.

புலிகளின் தாக்குதல் பட்டியலில் முதலா வது நபராக இருக்கின்றார். இது அவரை உலகிலேயே மிக ஆபத்துச் சூழ்ந்த பெண் ணாக உருவாக்கியிருக்கின்றது. கணிச மான காலப்பகுதியில் டசின் கணக்கில் புலி களின் தற்கொலைப் படைப்பிரிவைச் சேர்ந்த கரும்புலிகள் கொழும்பில் சுற்றித் திரிந்தனர். அவர்களில் சிலரைப் பொலிசார் கைது செய்தனர் ஆனால் பலர் பிடிபடவில்லை. அவரின் ஒவ்வொரு நகர்வையும் இரகசியமாகக் கண்காணிக்கின்றனர்.

பிரபாகரனைப் பின்பற்றுவோரைப் பற்றி ஆராய்ந்தால் பிரபாகரனின் உண்மையான திறமையை விளங்கிக் கொள்ள முடியும். பிடிபட்ட போது ஆயிரக்கணக்கான புலிகள் சயனைட்டை அருந்தியுள்ளனர்.

சித்திரவதைக்குள்ளாக்கப்படுவதைத் தவிர்த்துக் கொள்ளும் நோக்கத்துடன் அதிலும் முக்கியமாக தம்மிடமிருக்கும் தமது அமைப்பின் இரகசியங்கள் வெளிவரா மல் கல்லறைக்குள்ளேயே புதையுண்டு விடவேண்டுமென்பதாலும் அவர்கள் கைதா னவுடன் சயனைட்டை உட்கொண்டு விடு கிறார்கள். விடுதலைப்புலிப் போராளிகள் அதிகளவில் யாவற்றையும் தெரிந்து வைப்ப தில்லை. எது தேவையோ அதனைத் தெரி ந்து கொண்டிருக்க வேண்டும் என்ற அடிப் படையில் அவர்கள் செயற்படுகின்றனர்.

தமது விலை மதிக்க முடியாத உயிரைப் பணயம் வைக்கும் குழுவைப் பிரபாகரன் உருவாக்கியுள்ளார். குறிப்பிட்ட நோக்கத்திற் காக உயிரைப பயணம் வைப்பதென்பது அசாதாரணமானதொன்றாகும். கேள்விக்கிட மின்றிய விசுவாசத்திற்குத் தலைமை தாங்கு வதனால் அவரை (பிரபாகரன்) பின்பற்று வோர் தற்கொலை வெய்த கொள்ளவும் தயாராக உள்ளனர். அடிக்கடி உடலிலும் மார்பிலும் வெடிபொருட்களைக் கட்டிக் கொண்டு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார் கள்.

பிரபாகரன் தொடர்பாக விசேடமான தொன்று இருக்கிறதென்றால் அதற்குச் சமமானதாக விசேடமான அம்சமொன்று அவரைப் பின்பற்றுவோரிடமும் இருக்கி ன்றது. அவர்கள் அதிகம் பேசாதவர்களாக ஒழுக்கமுடையவர்களாக மிக எளிமையான பழக்க வழக்கமுடையவர்களாக இருக்கின் றனர்.

மிகச் சாதாரணமான வாழ்க்கையை மேற்கொள்கின்றனர். அமைப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின் தமது நண்பர்கள். குடும்பம். வீட்டைத் துறந்து விடுகின்றனர்.

புலிப்படையே அவர்களின் புதிய குடும்பம். புகைப்பிடிப்பதற்கோ குடிப்ப தற்கோ பாலியல் உறவில் ஈடுபடவோ அவர் களுக்கு அனுமதி இல்லை. அவர்களின் பெறுமதியான பரிசு அவர்களின் ஆயுதமே. ஏ.கே 47 அநேகமாக அவர்கள் வைத்திருக் கின்றனர்.

இதனைப் பூஜிக்கச் சொல்லி அவர்களு க்குக் கற்பிக்கப்பட்டுள்ளது. ஆயுதத்தைப் பெறுவதற்காக பத்திற்கும் அதிகமான புலிகளை இழக்கலாமென அவர்களுக்குக் கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இது சில சமயம்உண்மையாக இருக்க லாம். ஆரம்ப நாட்களில் இலங்கை இராணு வக் களஞ்சியங்களைத் தாக்கியே புலிகள் தமது ஆயுதங்களைப் பெற்றுக் கொண்ட னர். ஆனால் சமீப காலங்களில் சர்வதேச ஆயுத விநியோகஸ்தர்களிடமிருந்து புலிகள் ஆயுதங்களைப் பெறுகின்றார்கள். ஆயினும் இந்தமாதிரியான "கதை" தொடர்கிறது)

மிகுந்த ஆர்வத்துடனும் புனிதமான தென்ற உணர்வுடனும் புலிகள் தமது ஆயுதங்களைக் கையாள்கின்றனர். தமது துப்பாக்கிகளை மிகக் கஷ்டப்பட்டும் பிரியத்துடனும் சுத்தப்படுத்துகின்றனர். தீவிரமாகக் காதலிப்பவர் தனது அன்புக்கு ரியவரைத் தட்டிக் கொடுப்பது போன்றது அது. அவர்களின் துவக்கு சயனைட் வில்லையைத் தவிர அவர்களிடமிருக்கும் ஏனைய உடமைகள் மாற்றுடையும் ஒரு சோடி செருப்புக்களுமேயாகும்.

புலிகளின் பாதுகாப்பு இல்லங்களை முற்றுகையிட்ட இலங்கை. இந்தியப் பொலிசார் அங்கு பல ஆயிரக்கணக்கான ரூபா பணதகைக் கண்டெடுத்ததாக அடிக்கடி கூறுகின்றனர். நடவடிக்கைளை மேற்கொள்ளத் தேவையானவற்றைக் கொள்வனவு செய்யவே பணம் கொடுக்கப்படு கின்றது. பாதுகாப்புப் படையினரைத் தாக்குவதற்கோ தற்கொலைத் தாக்குதலு க்கோ இது பயன்படுத்தப்படுகின்றது. சகல செலவீனங்களும் ஒழுங்காக குறிப்பேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கும். ஒரு சதம் கூட கெரில்லா ஒருவரால் தனது சொந்தச் செலவுக்காகப் பயன்படுத்தப்படுவதில்லை. குளிர்பானம். வாழைப்பழம். சொக்லேட் என்பவற்றுக்குக் கூட அது பயன்படுத்தப் படுவதில்லை.

புலிகளின் மிகக் கவனமான செலவீனமும் நேர்மையும் 24 வயது நிரம்பிய குலசீரசிங்கம் வீரகுமார் எனும் விடுதலைப்புலிகளின் தற்கொலைக் குண்டுதாரியை உதாரண மாகக் கொள்வதன் மூலம் வெளிப்படு கின்றது. (தொடரும்)

மீளப் பெறும் பண வெகுமதியுடன் கூடிய காப்புறுதித் திட்டம்

- முதலீட்டுடன் கூடிய ஆயுள் காப்புறுதித் திட்டம்
- தற்காலிக, மிகவும் விலை குறைந்த ஆயுள் காப்புறுதித் திட்டங்கள்
- விபத்து, காயங்கள் மூலம் ஏற்படும் இயலாமைக்கான காப்புறுதித் திட்டங்கள்
- சேமிப்புகளும் முதலீட்டுத் திட்டங்களும்
- Investment Fund
- RSP • RIFs and Annuities

SINCE 1847

One of the best & leading companies in North America

CANADA LIFE

பலதிக பல்வேறு வகையான திட்டங்களை அறிந்து கொள்ள நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன்

சிவ பஞ்சலிங்கம் (B.Comm.)
BUS: (416) 661 - 9155
RES: (416) 321 - 0999
FAX: (416) 661 - 9157
5050 DUFFERIN ST # 218
TORONTO - ONT - M3H 5T5

# வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?



அனுபவசாலியின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்.

வீட்டுப்பெண்ணா அல்லது குழந்தை பராமரிப்பவரா? வேலை செய்கிறீர்களா அல்லது வேலையில்லையா? பள்ளிமாணவரா? எவராயிருப்பினும் உங்களால் நஷ்டஈடு பெற முடியும். நீங்கள் சாரதியாகவிருந்தாலும், பாதசாரியாகவிருந்தாலும், பேரூந்தில் பயணிப்பவரானாலும், சைக்கிளில் செல்பவரானாலும் இன்னும் தவறு உங்களுடையதாக இருப்பினும் கூட உங்களால் நஷ்டஈடு பெற முடியும்.

**உங்கள் அறியாமையால் வாரத்திற்கு**
**$1000.00**
**வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்**

**ஒன்ராறியோவில் மிகப்பெரும் ஸ்தாபனம்**

## கனடாவில் எங்களுக்கு 30 வருடத்திற்கும் அதிகமான அனுபவம் உள்ளது

பண இழப்பீட்டு தீர்வு மற்றும் காப்புறுதி நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடர்வதில் உங்களுக்குள்ள உரிமைகளை அறிய



## UNITED PERSONAL INJURY ASSOCIATES



*The Car Accident People*

**பிழையான அனுபவமில்லாத ஆலோசனைகளுக்குள் விழுந்து விடாதீர்கள்**

### உங்களுக்குத் தெரியுமா?



இந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் **$172,000.00** வரை இழப்பீடாகப் பெறமுடியும். அத்துடன் இதனால் ஏற்படும் வலி, வருத்தம், வேலை இழப்புப் பணம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி மற்றும் பல்வகையான இழப்புகளுக்கு நஷ்டஈடாக பல்லாயிரம் டொலர்கள் வரையில் பெறமுடியும்.

### விபத்து உங்கள் தவறானாலும் கூட

உங்களால் **$172,000.00** டொலர் வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400.00** வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும். மனரீதியாகவோ அல்லது உளரீதியாகவோ பாதிக்கப்பட்டிருப்பின் இன்றே அழையுங்கள் **"யுனைட்டட்"** (நாம் 25இற்கும் அதிகமான மொழிகளில் சேவையாற்றுகிறோம்)

இலவச ஆலோசனைகளுக்கும் தமிழில் தொடர்புகளுக்கும் இன்றே அழையுங்கள்

**தீபன் (416) 505-9804**

- *5255 Yonge Street, Suite 200, North York (South of Finch, Head Office)*
- *257 Dundas Street. E, Unite 1, Mississauga (Dundas and HWY 10)*
- *29 King Street E, Unit 7, Kitchener*






## 78



# ஈழப்பிரச்சனையில் இந்தியத் தலையீடு

# உணவு நிவாரண விநியோகங்களுடன் இந்தியா வகுத்துக் கொண்ட வியூகம்

முரண்பாடுகளுடன் ஆரம்பமாகி அத்துமீறி உணவுப்பொதிகளைப் போட்டதன் மூலம் முரண்பாடுகள் தீவிரமடைந்த இந்திய - ஸ்ரீலங்கா உறவுகள் காலகதியில் ஓரளவுக்கு வழமைக்குத் திரும்பியது என்று சொல்ல முடியாவிட்டாலும் பதற்ற நிலைமை குறையத் தொடங்கியது.

ஜெயவர்த்தனாவின் அமைச்சரவையிலிருந்த அமைச்சர்கள் சிலர் முன்னெடுத்த நடவடிக்கைகளே இதற்குக் காரணம்.

பரஸ்பர இணக்கப்பாட்டுடன் உணவுப்பொருள் விநியோகத்தை மேற்கொள்வதன் மூலம் இந்தியாவுடனான உறவுகளைப் பேணிக் கொள்ளமுடியும் என்பதையும் இந்தியாவின் துணையின்றி இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணமுடியாது என்பதையும் அவர்கள் விளக்கினார்கள்.

அமைச்சர் காமினி திசநாயக்காவே ஜனாதிபதியின் இந்த மனமாற்றத்துக்கு பிரதான காரணமாகக் கருதப்படுகின்றார்.

இவ்வாறான ஒரு உடன்பாட்டுக்கு ஸ்ரீலங்கா அரசு இணங்காத பட்சத்தில் முன்னரைப்போல அத்துமீறி வந்து உணவுப் பொதிகளைப் போட வேண்டியிருக்கும் என இந்தியா விடுத்திருந்த எச்சரிக்கையும் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் இணக்கப்பாட்டுக்கு காரணமாகும்.

இதனடிப்படையில் ஏற்பட்ட இணக்கப்பாட்டைத் தொடர்ந்து ஜூன் பிற்பகுதியில் கப்பல்கள் மூலமாக உணவுப்பொருட்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைப்பதற்கும் இந்திய மற்றும் ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமாக அவற்றை விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஜூன் மாதம் 25 ஆம் திகதி உணவுப் பொருட்களுடன் வந்த காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வந்த இந்தியாவின் முதலாவது கப்பலான 'ஐலண்ட் பிறைட்' என்ற சரக்குக் கப்பலில் இந்தியத் தூதரகத்தின் முதலாவது அரசியல் துறைச் செயலாளர் ஹர்தீப் சிங்பூரி, பாதுகாப்புத் துறை பொறுப்பாளர் கப்டன் குப்தா ஆகியோர் உட்பட பெருந்தொகையான இந்தியப் பத்திரிகையாளர்களும் வந்திருந்தார்கள்.

இந்தப் பத்திரிகையாளர்கள் குடாநாட்டு நிலைமைகளைப் பார்வையிடவும் செய்திகளைச் சேகரிக்கவும் அனுமதிக்கப்பட்டனர். இலங்கைக் கடல் எல்லைக்குள் வந்தவுடன் இலங்கைக்கடற்படையினரே இக்கப்பலுக்கு பாதுகாப்பு அளித்து அழைத்து வந்தார்கள்.

யாழ்ப்பாணத்துக்குள் பிரவேசித்தபோது இவர்களுக்கு தமிழ் மக்களால் பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது. தெல்லிப்பளையிலிருந்து யாழ்.நகர்வரையில் வீதிகள் முழுவதிலும் குழுமியிருந்த மக்களின் வரவேற்புக்கு மத்தியில் இவர்கள் யாழ்.நகரை வந்தடைய நள்ளிரவாகிவிட்டது. வீதிகளை அடைத்துக் கொண்டு மக்கள் நின்றதால் பதினாறு கிலோ மீட்டர் தொலை வந்தடைய இவர்களுக்கு ஐந்து மணி நேரத்துக்கு மேல் சென்றது.

ஆறு மாத காலத்துக்கும் மேலாக தடை செய்யப்பட்ட உணவுப்பொருட்கள் மீண்டும் கிடைப்பதையிட்டு இவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள்.

### உணவுப்பொருள் விநியோகமும் இந்திய அரசின் வியூகங்களும்

இந்திய அரசின் உணவுப்பொருள் விநியோகம் குடாநாட்டில் பெருமளவு பிரச்சாரங்களுக்கு மத்தியில் நடத்தப்பட்டது. இந்திய ராஜதந்திரிகள், செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளின் மேற்பார்வையில் யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் ஏற்பாட்டில் உணவுப்பொருட்களைப் பங்கீட்டு அடிப்படையில் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவே இப்பொருட்கள் விநியோகம் செய்யும் நடவடிக்கைகள் அரசாங்க அதிபரால் முன்னெடுக்கப்பட்டது. மா, பருப்பு, அரிசி, தீப்பெட்டி, சீனி போன்ற பொருட்களே இந்திய அரசாங்கத்தால் முக்கியமாக அனுப்பிவைக்கப்பட்டது.

குடாநாட்டில் காணப்பட்ட உணவுத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு இது ஓரளவுக்கு உதவியது என்பதும் உண்மை.

தமிழ்ப்போராளி அமைப்புக்கள் இந்தியாவின் இந்த மனிதாபிமான நடவடிக்கையை வரவேற்ற அதேவேளையில் சிங்கள அரசியல்வாதிகள் பலரும் இதனைக் கடுமையாக எதிர்த்தார்கள்.

இந்த உணவுப்பொருள் விநியோகம் மற்றும் அதனோடு தொடர்புபட்ட நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக எனஅடிக்கடி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இந்தியத் தூதரக அதிகாரிகளான பூரி மற்றும் கப்டன் குப்தா ஆகியோர் குடாநாட்டில் உள்ள விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதில் வெற்றி பெற்றனர்.

புலிகளின் அரசியல் பிரிவைச் சேர்ந்த திலீபன் மற்றும் யோகி ஆகியோருடனும் மற்றும் முக்கியஸ்தர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி பேச்சுவார்த்தைகளை நடத்தி வந்த இந்திய இராஜதந்திரிகள் முக்கியமாக விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனைச் சந்திப்பதிலும் வெற்றி பெற்றனர்.

இந்தியாவிலிருந்து பிரபாகரன் யாழ்ப்பாணத்துக்கு வந்த பின்னர் விடுதலைப் புலிகளின் தலைமையுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதில் தடங்கல்களை எதிர் கொண்ட இந்தியா இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு விடுதலைப் புலிகளின் தலைமையுடன் மீண்டும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டனர். உணவுப்பொருள் விநியோகத்துடன் இந்தியா அமைத்த வியூகங்களில் இதுவும் ஒன்றாகும்.

### இந்திய தூதரக அதிகாரி பிரபாகரனுடனான சந்திப்பு

இந்தச் சந்திப்புக்களின் முக்கிய கட்டமாக விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனை இந்தியத்தூதரக அரசியல் துறைச் செயலாளர் ஹர்தீப் பூரி யாழ்ப்பாணத்தில் சந்தித்தார்.

இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பிய பின்னர் பிரபாகரனை இந்திய அதிகாரிகள் எவராலும் சந்திக்க முடியாதிருந்த அதே வேளையில் விடுதலைப் புலிகள் மீது அழுத்தங்களைக் கொடுக்கவும் முடியாதிருந்தது.

பண்டிதர் எழுதும் தொடர்

பிரபாகரனுடன் பூரி நடத்திய சந்திப்பு இந்தப் பின்னணியில் தான் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது.

இலங்கை இனநெருக்கடி தொடர்பாக தாம் அமைத்துக் கொள்ளும் வியூகத்துக்குள் விடுதலைப் புலிகளையும் கொண்டு வருவதற்கான அடுத்த கட்ட நகர்வுகளுக்கு ஒரு அத்திவாரமாக இச்சந்திப்பு அமையும் என்பது தான் இந்தியாவின் கணிப்பாக இருந்தது.

பிரபாகரனுடனான சந்திப்பைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலுள்ள புலிகள் அமைப்பின் தலைமையுடன் இந்தியத் தூதரக அதிகாரிகள் தொடர்புகளை வலுப்படுத்திக் கொண்டார்கள்.

இந்தியாவால் வழங்கப்பட்ட உணவுப் பொருட்களின் விநியோகத்தைப் பார்வையிடுவதற்காகவும் மேற்பார்வை செய்வதற்காகவும் என அடிக்கடி கொழும்பு வரும் இந்திய அதிகாரிகள் புலிகளின் முக்கியஸ்தர்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்திச் செல்வதைத் தான் வழமையாகக் கொண்டிருந்தார்கள்.

அப்போதைய நிலைமையில் விடுதலைப் புலிகள் எடுக்கக்கூடிய நிலைப்பாடு என்ன? விடுதலைப் புலிகளின் இராணுவ பலம், மற்றும் அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் தொடர்பில் விடுதலைப் புலிகள் எடுக்கக் கூடிய நிலைப்பாடு என்பன தொடர்பான விடயங்களையிட்டு நாடி பிடித்துப் பார்ப்பதும் இந்திய அதிகாரிகளின் நோக்கமாக இருந்தது.

அத்துடன் தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளிலும் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டார்கள். கொழும்பிலிருந்து பலாலிக்கு ஒரு தடவை வந்த ஹர்தீப் பூரி பலாலி விமானத் தளத்திலிருந்து மூன்று மைல் தொலைவுக்கு நடந்து வந்தே வாகனத்தில் ஏறிவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



### முதலாவது கரும்புலித் தாக்குதல் படை எதிர்கொண்ட பின்னடைவு

உணவுப்பொருள் விநியோகத்துடன் இந்திய அரசு புதிய வியூகம் ஒன்றை அமைத்துக் கொண்ட அதேவேளையில் விடுதலைப் புலிகள் தமது தாக்குதல் நடவடிக்கைகளை புதிய வடிவில் தீவிரப்படுத்தினார்கள். ஜூலை மாதம் ஐந்தாம் திகதி வடமராட்சியில் விடுதலைப் புலிகள் நடத்திய முதலாவது தற்கொலைத் தாக்குதலின் மூலம் அன்றைய தினமும் சரித்திரத்தில் முக்கியமான ஒரு தினமாக அமைந்துவிட்டது.

வடமராட்சி நடவடிக்கையின் போது படையினர் கைப்பற்றி முகாம் அமைத்திருந்த நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் மீதே விடுதலைப் புலிகள் அமைப்பின் முதலாவது கரும்புலியான கப்டன் மில்லர் இத்தாக்குதலை நடத்தினார். வெடி பொருட்கள் நிரப்பப்பட்ட லொறி ஒன்றில் விரைந்த கப்டன் மில்லர் இராணுவ முகாம் மீது மோதிச் சிதறியபோது முகாம் தகர்க்கப்பட்டதுடன் முகாமிலிருந்தும் நூற்றுக்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர்.

பாரிய படைபலத்துடன் குடாநாட்டைப் படையினர் கைப்பற்றினாலும் கூட தற்கொலைப் படையினரின் தாக்குதலுக்கு முன்னால் அனைத்தும் தகர்க்கப்பட்டுவிடும் என்பதை இச்சம்பவம் தெளிவாக உணர்த்தியது.

வடமராட்சியைக் கைப்பற்றிய உற்சாகத்திலிருந்த படையினருக்குப் பெரும் பின்னடைவைக் கொடுப்பதாக இச்சம்பவம் அமைந்தது.

படை பலத்தைக் கொண்டு இப்பிரச்னைக்குத் தீர்வு காணமுடியாது என்பதை இச்சம்பவம் ஸ்ரீலங்கா அரசுக்கு தெளிவான முறையில் உணர்த்தியது.

இவை அனைத்தினதும் பின்னணியில் புதிய திட்டம் ஒன்றுடனான தமது நடவடிக்கைகளை இந்திய அரசு தீவிரப்படுத்தியது.

(மிகுதி அடுத்த வாரம்)

# AFTERCARE

CREMATION & BURIAL SERVICE

இந்துமத பாரம்பரியங்களுக்கேற்ப மரணச் சடங்குகளை நடத்தும் வசதிகளுண்டு. அழகுபடுத்தப்பட்ட விஸ்தாரமான மண்டபம் மற்றும் மேற்பார்வை செய்யப்பட்ட வாகனத் தரிப்பு வசதிகள் உண்டு. ரொரன்ரோ, ஸ்காபரோ, மிஸிஸாகா நகரங்களிலுள்ள எந்த மயான நிலையங்களுக்கும் சேவைகள் செய்து தரப்படும்.

மேலதிக விபரங்களுக்கும் எமது சேவைகள் பற்றிய கைநூலைப் பெறுவதற்கும் எமது வலைதளத்தை (www.aftercare.org) விஜயம் செய்யுங்கள்

நியாயமான கட்டணங்களில் மரணச் சடங்கு மற்றும் தகனக் கிரியைச் சேவைகள்

*Affordable Funeral & Cremation Services*




**416-440-8878**

1097 O'Connor Drive

*(Between Victoria Park & St.Clair)*

www.aftercare.org

24 மணிநேர சேவை



# OPTOMETRIST

## கண் பரிசோதனை நிபுணர்

## டாக்டர் யாழினி கருணாநிதி O.D



கனேடியப் பட்டதாரி., கனடாவிலும் அமெரிக்காவிலும் பயிற்சி பெற்று அனுபவம் உள்ளவர்.

உங்கள் கண்களை முழுமையாகப் பரிசோதித்து தகுந்த கண்ணாடிகளை, அல்லது விழி வில்லைகளைப் ( Contact Lens ) பெற்றுக்கொள்ளலாம்.

கண்களில் ஏற்படும் கோளாறுகளுக்கு தகுந்த சிகிச்சை வழங்கப்படும். அல்லது தகுந்த சிகிச்சைக்கு அனுப்பிவைக்கப்படும்.

OHIP, மற்றும் பிரத்தியேக காப்புறுதி திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.




**DON MILLS - SCARBROUGH இரண்டு இடங்களில் CLINIC நடைபெறுகிறது.**




OHIP and Private Insurance accepted - Evening and weekend appointments available.

**Tel : (416) 429-2548** **Tel : (416) 298-9674**



நூற்றுக்கணக்கான டொலர்கள் பெறுமதியான செயற்கை மருந்துகளுக்கு இலக்காகி மேலும் உங்கள் அழகிய முடியை இழந்துவிட்டீர்களா?

**கவலையை விடுங்கள்**

கனடிய சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெற்று இயற்கை மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பெற்ற

# Vitaplex

## சம்போ அன்ட் கன்டிஷனர்

உங்கள் மனக்கவலையை நிவர்த்தி செய்கின்றது.

தலைமுடி உதிர்தல், சொடுகு, எண்ணைத்தன்மை போன்றவற்றை எளிதில் அகற்றி உங்கள் தலைமயிருக்கு புத்துயிர் அளிக்கின்றது.




குடும்பத்தில் சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை உபயோகிக்கக்கூடிய ஒரே ஒரு சம்போ அன் கன்டிஷனர்

**Vitaplex Shampoo $9.99**
**Vitaplex Conditioner $9.99**
**Vitaplex Shampoo Plus Conditioner $18.99**

Applicable Taxes Extra

## பாவிக்கும் முறை

தலைமயிரை நன்றாக நனைத்தபின் **Vitaplex** சம்போவை சிறிதளவு கையிலெடுத்து தலையில் இட்டு நன்றாக தேய்த்து 30 வினாடிகளின் பின் நன்றாகக்கழுவவும் பின்னர் **Vitaplex**கன்டிஷனரையும் சம்போ போன்று தலையில் வைத்து முழுகவும்.
இவ்வாறு ஒவ்வொரு நாளும் செய்வதால் சிறந்த பலனை வெகு விரைவில் பெறலாம்.

**பலா பலன்கள்**

1. பக்க விளைவற்றது.
2. தலைமயிர் பளபளப்பாகவும், தடிப்பாகவும் வளர உதவும்.
3. மண்டையோட்டில் எவ்வித படிவுகளையும் படியவிடாது.

## கிடைக்குமிடங்கள்

| | | |
|---|---|---|
| **SCARBOROUGH** | | |
| இரா சுப்பர் மார்க்கட் | (Midland & Eglinton) | 416-269-2622 |
| சங்கர் அன் கோ | (Kennedy & Eglinton) | 416-759-5100 |
| சுரபி | (Birchmount & Eglinton) | 416-285-8518 |
| லோட்ஸ் சுப்பர் மார்க்கட் | (Markham & Eglinton) | 416-266-5025 |
| லோட்ஸ் சுப்பர் மார்க்கட் | (New Location) | 416-264-1546 |
| எஸ். பி. இம்போட்டர்ஸ் | (Brimley & Lawrence) | 416-266-3077 |
| நியூ ஸ்பைசி லாண்ட் | (Markham & Sheppard) | 416-292-9769 |
| ஜவ்னா சுப்பர் மார்க்கட் | (Markham & Tuxedo Crt.) | 416-289-8812 |
| யாழ்நகர் ரேடர்ஸ் | (Midland & Ellesmere) | 416-285-0587 |
| யாழ்ரன் மார்க்கட் | (Warden & Finch) | 416-494-9494 |
| டெயிலி நீட்ஸ் | (Pharmacy & Finch) | 416-490-7703 |
| **MARKHAM** | | |
| பிரியாஸ் | (Kennedy & Denison) | 905-944-1229 |
| பிரியாஸ் | (Brimley & Steeles) | 905-415-8501 |
| **BRAMPTON** | | |
| S.T. P. MARKET | (Kennedy / Steeles) | 905-455-3483 |
| **MISSISSAUGA** | | |
| தர்ஷனாஸ் | (Dundas & HWY 10) | 905-270-7576 |
| தர்ஷனாஸ் | (Field Gate & Bloor) | 905-625-8152 |
| **TORONTO** | | |
| துவாரகாஸ் | (Victoria Park & Eglinton) | 416-757-1091 |
| நிகல் குறோசரி | (Victoria Park & St. Clair) | 416-755-6724 |
| றோயல் குறோசரி | (Victoria Park & Danforth) | 416-693-8078 |
| யாழ் சுப்பர் ஸ்ரோஸ் | (Wellesley & Parliament) | 416-923-9806 |
| தனா சுப்பர் மார்க்கட் | (Queen & Jemeson) | 416-534-7770 |
| பாலா பிறதர்ஸ் | (Landsdowne & Bloor) | 416-532-6809 |
| ஏஜிபி | (Landsdowne Subway) | 416-531-3306 |
| **ETOBICOKE** | | |
| சுபினா சுப்பர் மார்க்கட் | (Keele & Sheppard) | 416-638-9554 |
| ஐயம்ஸ் குறோசரி | (Jane & Finch) | 416-636-0884 |
| உதயாஸ் | (Kipling & Steeles) | 416-740-7971 |
| **MONTREAL** | | |
| மார்சே மாருதி | (155 Jean Talon East) | 514-270-9511 |
| மார்சே எமி | (6455 Victoria Ave.) | 514-731-5368 |
| மார்சே துர்க்கா | (Parc Metro) | 514-276-9262 |
| மார்சே அலெக்ஸாண்டியா | (Cote Desneiges) | 514-737-0612 |
| மார்சே மெயில்ஸ் | (Sauve / St. Laurent) | 514-389-5236 |
| மார்சே A.M.R. | (Cote Vertu / Sauve) | 514-334-6737 |

# சித்ரபானு புத்தாண்டுப் பலன்கள்

## கடகம்



**பொது:** எல்லா வகையிலும் லாபமான ஆண்டு இது. பல நல்ல காரியங்கள் வீட்டில் நடக்கும். கணவன் மனைவிக்குள் நல்லுறவு நீடிக்கும். நல்லவர்களின் ஆதரவு கிடைக்கும். உங்களை ஆதரிக்கப்போகும் நபருக்கு பெரியதொரு ஏற்றம் உண்டாகும்.

**பெண்களுக்கு:** கணவருக்கு உயர்வு உண்டாகும். லாபம் அதிகமாகும். வெளியூர்ப் பயணங்கள் லாபம் தரும். உடல் நிலையில் இருந்து வந்த பிரச்னைகள் தீரும்.

**மாணவர்களுக்கு:** திடீரென்று படிப்பில் ஆர்வம் உண்டாகும். முன்னேற்றம்வரும். பெற்றோர்களின் உதவி கிடைக்கும். நண்பர்கள் உதவுவார்கள். சின்னச் சின்ன அதிர்ஷ்டங்கள் மகிழ்ச்சி தரும்.

**வர்த்தகர்களுக்கு:** பெரிய பெரிய முன்னேற்றங்கள் உண்டாகும். திடீர் லாபம் உண்டு. சிறிது முயற்சி செய்தாலும் கூடப் பெரிய இலாபங்கள் வரும். உங்களுக்கு கீழே வேலை செய்பவர்கள் மிகவும் நல்ல முறையில் ஒத்துழைப்பார்கள்.

**உத்தியோகத்தர்களுக்கு:** உங்களுடன் வேலை செய்பவர்கள் உதவுவார்கள். மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். ஓரளவுக்கு சம்பள உயர்வு கிடைக்கும். மனதில் இருந்த கவலைகள் நீங்கும். உழைப்புக்கேற்ற பலன் கிடைக்கும்.

**கலைஞர்களுக்கு:** இப்போது செய்யும் முயற்சிகள் பிரமாதமாக பலனளிக்கும். இவை தான் எதிர்கால முன்னேற்றத்துக்கு வித்தாகும். வெளியூர்,வெளிநாடு என்று போவீர்கள்.உங்களின் பெருமையும் புகழும் ஓங்கும்.

**அதிர்ஷ்ட திகதிகள்:2,3,9**
**அதிர்ஷ்ட கிழமை :**
**திங்கள்,வியாழன்,**
**அதிர்ஷ்ட திசை: வடக்கு**
**அதிர்ஷ்டக் கல்: முத்து**

**ஏப்ரல்:** திட்டமிட்டபடி எல்லாம் நிறைவேறும். வீண் கவலை வேண்டாம். தொட்டதெல்லாம் வெற்றியாகும். பிறருக்கு உதவி செய்ய வாய்ப்பு கிடைக்கும். நல்லதே செய்வீர்கள்.குழந்தைகள் வாழ்வில் முன்னேற்றம் ஏற்படும். அவர்களால் உங்களுக்கும் உங்களால் அவர்களுக்கும் நன்மை உண்டாகும்.

**மே:** இலாபம் குவியும். பல வழிகளில் பணம் வரும்.நினைத்ததெல்லாம் வெற்றியாகும். பந்தயங்களில் வெற்றி கிட்டும். எந்த வியாபாரம் தொடங்கினாலும் இலாபம் இருக்கும்.

**ஜூன்:** குடும்பத்தில் ஒரு சுபகாரியம் நடக்கும். சகோதரர்கள் உறவினர் குழந்தைகள் என்று எல்லோரும் உங்களுடன் ஒத்துழைப்பார்கள். இத்தனை காலம் இருந்து வந்த சிரமங்கள் விலகும். மருத்துவச் செலவு அதிகமாகும். பதற்றத்தைத் தவிர்க்கவும்.

**ஜூலை:** அலுவலகத்தில் பொறுப்புக்கள் அதிகமாகும். சம்பள உயர்வு,பதவி உயர்வு என்று நீங்கள் பலகாலம் எதிர்பார்த்த விடயங்கள் பலிதமாகும். புதிய சொத்துக்கள்சேரும். இடமாற்றம் உங்கள் விருப்பம் போல் அமைய வாய்ப்புண்டு.

**ஆகஸ்ட்:** அலைச்சல் அதிகமாகும். சந்தோஷம் இருக்கும். ஏனெனில் லாபம் உண்டு. உங்களுக்கு கீழ் வேலை செய்பவர்கள் சிறு சிறு பிரச்னைகளை ஏற்படுத்தினாலும் உங்களை வீழ்த்தமுடியாது.

**செப்டம்பர்:** எதையும் பொறுமையுடனும் நிதானத்துடனும் அணுகவும். யாரோடும் வீண் மனஸ்தாபம் வேண்டாம். யார் குடும்ப விவகாரத்திலும் தலையிட வேண்டாம். இப்போதைக்கு பிரச்னைகள் சுமுகமாகத் தீர்ந்தாலும் பின்னர் பிரச்னை வரும்.எனவே அவதானம் தேவை.

**அக்டோபர்:** பொறுமையும் சகிப்புத் தன்மையும் அவசியம் தேவை. குடும்பத்தில் நல்ல நிகழ்ச்சிகள் நடக்கும். சற்றே விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. குழந்தைகளால் மகிழ்ச்சிகள் ஏற்படும். உறவினர் ஒத்துழைப்புத் தருவர்.

**நவம்பர்:** நண்பர்கள் உறவினர்கள் உதவியால் பெரிய நல்ல காரியம் வீட்டில் நடக்கும். தொழிலில் முன்பிருந்த மந்த நிலை நீங்கும். சுறுசுறுப்புடன் செயற்படவும்.

**டிசம்பர்:** கணவன் மனைவிக்கிடையே பிரச்னைகள் தோன்றலாம். பொறுமையை கடைப்பிடிக்கவும். குடும்ப ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**ஜனவரி:** செலவினங்கள் அதிகமாகும். கவலை வேண்டாம். வரவும் அதிகமாகும். கலைஞர்களுக்கு பெரிய நன்மை ஏற்படும். உதவி கேட்டு வருபவர்களையிட்டு எச்சரிக்கை தேவை.

**பெப்ரவரி:** வெப்பம் சம்பந்தமாக உடல் நிலை பாதிப்படையும். அரசாங்கத்தின் உதவிகள் கிட்டாது. மருத்துவச் செலவு அதிகமாகும். பிள்ளைகளால் மனக்கவலை தோன்றும்.

**மார்ச்:** வெளிநாடு என்று போவீர்கள். பயணத்தால் லாபம் வரும். பெரியவர்களின் ஆசி கிட்டும். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகமாகும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் அமைதி நிலவும்.

## சிம்மம்



**பொது:** இத்தனை காலம் இருந்த அதிர்ஷடங்கள் கொஞ்சம் குறைவது போல் தோன்றினாலும் கவலைப்படத் தேவையில்லை. உங்களின் தெய்வவழிபாடும் நம்பிக்கையும் நீங்கள் செய்யும் பரிகாரங்களும் உங்களுக்கு நன்மைகளை அள்ளித்தரும்.

**பெண்களுக்கு:** கணவன் மனைவிக்குள் ஓரிரு பிரச்னைகள் வந்தால் பெரிதுபடுத்த வேண்டாம். கணவன் வீட்டாருடன் சற்று அனுசரித்துப்போகவும்.

**மாணவர்களுக்கு:** முயற்சி செய்து படித்து உங்கள் எதிர்காலத்தை வளம்படுத்தவேண்டும்.

**வர்த்தகர்களுக்கு:** கடந்த வருடத்தில் லேசான முயற்சியிலேயே பலனைப் பெற்றீர்கள்.ஆனால் இந்த வருடம் கடின உழைப்பினாலேயே பலன்களைப் பெறக்கூடியதாக இருக்கும்.

**உத்தியோகத்தர்களுக்கு:** எதிரிகளின் தொல்லை மீண்டும் தலை தூக்கினாலும் உங்களுக்கு பாதிப்பு ஏற்படாது. மேலதிகாரிகளின் அன்பைப் பெறுவீர்கள். நல்ல செய்திகள் கிட்டும்.புதிய வேலை கிடைக்கும்.

**கலைஞர்களுக்கு:** உங்களுடைய திறமைக்கு மதிப்பும் மரியாதையும் ஏற்படும்.

அதிர்ஷ்ட திகதிகள்: 1,10,19,28
அதிர்ஷ்ட கிழமை: ஞாயிறு
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு
அதிர்ஷ்ட திசை: கிழக்கு
அதிர்ஷ்டக் கல்: மாணிக்கம்

**ஏப்ரல்:** குடும்பத்தில் சிறுசிறு சச்சரவுகள் வரலாம். பெற்றோரின் உடல் நலனில் கவனம் தேவை. குறிப்பாகத் தாயாரை கவனிக்கவும். லாட்டரி பந்தயங்களில் வெற்றி கிட்டும். அதிர்ஷட வாய்ப்புக்கள் அதிகமாகும்.

**மே:** அலுவலகத்தில் விதவிதமான நபர்களை சந்திப்பீர்கள். வெளிநாடு செல்லலாம். இடமாற்றம் ஏற்படும்.

**ஜூன்:** சின்னச் சின்ன பிரச்னைகள் ஏற்படும்.எனினும் இறைவழிபாடு அவற்றை நீக்க உதவும். மாணவர்களுக்கு முன்னேற்றம் இருக்கும். பெரிய படிப்புக்கள் கிட்டும்.

**ஜூலை:** எதிரிகள் காணாமற் போவர். கலைத்தொழிலில் இருப்பவர்களுக்கு பெயர் புகழ் அதிகமாகும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவதற்கு முன்னர் அவதானமாக இருக்கவும்.

**ஆகஸ்ட்:** பணத்தட்டுப்பாடு ஏற்படும். சேமிக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கு சிரமம் இருக்காது.வியாபாரிகளின் நிலை உயரும். புதிய வீடு நிலம் வாங்கும் சந்தர்ப்பம் கிட்டும்.

**செப்டம்பர்:** குடும்பத்தில் ஒற்றுமை நிலவும்.யாருக்கும் வாக்கு கொடுக்கவேண்டாம். நீங்க எதிர்பார்த்த உதவி கிடைக்காது. பதற்றம் வேண்டாம்.

**அக்டோபர்:** பல வழிகளில் இலாபம் கிட்டும். நன்மைகள் அதிகமாகும். குழந்தைகளால் பெருமையும் மகிழ்ச்சியும் ஏற்படும். மனைவியின் உடல் நிலையில் கவனம் தேவை.

**நவம்பர்:** பெரியவர்களின் ஆலோசனைகளை கேட்டு நடக்கவும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கிட்டும்.

**டிசம்பர்:** கோபத்தினால் திடீர் முடிவுகளை மேற்கொள்வீர்கள். மற்றவர்களின் பேச்சை நம்பவேண்டாம். பணம் சேரும். அலுவலகத்தில் மதிப்பு உயரும். மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள்.

**ஜனவரி:** நண்பர்களின் உதவியால் நன்மை நடக்கும். வெளிநாடு போக வாய்ப்புண்டாகும். கலைஞர்களின் தொழில்கள் விருத்தியாகும்.

**பெப்ரவரி:** நல்லவர்கள்,பணக்காரர்கள், நீங்கள் மதிக்கும் நபர்கள் ஆகியோரின் உதவி கிட்டும். அரசியலில் உள்ளவர்களுக்கு சற்று சிரமமான காலம். பொறுமையு ம் இறைவழிபாடும் பலன் தரும்.

**மார்ச்:** பெரிய திருப்பங்கள் வாழ்வில் நடக்கும். பெரிய முடிவெடுக்கவேண்டிய தருணம் இது. தவறுகள் நேர வாய்ப்பில்லை. நல்லவர்கள் உதவுவார்கள். பிரச்னைகள் நீங்கும்.

## கன்னி



**பொது:** பலத்த கஷ்டங்களை அனுபவித்தீர்கள். போன வருடம் ஏற்பட்ட கஷ்டங்களைசமாளித்துவிட்டீர்கள். எனவே இந்த ஆண்டு உங்களுக்கு சிறப்பான பலன்களைத்தரும்.

**பெண்களுக்கு:** வருமானம் அதிகமாகும். புதிய பொருட்கள்,நகைகள், வீட்டு உபகரணங்கள் வாங்குவீர்கள். நீண்ட கால ஆசைகள் பலிதமாகும். நல்லவர்களின் உதவி உண்டு.

**மாணவர்களுக்கு:** கடந்த வருடம் பலனளிக்காத விடயங்கள் இந்தவருடம் பலன் கொடுக்கும்.உங்கள் முயற்சிக்கேற்ப கல்வியில் முன்னேற்றமடைவீர்கள்.

**வர்த்தகர்களுக்கு:** இதுவரை காலமும் இருந்த நஷ்ட நிலை நீங்கி இலாபம் அதிகமாகும்.

**உத்தியோகத்தர்களுக்கு:** இதுவரை காலமும் எதிர்பார்த்திருந்த பதவி உயர்வு கிட்டும்.உங்களுக்கு இருந்த எதிரிகள் விலகுவர். நன்மைகள் குவியும்.

**கலைஞர்களுக்கு:** இந்த வருடம் உங்கள் திறமைக்கேற்ற பலன் கிட்டும்.

**அதிர்ஷ்ட திகதிகள்: 5,14,28**
**அதிர்ஷ்ட கிழமை: புதன்**
**அதிர்ஷ்ட நிறம்: பச்சை**
**அதிர்ஷ்ட திசை: வடக்கு**
**அதிர்ஷ்ட கல்: மரகதம் (பச்சை)**

**ஏப்ரல்:** வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான திருப்பங்கள் ஏற்படும். நம்பினவர்கள் கைவிடமாட்டார்கள். எதிரிகள் பணிந்து போவர். பெரியோர் உதவி கிட்டும்.

**மே:** புதுப்புது வேலைகள் ஏற்படும். தொட்டதெல்லாம் பொன்னாகும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கிட்டும். நல்லவர்களின் உதவி கிட்டும்.

**ஜூன்:** தெய்வ வழிபாடுகளில் ஈடுபாடு அதிகமாகும். விருந்து கேளிக்கைகளில் பங்கு கொள்வீர்கள்.
சம்பள உயர்வு கிட்டும்.

**ஜூலை:** உறவினர்கள் மீண்டும் வந்து சேர்வார்கள். சொத்து சேரும். தந்தை வழி உறவினர்களால் உதவி கிட்டும். அரசாங்க உதவி கிடைக்கும்.

**ஆகஸ்ட்:** நண்பர்களால் பெரிய உதவிகள் கிட்டும். காதல் ஈடுபாடு ஏற்படும். வெற்றி சுலபமாகக் கிடைக்கும். சகோதரர்கள் உதவுவார்கள்.

**செப்டம்பர்:** வரவேண்டிய கடன் பாக்கிகள் வசூலாகும். உங்கள் கடன் பழுவும் குறையும். பணவரவு அதிகமாகும். மாற்றங்கள் நீங்கும். நல்லவர்களின் உதவி கிட்டும்.

**அக்டோபர்:** அலுவலகத்தில் சாதகமான சூழ்நிலை உண்டாகும். இத்தனை காலம் தொல்லை கொடுத்து வந்த எதிரிகள் காணாமற்போவர். புதிய பொருட்கள் வாங்குவீர்கள். திருமணம்போன்ற சுபகாரியங்கள் வீட்டில் நிகழும்.

**நவம்பர்:** உடன் பணிபுரிவோரால் தொல்லைகள் தோன்றும். வெற்றி கிட்டும். இயல்பான வாழ்க்கையில் பாதிப்பு இருக்காது. சேமிப்பு அதிகமாகும்.

**டிசம்பர்:** வேண்டியவர்களுக்காக செலவு செய்யவேண்டியிருக்கும். சுபச் செலவுகள் உண்டாகும். நண்பர் உறவினர் சுகமடைவர். பிறர் உதவி அதிகமாக இருக்கும்.

**ஜனவரி:** செலவினங்கள் அதிகமாகும். நல்லவர்களின் உதவியால் பெரிய பிரச்னைகளை சுலபமாகத் தீர்க்கலாம். உடல் நலத்தில் கவனம் தேவை.

**பெப்ரவரி:** தேவையில்லாத குழப்பங்களை மனதில் போட்டுக் குழப்பவேண்டாம். உறவினர் ஒத்துழைப்பு இருக்கும். புதிய திட்டங்கள் நிறைவேறும்.

**மார்ச்:** வியாபாரம் பெருகும். செலவினங்கள் இருந்தாலும் முதலீடுகள் அதிகமாகும். நிறைய லாபம் கிட்டும். அதிர்ஷ்ட வாய்ப்புக்களும் ஏற்படும்.

(மிகுதி அடுத்த வாரம்)

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
11.02.1943

உதிர்வு:
27.04.2000

திதி:
03.05.2002

## திருமதி சர்வபாக்கியலெட்சுமி ரவி

தாதி உத்தியோகத்தவர், அரசினர் வைத்தியசாலை, வாழைச்சேனை.

அம்மா! எங்களைப் பிரிந்து இன்றுடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகிவிட்டது...
ஆனால், உங்கள் அன்பும் நினைவும் என்றும் எங்களை விட்டகலாது

அன்புக்கு முதல் எழுத்தாய் அறிவுக்குத் தமிழ் எழுத்தாய்
பண்புக்குத் தலை எழுத்தாய் பாசத்திற்குத் திரு எழுத்தாய்
எல்லாமே எங்களுக்காய் என்றும் எம் வாழ்வுக்காய் வாழ்ந்தும்
சொல்லாமல் துயர் தந்து சோகத்தில் தவிக்கவிட்டு
இல்லாமல் இவ்வுலகில் இனி எப்போ நாம் காண்போம்?

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
உங்கள் பிரிவால் வாடும் அன்புச் செல்வங்கள் ஷர்மிளா, ஹேமரூபன். (பிரான்ஸ்)

# மரண அறிவித்தல்



## திருமதி மயில்வாகனம் பூராசாத்தி

மலேயாவைப் பிறப்பிடமாகவும் அராலி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மயில்வாகனம் பூராசாத்தி அவர்கள் 17.04.2002 அன்று சிவபதம் எய்தினார்.

இவர் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - பொன்னு தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற விஸ்வநாதனின் அன்புத் தங்கையும், காலஞ்சென்ற முன்னாள் யாழ். மாநகரசபை சுருக்கெழுத்தாளர் மயில்வாகனம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பொன்னம்மா, காலஞ்சென்ற கனகரத்தினம், தவமணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - பூரணம் தம்பதிகளின் அன்பு மருமகளும், லட்சுமிதேவி (கனடா), கதிர்காமநாதன் (இந்தியா), பூரணாம்பிகை (டோகா), வைத்தியநாதன் (இலங்கை), நாகேஸ்வரி (கனடா), மங்களாதேவி (இலங்கை), கிருபநாதன் (ஜேர்மனி), ஜெயந்தா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தசாமி, ராஜேஸ்வரி, குகநேசன், நாகேஸ்வரி, சிவராஜா, மகேந்திரன், கோணேஸ்வரி, மகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவகாந்தன், காலஞ்சென்ற மோகனகாந்தன், இந்துமதி, மயூரகாந்தன், கஜேந்திரன், சுரேந்திரன், ரமேந்திரன், டஷிந்திரன், ரோஷானி, செந்தூரன், சஞ்சீவன், கார்த்திகா, மதன், கீதன், தேவதன், நவகீதா, சசிதர், துளசி, கஸ்தூரி, சர்மிளா, அமிதாப் ஆகியோரின் அன்புப் பேத்தியாரும், கபிலன், அகிலன், ஆதவன், சிந்து, ஷியாம், தனுஷன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 18.04.2002 அன்று முற்பகல் 11 மணிக்கு அவரது பூரணவாசா இல்லத்தில் நடைபெற்று, அராலி வடக்கு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தொடர்புகளுக்கு: கிருபநாதன் - 0049-208 401 352, ஜெயந்தா- 0049-2131 510 299, லட்சுமிதேவி- 001-416-285 5063 (பபா), சிவகாந்தன்- 0031 475 311 960 (சிவா)

# மரண அறிவித்தல்



மலர்வு:
20.12.1958

உதிர்வு:
17.04.2002

## இக்னேசியஸ் அன்ரன் நேசராஜா

ராஜன் - மாட்டின் றோட், யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் மாட்டின் றோட்டைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் - செவ்ரனில் வசித்து வந்தவருமாகிய திரு. இக்னேசியஸ் அன்ரன் நேசராஜா அவர்கள் 17.04.2002 அன்று பிரான்சில் காலமாகிவிட்டார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத் தருகின்றோம்.

இவர் இக்னேசியஸ் - பிலோமினா தம்பதிகளின் அன்பு மகனும், திருமதி மரியா எவறஸ்ற் அவர்களின் அன்புக் கணவரும், மரியா ஸ்வெலான், ஹென்லி பெல்லி ஆகியோரின் பாசமிகு தந்தையும், அலெக்சாண்றியா, அன்ரொனியா, அஞ்ஜலீனா, பிறேமா பெலிசியா, யூட் விக்னறாஜா, அஸம்டா ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜோர்ஜ், றஞ்சன், ஜெயா, வெலிங்டன், மனோகரன், பொபி, டெய்சி மெற்றெல்டா, மேரி ஆன், மரினா போலின், ஐடா ஜூலியற், றோஸ் மேரி, சோபியா, வினிபிரட் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சவிரிமுத்து - எலிசபெத் தம்பதிகளின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:
Tel: 01 43 83 71 21/ 06 23 37 37 45

06, Avenue Youri Gagarin,
93270 Sevran Beaudottes.

எங்கள் கண்கண்ட தெய்வத்தின்

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மறைவு:
19.04.1999

திதி:
15.04.2002

## அமரர் திருமதி குழந்தைவேலு சர்வலோகலெட்சுமி

5-ம் வட்டாரம், பெரியபுலம், புங்குடுதீவு.

எங்கள் கண்கண்ட தெய்வமே அம்மா!
கருவறையில் நீ சுமந்தாய்! கண்விழித்து வளர்த்தாய்!
கலங்கரையாய் திகழ்ந்தாய்! கருணையுடன் ஆதரித்தாய்!
எங்கள் மனதில் தெய்வமாய் வாழ்ந்து கொண்டிருக்கும் எமதருமை அம்மாவே!
மூன்றாண்டு காலம் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் மூச்சுள்ளவரை
மறவோம் அம்மா!
உங்கள் அன்பு கனிந்த அரும் சொல்தான் அம்மா
அமுதாக எம் வாழ்வில் இனிக்கின்றது!
பாசம் நிறைந்த உங்கள் பார்வைதான் அம்மா பலத்தை எமக்கு வழங்குகின்றது!
நேசம் நிறைந்த உங்கள் நினைவுதான் அம்மா
நித்தம் நெஞ்சை உருக்குகின்றது!
அறிவை அள்ளித்தந்த உங்கள் அரும் செயல்தான் அம்மா அன்றாடம் எம்மை
வாழ்விக்கின்றது!
எத்தனை பிறப்புக்கள் எடுத்தாலும் மீண்டும் உங்கள் பிள்ளைகளாகவே
பிறந்திட வேண்டுவோம்!
எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா அரனடியில் நித்திய சாந்திபெற எல்லாம் வல்ல புங்குடுதீவு இறுப்பிட்டி பெரியபுலம் ஸ்ரீ வீரகத்தி விநாயக பெருமானை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நீங்காத நினைவுகளுடன் வாழும்
அன்பு பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தகவல்: மகன் கு. தில்லைநாதன் (தில்லை) பிரான்ஸ்.

# ஜனாதிபதியின் பாதுகாப்பு பணிப்பாளருக்குவிளக்கமறியல்

## அமைச்சர் திசநாயக்காவை கொல்ல முயன்றாராம்

(கொழும்பு)

அமைச்சர்எஸ்.பி.திசநாயக்காவை கொலை செய்ய முயற்சித்த குற்றச்சா ட்டின் பேரில் ஜனாதிபதி பாதுகா ப்புப் பிரிவின் முன்னாள் பணிப் பாளர் நிஹால் கருணாரட்ண உட்பட 14 பேரை எதிர்வரும் 20.05.2002 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கண்டி மேலதிக நீதவான் பிரதீப் கெட்டி யாராச்சி உத்தரவிட்டுள்ளார்.

கண்டி - மக்குரட்ட பொலிஸ் பிரிவில் கடந்த பொதுத் தேர்தலின்போது ஆயுதங்களுடன் நடமாடியமை அமைச்சர் எஸ்.பி.திசநாயக்காவின் ஆதரவா ளர்களைத் தாக்கியமை மற்றும் அமைச்சர் திசநாயக்காவை கொலை செய்ய சதிமுயற்சி செய்ததை போன்ற குற்றச்செயல்கள் தொடர்பாக மக்குரட்ட பொலி சாரினால் இவர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது

இந்த வழக்கு கண்டி மேலதிக நீதவான் முன்னிலையில் விசார ணைக்கு எடுத்துக் கொள்ள ப்பட்டது. இதையடுத்து இந்த வழக்கை மே மாதம் 20 ஆம் திகதி வரை ஒத்திவைத்த நீதிவான் சந்தேக நபர்களை அன்றைய தினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

கண்டி நீதிமன்றத்துக்கு கொழு ம்பில் இருந்து சிறைச்சாலை வாகனத்தில் மிகுந்த பாதுகாப்புக்கு மத்தியில் சந்தேந நபர்கள் அழைத்து வரப்பட்டனர். அத்துடன் நீதி மன்றச் சுற்றாடலிலும் கடுமை யான பாதுகாப்பு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது

## கிளிநொச்சி..

(9'ம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்துக்கட்சிகளுடனும் புரிந்துணர்வோடு செயற்பட வேண்டும் என்றே நான் நினைக்கிறேன். இதன் மூலமே நிரந்தர அரசியல் தீர்வை எட்டுவதற்கான நிலை உருவாகும்.

கேள்வி: வட கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை வலியுறுத்தும் புலிகள் இயக்கத்தினர் அதே நேரத்தில் தாங்கள் இராணுவ நடவடிக்கைகளில் இருந்து விலகி அரசியலில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு தெற்கில் சமாதானத்தையும் பொருளாதார ஸ்திரத்தன்மையையும் உறுதிப்படுத்த ஒத்துழைப்பு வழங்குவதாக தெரிவித்துள்ளனர். தெற்கில் குண்டுத் தாக்குதல் மற்றும் தற்கொலை குண்டுதாரிகளின் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதில்லை என அர்த்தப்படுமா. எனவே மேலும் முதலீட்டாளர்களை வரச் செய்வதில் இச்சந்தர்ப்பத்தை அரசாங்கம் பயன்படுத்துமா?

பதில்: இக்கருத்து மூலம் ஒரு கேள்வி எடுத்தியம்பப் பட்டுள்ளது. வட கிழக்கு தெற்கு மற்றும் அனைத்து பிரதேசங்களிலும் பொருளாதார ஸ்திரத்தன்மை முன்னேற்றம் வேலை வாய்ப்பு அதிகரிப்பு வருமான அதிகரிப்பு தொடர்பான கருத்துக்களை பிரபாகரன் வெளியிட்டார். முதலீட்டாளர்களை கவரும் விதத்தில் பொருளாதார அபிவிருத்தி ஆணைக்குழுவை நியமிப்பதற்கான சட்ட வரைவுகளை எதிர்வரும் ஜூன் மாதத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்போம். அப்போது தத்தமது வலயங்களுக்கான முதலீட்டுத் திட்டங்களை ஏற்படுத்திக் கொள்ளமுடியும். அனைவருக்கும் பொருளாதார ஸ்திரத்தன்மை தேவை யென்றே நான் நினைக்கிறேன். துன்பப்பட்டது இனி போதும். விடிவே தேவை. இந்த விடயத்தில் நான் பிரபாகரனுடன் ஒன்றுபடுகிறேன்.

## உருளும் உலகில்

20'ம் பக்கத் தொடர்ச்சி)

பதவி...

பூசைப்பலி இவரால் ஒப்புக்கொடுக்கப்படவில்லை .இதையிட்டும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இதைவிட அன்றாடக் கடமைகளையும் இவரால் செய்யமுடியாமல் திண்டாடுவது பற்றியும் கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன. குறிப்பாக இப்பொழுது தலைப்பு விடயமாகி இருக்கும் சிறு பிள்ளைகளுடனான பாலியல் உறவு விவகாரத்தை பாப்பரசரால் முறையாகக் கையாளும் விதத்தில் அவர் ஆரோக்கியமாக இல்லை என்கிறார்கள்.

இதே சமயம் ஓயத் தயாராக இல்லாத பாப்பரசர் எதிர்வரும் மாதங்களில் பல வெளிநாட்டுப் பயணங்களுக்குத் தயாராகி வருகின்றார். ஜூலை மாதத்தின் பிந்திய பகுதிகளில் கனடா, மெக்ஸிக்கோ, கௌத்தமாலா ஆகிய நாடுகளுக்கு 10 நாள் விஜயம் ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கின்றார்.

இதேசமயம் ஒரு கத்தோலிக்க ஆய்வாளரின் கருத்தின்படி கடந்த 2000 வருட கால பாப்பரசர்கள் சரித்திரத்தில் எவருக்குமே மனநோய் பாதிப்பு ஏற்பட்டதில்லை என்று கூறப்படுகின்றது. இறையருளின் அற்புதம் இதுவன்றோ? கடைசி மூச்சு வரை இறைபணி என்பது தான் இன்றைய பாப்பரசரின் மனநிலை என்பது தெளிவாகவே தெரிகின்றது.

**போகாத..**

இந்த வாரம் தொடக்கம் பணத்தைக் கொடுத்து பொப்பி பயிரிடுவதை கை விடும்படி இவர்கள் சம்பந் தப்பட்டவர்களை கோர இருக்கின்றார்கள். 1250 டாலர்கள் கொடுத்து இந்த விவசாயத்தை கைவிட்டு வேறு எதையாவது பயிரிடுங்கள் என்று கேட்கப் போகிறார்கள்.

சாத்தியப்படுமா இது?

சிரமந் தான்.அரசு தரும் பணத்தொகையை விட 15 மடங்கு அதிக தொகை கிடைக்கும்போது நாம் எப்படி இதைக் கைவிடுவது என்று முணுமுணுக் கின்றார்கள் விவசாயிகள்.

அதேசமயம் இந்தப் பொப்பி பயிர் அழிப்பின் முதற் கட்டத்தை அமுல்ப்படுத்த உதவிப் பணமாக 16 மில் லியன் டாலர் தேவைப்படுகி றதாம். ஆனால் இன்று வரை எந்தப் பணமும் கிடை க்கவில்லை என்கிறார்கள் இவர்கள். அதேசமயம் பல வாக்குறு திகள் உதவி குறித்து கிடைத்திருக்கின்றன என்றும் அதிகாரிகள் கூறுகிறார்கள்.

குறிப்பாக ஆப்கா னிஸ்தா னின் தெற்கிலும் கிழக் கிலும் தான் இந்த பொப்பி பயிர்ச்செய்கை ஓஹோ வென்று நடக்கின்றது. மக்களின் புரட்சியில்லாமல் அவர்களைக் கவரக்கூடிய விதத்தில் நடந்து இப் பயிர் களை அழிப்பது என்பது சுலபமான ஒரு விட யமாக இருக்கப் போவதில்லை.

போகாத இந்தப் பொல்லாத போதை விவகாரத்தை எப்படிப் போக்கடிக்கப் போகிறார்கள்?

## மக்கள் எழுச்சி..

(11'ம் பக்கத் தொடர்ச்சி)

படவில்லை. அப்போது அரச உத்தியோகத்தர்கள் வண்டிகளில் இருந்து இறக்கப்படாமல் சோதனையிடப்பட்டனர். இப்போது அவர்களுக்கும் இறங்கி நிற்குமாறு கட்டளை இடப்பட்டிருக்கின்றது.

பொங்குதமிழ் நிகழ்வு முடிந்து திரும்பிச் சென்ற தீவக மக்கள் மீது கடற்படையினர் மோசமாக நடந்துள்ளனர். அவர்கள் கொண்டு சென்ற பிரபாகரனின் படங்கள் பதாதைகள் கிழித்தெறியப்பட்டு அவற்றைக் கொண்டு சென்றோர் தாக்கப்பட்டுள்ளனர். இதற்கு முன்னதாக தீவுப்பகுதிக்கு அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளச் சென்ற புலிகளின் பிரமுகர்கள் கடற்படையினரால் திருப்பி அனுப்பப்பட் டமையும் குறிப்பிடத்தக்கது.

இதைவிட வடமராட்சிப் பகுதியில் புலிக ளுக்கு ஆதரவாக செயற்படுவதாகக்கூறி படையினர் மீன்பிடிக்கச் செல்பவர்கள் மீண்டும் பாஸ் எடுத்துக் கொண்டே செல்ல வேண்டும் என்றும் கட்டுமரங்கள் படை முகாம்களுக்கு முன்பாகவே நிறுத்தப்பட வேண்டும் என்றும் படையினர் பணித்துள்ள துடன் சமாதானம் விரைவில் குழம்பும் அப் போது உங்களைக் கவனித்துக் கொள்கிறோம் எனப் படையினர் மிரட்டியும் உள்ளனர்.


இவையெல்லாம் மிகக் குறுகிய காலப் பகுதிக்குள் நடந்தேறத் தொடங்கியிருக்கும் பொதுமக்கள் மீதான கெடுபிடிகளாகும். மேலும் முகமாலைச் சோதனைச் சாவடி யூடாக தினமும் உள்வரவும் வெளிச் செல்லவும் 1500 பேருக்கே அனுமதி அளிக்க முடியும் என்று படைத்தலைமையகம் அறிவித்தி ருப்பதும் பிரச்னைக்குரிய விடய மாகிக் கொண்டிருக்கின்றது. யுத்த நிறுத்த உடன்பாட்டை இது மீறும் செயல் எனப் புலிகள் முறையிட்டிருக்கின்றனர்.

படையினரின் விமான சேவைகளில் பயணி கள் தொகை குறையத் தொடங்கியதும் இப்படி யான கட்டுப்பாடுகள் போடப்படுவதாகத் தெரிய வருகின்றது.

நானூறு ரூபாய்க்கும் குறைவான பணத்துடன் முடிக்கின்ற பயணத்துக்கு ஆறாயிரம் ரூபா செலவழிக்கவேண்டிய நிலையைப் படையினர் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். அப்பாவிமக்களின் பணத்தை இதுவரை கொள்ளையடித்தது போதாதென்று மீண்டும் அவ்வாறு நடந்து கொள்வதற்கு படைத்தரப்பு முனைகின்றது.

இப்படியான பிரச்னைகள் இப்போதே முளைக்கத் தொடங்கியிருந்தன. கௌரவ மான சமாதானம் இரு தரப்புக்கும் தேவை என்பதால் அரச படைகளின் இந்த அத்து மீறல்களை அரசாங்கம் கட்டுப்படுத்த தவறு மேயானால் அதன் விளைவுகள் பாரதூர மானவையாக அமைவதை தடுக்கமுடியாது போய்விடும். பாதை திறப்பன்று புலிகளின் வருகை தாமதமாகிக் கொண்டிருக்க பொதுமக்களைக் கட்டுப்படுத்த முடியாமல் திண்டாடிய படை யினர் கடை சியில் நீங்கள் வந்து சேர்ந்தால் எமது 95 சதவீதமான பிரச்னைகள் தீர்ந்து விடும் என்று வடபகுதி தளபதி மேஜர் ஜெனரல் சிசிர விஜேசூரியவை புலிகளுக்கு அறிவித் திருக்கின்றார். அப்படியிருக்க இப்போது படையினரின் பாதை மாற்றம் காண ஆரம்பித்திருப்பது சமாதானம் குறித்த எதிர்பார்ப்புக்களோடு காத்திருக்கும் மக்களுக்கு ஏமாற்றங்களைக் கொடுக்கத் தொடங்கியிருக்கின்றது.

## மரண அறிவித்தல்



**திரு.ஜோர்ஜ் ஜெகநாதன் சபாரட்ணம்**

**(சுவிசேஷ ஊழியர்)**

**அன்னை மடியில் 08.11.1958 ஆண்டவன் அணைப்பில் 20.04.2002**

"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னை விசுவசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்"

- யோவான் 11: 25

சித்தங்கேணியைச் சேர்ந்த திரு.ஜோர்ஜ் ஜெகநாதன் அவர்கள் 20.04.2002 சனிக்கிழமையன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

இவர் உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் கொழும்பு வத்தளையை வதிவிடமாகவும் கொண்டவரும் முன்னாள் EASTERN HARDWARES STORES உரிமையாளரான காலஞ்சென்ற தம்பிமுத்து சபாரட்ணம், திருமதி இராசமணி சபாரட்ணம் (உடுப்பிட்டி) தம்பதிகளின் அன்பு புதல்வனும் திருமதி இரட்ணவதனி ஜெகநாதனின் அன்புக் கணவரும் சித்தங்கேணியைச் சேர்ந்த காலஞ்சென்ற தலைமை ஆசிரியர் நாகரட்ணம் - காலஞ்சென்ற ரேவதி நாகரட்ணம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சறோஜினிதேவி (கொழும்பு), கணேஸ்வரி (கொழும்பு), சுதந்திரதேவி (கொழும்பு), புவனேந்திரன் (கனடா), நவமணிதேவி (உடுப்பிட்டி), றங்கநாதன் (கொழும்பு), சியாமளாதேவி (ஜெர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இரட்ணவரதன் (கொழும்பு), காலஞ்சென்ற சந்திரசேகரம் மற்றும் மகேந்திரன் (கொழும்பு), றஞ்சி (கனடா), பாக்கியவதி (கொழும்பு), சிறீஸ்காந்தராஜா (ஜெர்மனி), காலஞ்சென்ற இரட்ணவதனா மற்றும் இரட்ணவரதி (மலேசியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை 23.04.2002 செவ்வாயன்று யாழ்ப்பாணம் சித்தங்கேணியில் நடைபெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு: திரு.சிறீஸ்காந்தராஜா -

**தொலைபேசி - 00 49 231 578 456 - ஜெர்மனி**

## 31ம்நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியையும்



**வட்டுக்கோட்டை சிவன்கோவிலடி**

**திருமதி அன்னநாயகி மகேந்திரம்**

**அன்னைமடியில் 10.12.1960**

**ஆண்டவன் அணைப்பில் 29.03.2002**

29.03.2002 இல் ஜெர்மனியில் சிவபதமடைந்த **திருமதி அன்னநாயகி மகேந்திரம்** அவர்களின் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும் 28.04.2002 ஞாயிறன்று

**BAHNHOF STR 78, HATTINGEN**

என்னும் முகவரியில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அந்தியேட்டிக்கிரிகைகளில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்: **கணவர் - செல்லையா மகேந்திரம்**

**- 02339/ 912313 - ஜெர்மனி**

# CLAIREPORT Place

*Banquet & Convention Centre*



**தனியொரு உயர்ந்த கூரையின் கீழ்**
**50 பேர் தொடக்கம் 1200 பேர் வரை கொள்ளக்கூடிய**
**அழகிய (Luxurious) 4 மண்டபங்கள்**



திருமணம்
பிறந்தநாள்
பூப்புனித நீராட்டு விழா
ஒன்று கூடல் மற்றும் சகல
வைபவங்களுக்கும் நாடுங்கள்.

**416-675-7700**
**416-460-7700**




என்றும் உங்கள் சேவையில்



Contact: Jey or Sasi

65 Claireport Crescent, Etobicoke, Ont. M9W 6V5
Between Steeles & Finch on Albion Road
www.claireportplace.com E-mail: info@claireportplace.com





உங்கள் உடல்,
உள
நலம் பேண

**வைத்திய நிலையம்**

**டாக்டர் யசோ தர்மரத்தினம்**
**குடும்ப வைத்தியர்**
*(யாழ். வைத்தியசாலையில் பலவருட அனுபவம் பெற்றவர்)*

**Dr (Mrs) YASHO THARMARATNAM**
**(MBBS, MD), (CCFP)**

**FAMILY DOCTOR**




**2466 Eglinton Ave. East, Unit 03**
**Scarborough, ON M1K 5J8**
*(Near Kennedy Subway Station)*

**(416) 266-7786**



# IMMIGRATION SERVICES

- அகதிக் கோரிக்கை
- நிரந்தர வதிவிட உரிமை
- குடிவரவு மேன்முறையீடு
- மனிதாபிமான மனு
- தடை உத்தரவுப் பரிசீலனை
- குடும்ப விவகார வழக்குகள்

அமெரிக்க எல்லைகளில், சிறைகளில் உள்ளவர்களை உடனடியாக விடுவித்தல்

குடிவரவு சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களிலும் நாம் உங்களுக்குச் சிறப்பாக உதவ முடியும்

**குடிவரவுச் சேவைகள்**
**சாம் நாகேந்திரா**
(குடிவரவு ஆலோசகர் / மொழிபெயர்ப்பாளர்)

**ROBERT I. BLANSHAY**
Barrister & Solicitor
49 St. Nicholas Street
*(Yonge / Wellesley)*
**TEL: (416) 413-4955**
**FAX: (416) 413-1649**

**SAM NAGENDRA**
**TEL: (905) 405-9615**
**24 HRS. PAGER: 360-9230**
EMAIL: nage@sprint.ca

**LEGAL AID ACCEPTED**

# சங்கம் வளர்த்த தமிழ்

## 29

மத்திய மாகாணத்திலும் வங்காளத்திலும் வழங்கும் பழங்குடி மொழிகள் இரண்டில் தெளிவான திராவிடத்தன்மை வாய்ந்த மூலங்கள் இடம் பெற்றிருப்பது இவ்வாறு உறுதி செய்யப்படவே. திராவிட இனத்தவர். கங்கைக்கரை வரை இல்லை என்றாலும் வங்காளத்தின் வடதிசை நாடு வரையும் வாழ்ந்திருந்தமையைக் காணலாம். இதனால் திராவிட இனம் ஒரு காலத்தில் இந்தியப் பெருநிலப் பரப்பில் பரவி வாழ்ந்திருந்தது என்ற கொள்கை நிலை நாட்டப் பெற்றது (திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் பக்கம் 63 –65)

பாரதக்கதையில் பஞ்சபாண்டவர் புதிதாகக் காட்டை வெட்டி அஸ்தினபுரத்தை உருவாக்கிய போது அங்கு வாழ்ந்த பழங்குடி மக்களை விரட்டித் துரத்தினார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் ஆரியர் வருகைக்கு (கி.மு.1500 அளவில்) முன்னர் வாழ்ந்த பழங்குடியினராக இருக்க வேண்டும்.

பாலுசிஸ்தானில் பிரகுய் மொழி பேசுகிற மக்கள் வாழ்கிறார்கள். இந்த மொழி தமிழில் இருந்து பிரிந்து போன மொழி என நம்பப் படுகிறது. பாகிஸ்தான் வடஇந்தியா இரண்டிலும் பேசப்படுகிற திராவிட மொழிகளில் இதுவே முக்கிய மொழியாகக் கருதப்படுகிறது.

இந்தியாவிற்குள் வடமேற்கு வழியாக ஆரியர்கள் புகுந்தபோது திராவிடரில் பலர் தென்திசைக்குப் புலம்பெயர்ந்த போது சிலர் வடக்கில் தங்கி இருந்து விட்டதை பிரகுய் மொழிபேசுவோர் உறுதிப்படுத்துகின்றனர்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் மத்திய ஆசியாவில் பலமொழிகள் பேசப்பட்டன. பினிக். துருக்கி. மொங்கோலியன். அல்தாய்க் அவற்றில் சிலவாகும். இதில் அல்தாய் மொழிகள் (பினிஷ். பழைய கங்கேரியன் போன்றவை) தமிழ்மொழியோடு தொடர்புடையவை. இதனைக் கீழ்க்காணும் சொற்களால் அறிந்து கொள்ளலாம்.

தமிழ் பினிஷ் கங்கேரியன் - அன்னை அன்யா அப்பன் அப்பி. இப்பா ஆத்தாள். ஆத்தா. கட்டு கொட்கேள் கேளன் ஞாயிறு நியார் பிடி பிடான் பிறபெற வெளிச்சம் வெலகா வேறுபல சொற்களும் தமிழோடு தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன. எடுத்துக் காட்டாக கோழி. தீ. மனை. மரம்.

இன்னொரு வியப்பான செய்தி யாதெனில் பினிஷ்மொழி ஐரோப்பாவில் பேசப்பட்டாலும் பினிஷ் மற்றும் அல்தாய்க் மொழிகள் இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தோடு (பிரஞ்சு. ஜேர்மன். ஆங்கிலம். இந்தி. பஞ்சாபி. குஜாரத்தி) சேர்க்கப்படுவதில்லை.

அவுஸ்திரேலிய பழங்குடி மக்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவில் இருந்து இடம்பெயர்ந்து அங்கு குடியேறியவர்கள் ஆவார்கள். தோற்றத்தில் இவர்கள் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் போலவே காணப்படுகின்றார்கள். இவர்களை மானிடவியலாளர்கள் ஒஸ்ரலோயிட் இனக்குழுவினர் என அழைக்கின்றனர். ஆனால் இவர்கள் அண்டை நாடான நியூசிலாந்து நாட்டு மாஒரிஸ் மக்களை விட வேறானவர்கள். இலங்கையில் வாழ்ந்த ஆதிக்குடிகளான இராட்சதர். நாகர். வேடர் முதலானோர் ஒஸ்ரோலோயிட் இனக்குழுவைச் சார்ந்தவர்கள் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

ஆரியர்களும் திராவிடர்களும் மொழி அடிப்படையில் வெவ்வேறு பிரிவினராக இனங்காணப்பட்டாலும் இவர்கள் எல்லோரும் *Caucasiod (Europoid)* என்ற இனக் குழுவைச் சார்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

இங்கிலாந்து. போர்த்துக்கல். ஸ்பெயின். பிரான்ஸ். சுவீடன். கருங்கடலின் கீழ்க்கரை நாடுகள். வடஆபிரிக்கா. காங்கேசியநாடுகள். பாலஸ்தீனம். ஈரான் ஆகிய இடங்களில் கிடைக்கும் பெருங்கற் புதைகுழிகள் அடுத்துத் தென்னிந்தியாவிற்குள் காணப்படுகின்றன. உலகில் வேறெங்குமே அவற்றைக் காணமுடியாது. இக்காரணத்தைக் கொண்டு மத்திய தரைக்கடல் மக்கள் தென்னிந்தியாவிற்குக் குடிபெயர்ந்து வந்தவர்கள் என்று ஊகிக்கப்படுகிறது.

மேக்ரான். பாலூசிஸ்தாம். சிந்து ஆகிய தரைப்பகுதிகளைக் கடந்தும் கடல்வழியாகவும் தென்னிந்தியாவுக்கு வந்து குடியேறியவர்கள் திராவிட இனத்தவர் என்று சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

மேற்காசிய மக்களுக்கும் திராவிடருக்கும் இடையே காணப்படும் பழக்கவழக்கங்களிலும் ஈரான். மெசப்பொடமியா ஆகிய நாட்டு ஊர்பெயர்களிலும் திராவிடரின் ஊர்ப் பெயர்களிலும் பல ஒற்றுமைகள் அமைந்திருப்பது இதற்குச் சான்றாகக் காட்டப்படுகிறது.

சுமேரியர்களுக்கும் தமிழர்களுக்கும் வரலாற்றுக்கு முந்திய காலந்தொட்டு வணி

## சிந்துவெளி நாகரிகம்

கத் தொடர்பு இருந்து வந்திருக்கிறது. சேரநாட்டுக்குத் தேக்கு மரங்கள் சுமேரிய நாட்டு மன்னர்களின் தலைநகரமான "ஊர்" என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதன் காலம் கி.மு.4000 ஆண்டுகளாகும்.

யுபிரட்டிஸ் மற்றும் தைக்கிறிஸ் ஆறுகளின் இடையே இருந்த பிரதேசம் மெசப்பொட்டோமியா என அழைக்கப்பட்டது. இதுவொரு கிரேக்கச் சொல்லு. இரண்டு ஆறுகளுக்கு இடையிலான நாடு என்று பொருள். இன்றைய ஈராக் குவைத். மற்றும் தென்சவுதி அரேபியாவை உள்ளடக்கியது. மேற்குலக வரலாற்று ஆசிரியர்கள் இங்கு வாழ்ந்தவர்களை சுமேரியர்கள் என அழைத்தார்கள்.அவர்கள் பேசிய மொழி வேறு எந்த மொழியோடும் ஒத்து இருக்கவில்லை. பின்னர் அது திராவிட மொழியோடு தொடர்புடையதாக இருப்பதாக முடிவு செய்தார்கள்.

சுமேரியர் பழுப்பு நிறம் உடையவர்கள். நீண்ட கருத்த முடி வைத்திருந்தார்கள். ஊர்களில் குடியிருந்தார்கள். அரசர்கள் ஆண்டார்கள். பல கடவுளரை வணங்கினார்கள். அரசர்களையும் கடவுளராக வழிபட்டார்கள். களிமண்ணில் எழுத முதலில் கண்டு பிடித்தவர்கள் இவர்களே. நாட்காட்டியைக் கண்டு பிடித்தவர்களும் இவர்களே. புதிய கற்காலத்தில் வாழ்ந்த மக்களில் சுமேரியர் நாகரிகம் படைத்தவர்களாகக் கருதப்படுகின்றனர். கீப்புரு இனத்தின் தந்தை என வர்ணிக்கப்படும் ஏப்ரகாம் ஊர் என்ற தலைநகரில் இருந்து வந்தவர் என்று சொல்லப்படுகிறது. கி.பி. 2000 ஆண்டளவில் இந்த இனம் திடீரென மறைந்து போயிற்று. அல்லது சிதறுண்டு வேறு நாடுகளுக்கு புலம்பெயர்ந்திருக்க வேண்டும்.

சுமேரியர்கள் தென்னாடு பெயர்ந்தவர்கள் என்பதற்கு மாறாக தமிழகத்தில் இருந்து சென்ற ஒரு கூட்டத்தினரே சுமேரியரின் முன்னோர் என பேராசிரியர் இராமச்சந்திர தீட்சதர் எழுதியுள்ள "தமிழரின் தோற்றமும் பரவலும்" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

சுமேரியர்களது நாகரிகத்துக்கும் ஹரப்பா சிந்துவெளி நாகரிகத்துக்கும் இடையில் ஒற்றுமை இருப்பதாகக் கருதப்படுகிறது.

சிந்துவெளி நாகரிகச் சின்னங்கள் 1920 இல் ஹரப்பாவிலும் 1922 இல் மொகஞ்சதாராவிலும் அகழ்ந்து எடுக்கப்பட்டன. அவை பற்றிய விபரங்களை சேர்.ஜான்.மார்ஷல் 1931 இல் வெளியிட்டார்.



**நக்கீரன்**

சிந்துவெளி நாகரிக முத்திரை எழுத்துக்கள் தமிழ் அல்லது தமிழ் சார்ந்த மொழியாகத்தான் இருக்க வேண்டும் என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். ஆனால் இதில் ஒத்த கருத்து இன்னும் ஏற்படவில்லை.

சிந்துவெளி மக்கள் ஆரியர்கள் கைபர் கணவாய் வழியாக ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டு இந்தியாவிற்குள் நுழையும் முன்னர் நாகரிகச் சிறப்போடு வாழ்ந்தவர்கள் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. இவர்களையே ஆரியர்கள் தங்கள் வேதங்களில் அரக்கர்கள். அசுரர்கள். இராட்சதர்கள். கந்தருவர்கள். யட்சகர்கள். பிசர்சர்கள் என்று இகழ்ந்துரைத்தனர் என்று வேதமொழி மற்றும் சமஸ்கிருதமொழி வல்லுனரான மாலதி ஜே.செண்டுகே என்பவர் 1977இல் எழுதிய "நாகரிக அரக்கர்கள் - ரிக் வேதத்தில் ஹரப்பா மக்கள்" என்னும் விரிவான நூலில் நிறுவுகிறார். அம்மக்களோடு நீண்ட காலம் போர் செய்தும் ஆரியர்கள் வெற்றி பெற்றமையை ரிக்வேதத்தில் விரிவாகக் கூறியுள்ளனர்.

சிந்துவெளித் தமிழர்களை (திராவிடர்களை) ஒழிப்பதில் முன்னணியில் நின்ற ஆரியத் தலைவன் தான் பின்னர் இந்திரன் என்னும் பெயரில்ஒரு கடவுள் ஆக்கப்பட்டான். இந்திரன் என்றால் கோட்டையை அழிப்பவன் என்று பொருள். இந்திரனால் சொல்லப்பட்ட அசுரர்கள் அல்லது தாசர்கள் பட்டியலை ரிக்வேதம் போட்டுக் காட்டுகிறது.

ஹரப்பாவில் ஆயிரக்கணக்கான ஆவணங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றை முத்திரைகள் என அழைக்கிறார்கள். இது தமிழ்மொழியோடு தொடர்புடையது என நம்பப்படுகிறது. ஆனால் அதற்கான சான்றுகள் இதுவரை எண்பிக்கப்படவில்லை. காரணம் எகிப்திய ஓவிய எழுத்தை படிக்க முடிந்தது போல ஹரப்பா முத்திரைகளில் காணப்படும் எழுத்துக்களை யாரும் இன்னும் சரியாகப் படிக்கவில்லை.

நாலாயிரத்துக்கும் அதிகமான ஹரப்பா முத்திரைகளை அறுபதுக்கும் அதுகமான இடங்களில் கண்டு பிடித்துள்ளார்கள். அதன் வரிவடிவம் 419 குறியீடுகளைக் கொண்டுள்ளன. இந்த எழுத்துக்கள் பெரிதும் செம்பினால் ஆக முத்திரைகளில் பொறிக்கப்பட்டுள்ளன.

சுமேரியன். ஈழமயிற்ச திராவிட. மன்டிங் மொழிகள் ஒரே குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் எனப்படுகிறது. அவற்றின் கட்டமைப்பு இலக்கணம் ஒன்றாக இருக்கின்றன.

ஹரப்பா முத்திரைகள் பல அந்த மக்கள் இறைவனிடம் யாசித்த வேண்டுதல்களைச் சுட்டிக்காட்டுகின்றன. அவையாவன (1) நல்வாழ்வு (2) ஆன்மவளம் (3) அறம் (4) அடக்கம் (5)விடாமுயற்சி

மொகஞ்சதாரோவில் காணப்பட்ட அறைகள் ஒவ்வொன்றிலும் இந்தத் தாயத்துக்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றை மக்கள் பாவித்த அறிகுறிகள் தென்படுகின்றன. துளைபோட்ட இந்தத் தாயத்துக்களை கழுத்தில் அல்லது இடுப்பில் அவர்கள் கட்டி இருந்திருக்கலாம்.

சங்ககாலத்தில் மகளிரும் போர் வீரர்களும் காலில் சிலம்பு. காதில் தோடு அணிந்திருந்ததாக இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. அண்மைக்காலம் வரை யாழ்ப்பாணத்தில் காலுக்கு காப்பு. சலங்கை. காதில் தோடு அல்லது கடுக்கன் அணியும் வழக்கம் ஆண் பெண் இருசாராரிடமும் இருந்திருக்கிறது. (வளரும்)


## இணுவில் பொது நூலகம் விடுக்கும் அறிவித்தல்

இணுவில் ஸ்ரீ பரராச சேகரப்பிள்ளையார் கோவில் கொடியேற்றம் திகதி மாற்றப்பட்டுள்ளது என்பதனை இணுவில் ஸ்ரீ பரராச சேகரப்பிள்ளையாரின் அடியார்களுக்கு அறியத் தருகின்றோம்.

கொடியேற்றம் மே மாதம் 7 ஆம் திகதி (தமிழிற்கு சித்திரை 25ஆம்திகதி) செவ்வாய் கிழமை இடம் பெறும் என்பதை அறியத் தருகின்றோம்.



விரைவில்!

உங்கள் அபிமான ஈழநாடு வாரத்தில் திங்கள், வியாழன் இரு தினங்களில் வெளிவரும்!

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் உயர்திரு
அப்புக்குட்டி கிளெமெண்ற் ஏகாம்பரம்
( ஆனைக்கோட்டை - யாழ்ப்பாணம்)

மலர்வு 16.02.1943
உதிர்வு 05.05.1996

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"

பண்பிலே தெய்வமாய்
அன்பிலே அன்னையாய்

வாழ்க்கையில் தந்தையாய்
வழிகாட்டலில் நல்லாசிரியனுமாய்
விளையாட்டில் வித்தகனுமாய்
வாழ்ந்த எந்தையே!

காற்றோடு கடல் கடந்து
காற்றோடு கலந்த உயிர், அற்ற உடல்
காணாத கனடா நாடு வந்து
ஆறாண்டு அதிவேகம் ஆயினும்
நேற்றது போல் நெஞ்சம் விம்முகிறது

குற்றமில்லா உள்ளமும் புன்சிரிப்பும்
நித்தமும் என் மனதில் நிழலாட

உலகை நீத்து ஆறாண்டு சென்றாலும்
உள்ளங்கள் உம்மை மறவாது
உறவுகள் என்றும் தொடர்ந்து வரும்
உதிரம் உம் நினைவில் உறைந்து விடும்

அந்தோ!
சிந்தையில் உம் நினைவுகளே!

நடுக்கல்லை நாட்டி விட்டே
நாளும் நலிவுற்றே வாடுகிறோம்
தோன்றாத் துணையாக நீங்கள்
தோள் கொடுக்க வேண்டுமென்று
வேண்டி

உங்கள் ஆத்மா
சாந்தியடைய அனுதினமும்
இறைவனைப்
பிரார்த்திக்கும்
மனைவி, மக்கள், மருமகன்,
பேரன்

தகவல்: திருமதி ஏகாம்பரம்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திதி: 02.05.2002



அமரர் உயர்திரு
முத்து இராஜலிங்கம் (பாலதுரை)
(இளைப்பாறிய P.W.D ஓவசியர்)

மலர்வு 14.07.1925
உதிர்வு 13.04.2001

உதயத்து நிலவாய் எம் இதயத்தில் நிறைந்து
நெஞ்சச் சுவடுகளில் நீங்காத ஓவியமாய்
நினைவலைகளின் ஓயாத பேரலையாய்
கால ஓட்டத்தின் அழியாத காவியமாய்
என்றும் நம் இதயங்களில்
நிலைத்து விட்ட தெய்வமே
இறைவனடியில் காலமெல்லாம் வாழ
இதயத்தால் பூமழை தூவி அஞ்சலி செய்கிறோம்
ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும்

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்




## -- சோதிடர் தர்மர்

## மேடம்

எதிலும் வெற்றியுண்டாகும். தீய பழக்கங்களால் செலவு அதிகமாகும். பெரியோர் உறவு வலுவாகும். மன, உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன், மனைவி உறவு நன்றாகும். உறவினர்களைப் பகைத்துக் கொள்ளவேண்டாம். வெள்ளி, சனி நல்ல நாட்கள்.

## இடபம்

லாபம் அதிகமாகும். வீடு, நிலம் வாங்கும் முயற்சிகள் பலிதமாகும். எதிர்பாராத வகையில் சொத்து சேர இடமுண்டு. குடும்பத்தில் நல்ல காரியங்கள் நடக்கும். சட்ட விரோத காரியங்களில் ஈடுபட்டு தண்டனை அடைய நேரிடலாம். தீய பெண்களின் சேர்க்கை துன்பம் தரும். அதிகாரிகள் ஆதரவு தருவர். வெள்ளி, சனி நல்ல நாள்.

## மிதுனம்

எதிரிகளால் அவமானம் அடைய நேரிடும். குடும்பத்தில் ஒருவரின் உடல் நிலை பாதிப்படையும். கடன் தொல்லையும் ஏற்படலாம். வீணாகக் கெட்ட பெயர் வாங்க வேண்டியிருக்கும். மனைவி, மக்கள் ஒத்துழைப்பு தருவர். குடும்பத்தில் திருமணம் போன்ற நல்ல காரியங்கள் நடைபெறும். ஞாயிறு, திங்கள் நல்ல நாட்கள்.

## கடகம்

தனம், சுகம் சேரும். நல்ல செய்திகள் வந்து சேரும். புதிய தொழில் வாய்ப்பு சிலருக்கு கிட்டும். மேலதிகாரிகள் ஆதரவுதருவர். கணவன், மனைவி உறவு அதிகமாகும். நண்பர் உறவினர்களால் நன்மைகள் கிட்டும். மனைவி மக்களிடையே சந்தோஷம் நிலவும். பிரயாணத்தின் போது அவதானம் தேவை. புதன், வியாழன் நல்ல நாட்கள்.

## சிம்மம்

சகல சம்பத்துக்களும் கிட்டும். உயர்ந்த ஆடையணி சேரும். குடும்ப சுகம் குறைவின்றி கிடைக்கும். புதுமனை நிலம் வாங்கும் முயற்சிகள் பலிதமாகும். சிலருக்கு பந்தயம் லாட்டரியில் வெற்றி கிட்டும். தொழிலில் நிம்மதி இருந்து வரும். விரோதிகள் செய்யும் இடையூறு நன்மையாகவே முடியும். வெள்ளி, சனி நல்ல நாட்கள்.

## கன்னி

செய்காரியங்களில் தடைதாமதம் ஏற்படும். அமைதியின்மை வீண் அலைச்சல் என்பன இருக்கும். ஏமாற்றம் பொருள் இழப்பு ஏற்படும். செய்யும் தொழிலில் உயர்ந்த நிலை அடையலாம். செல்வம் செல்வாக்கு உயரும். மனைவி மக்கள் மகிழ்ச்சியாக இருப்பர். உடல் நலத்தை நன்கு பேணவும். திங்கள், செவ்வாய் நல்ல நாட்கள்.

## துலாம்

சண்டை சச்சரவுகள் வரும். உடல் நிலை பாதிப்புக்கு உள்ளாகும். துணிந்து செய்யும் காரியங்கள் நற்பலன்களைத் தரும். தீயநினைவுகளால் துன்பம் அடையவேண்டி வரும். அவமானம் தரத்தக்க செயல்களைத் தவிர்க்கவும். நல்லவர்களைப் பகைத்துக் கொள்ளாதிருக்கவும். கணவன், மனைவி உறவு நன்றாகும். புதன், வியாழன் நல்ல நாட்கள்.

## விருச்சிகம்

வழக்குகள் ஏற்படலாம். எதிலும் வெற்றி கிட்டும். தொழிலில் கவனம் தேவை. பிறமாதர் சேர்க்கை துன்பம் தரும். எச்சரிக்கையாக இருந்தால் தீமைகளைப் போக்கலாம். நல்லவர்களைப் பகைத்துக் கொள்ள நேரிடும். தொழிலில் கவனம் செலுத்தி நன்மை பெறலாம். கணவன், மனைவி உறவு நன்றாகும்.

## இவ்வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | சூரியன் | செவ்வாய் ராகு சனி சுக்கிரன் | வியாழன் |
| | இவ்வார கிரகநிலை | | |
| | | | |
| சந்திரன் | சந்திரன் கேது | சந்திரன் | |

## தனுசு

கௌரவம் பெருமை உயரும். தொழிலில் அதிக லாபம் உண்டாகும். அதிகாரிகள் ஆதரவு தருவர். சொத்து சேரும். லாட்டரி போன்றவற்றில் சிலருக்கு வெற்றி வாய்க்கும். பதவி உயர்வு போன்ற நன்மைகள் ஏற்படும். பிறரை நம்பி உங்கள் காரியங்களை ஒப்படைக்க வேண்டாம். உறவினர் நண்பர் பகை ஏற்படும். வெள்ளி, சனி நல்ல நாட்கள்.

## மகரம்

மனைவி பிள்ளைகளுடன் பிணக்கு ஏற்படலாம். உறவினர் நண்பர் விரோதத்தையும் சம்பாதித்துக் கொள்வீர்கள். எதிலும் எதிர்பார்த்த வெற்றி கிட்டாது. தீய பெண்களின் உறவைத் தவிர்க்கவும். தொழில் வளமாகும். தெய்வபக்தி இருந்து வரும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவது அவசியம். எதிரிகளிடம் எச்சரிக்கை தேவை. ஞாயிறு, திங்கள் நல்ல நாட்கள்.

## கும்பம்

எதிலும் அதிக லாபம் கிட்டும். அதிகாரிகள் ஆதரவு அதிகமாகும். தாய்வழி சொத்து சேரும். எதைச் செய்தாலும் லாபமாகவும் திருப்தியாகவும் அமையும். பணச்செலவு அதிகரிக்கும். வழக்குகள் வெற்றி தரும். நண்பர்களால் நற்பலன்கள் ஏற்படும். செலவு அதிகரிக்கும். புதன், வியாழன் அதிர்ஷ்ட நாட்கள்.

## மீனம்

துர்ச்செய்கையால் நாட்டைவிட்டு செல்ல நேரிடலாம். லட்சுமி கடாட்சம் உண்டாகும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நிகழும். பிரயாணங்களால் பணச்செலவு அதிகமாகும். தொழிலில் மதிப்பு அந்தஸ்து உயரும். வீட்டில் சுபகாரியங்கள் நிகழும். குழந்தைப் பாக்கியம் கிட்டும் வீண் அலைச்சலும் இருந்து வரும் புதன், வியாழன் நல்ல நாட்கள்.

உங்கள்
குழந்தைகளின்
ஜாதகக்
குறிப்புக்களை
சரியாகக்
கணிக்க
தொடர்பு
கொள்ளுங்கள்
சோதிடர்
தர்மர்

A.Thrumalingam
11 Av de la
Commune de
paris,
95140 Garges
les Gonesse,
France.
Tel:
01 39869208

**TORONTO TRUCK & FORKLIFT SCHOOL**

இப்பொழுது உங்களது டிரக் லைசன்சுக்குரிய பயிற்சியையும் வகுப்புக்களையும் தமிழ்மொழி மூலம் பெற்றுக் கொள்ளலாம். ஆங்கிலமொழி அறிவு அவசியமில்லை. தமிழ்மொழி மூலமான பயிற்சியும் அறிவுறுத்தலும் உங்களுக்கு இப்போது நேரடியாகவே கிடைக்கின்றது. ஒன்ராறியோவிலேயே மிகப் பெரியதும் திறமைமிக்கதுமான எமது நிறுவனத்தின் மூலம் உங்கள் பயிற்சியைப் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வசதிக்காகப் பல பயிற்சி நிலையங்கள் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.




| | |
|---|---|
| REXDALE | (416) 675-7500 |
| SCARBOROUGH | (416) 213-2222 |
| BRAMPTON | (905) 457-7565 |
| HAMILTON | (905) 662-9300 |
| MISSISSAUGA | (905) 270-1999 |
| TORONTO | (416) 675-4444 |

ஈழநாடு
EEZHANADU
P.O.BOX 878 STATION 'Q'
TORONTO - ONTARIO
CANADA -M4T 2N7
TEL: (416) 654 - 9825
(416) 654 - 1867
FAX: (416) 652 - 7493



N.K.S. DRAPERY & BLINDS

CUSTOM MADE
- VERTICAL BLINDS
- VENETIAN BLINDS
- DRAPERIES
- CURTAINS
- SHUTTERS

For FREE Estimates & Installation Call:
KETHA
(CCTCC's Award Winner – 2001)

210 SILVER STAR BLVD # 825
SCARBOROUGH - ONT
M1V 5J9
(905) 944-0218
(416) 321-6420



# பிரிட்டனில் விடுதலைப்புலிகள் மீதான தடை நீங்கும்?

விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவது தொடர்பாக பிரித்தானிய அரசு தொடர்ந்து பரிசீலனை செய்துவருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அமைதிச் சூழல் மற்றும் சமாதான முயற்சிகளை அடுத்து விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு பிரித்தானியா ஆலோசித்து வருகிறது.

பிரிட்டன் அரசு விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு அக்கறை கொண்டுள்ளதை பிரிட்டன் அரசின் ஆளும் தொழிற்கட்சித் தவிசாளரும், அமைச்சரவை உறுப்பினருமான சாள்ஸ் கிளாக் உறுதிப்படுத்தியுள்ளார்.

பிரிட்டனில் மே2 ஆம்திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் பொது மக்கள் ஊடகவியலாளர்களைசில தினங்களுக்கு முன்பு ஹரோவிலுள்ள தனது கட்சியின் கிளை அலுவலகத்தில் சாள்ஸ் கிளாக் சந்தித்துப் பேசிய போதே விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கம் தொடர்பான கருத்தையும் வெளியிட்டுள்ளார்.

புலிகள் மீதான தடை நீக்குவதற்கு பிரித்தானிய அரசு மேற்கொண்டு வரும் பரிசீலனையை அங்கு அவர் தெளிவுபடுத்தினார். அதே வேளை சாள்ஸ்கிளாக் "தீபம்" தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியிலும் புலிகள் மீதான தடை நீக்கம் குறித்து கருத்துத் தெரிவித்துள்ளார்.

தீபம் தொலைக்காட்சிப் பேட்டியில் இலங்கை தமிழர்கள் தொழிற்கட்சி மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார்கள். ஆனால் இந்த தொழிற்கட்சியின் ஆட்சிக் காலத்தில் தான் ஈழத்தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்று கருதப்படும் தமிழீழ விடுதலைப்புலிகள் தடை செய்யப்பட்டார்கள். இப்போது இலங்கையில் நடைபெறும் சமாதான சூழ்நிலைகளை கருத்தில் வைத்து பிரித்தானியாவில் விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்படுமா? எனக் கேட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் சில சர்வதேச பயங்கரவாத அமைப்புக்கள் பிரித்தானியாவிற்கூடாக தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தன. அவற்றைத் தடுக்கும் நோக்கில் இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டது.

இலங்கையில் புலிகள் அமைப்பின் சில பிரிவுகளின் செயற்பாடுகளும் அந்த அமைப்பும் இந்த பட்டியலில் இடம்பெறக் காரணமாய் அமைந்தது. ஆனால் தமிழ் மக்கள் இதில் உடன்படவில்லை என்பது எமக்கு புரிகிறது. ஆனால் தற்போதைய சமாதான சூழ்நிலையை பொறுத்து இந்தத் தடை குறித்து தொடர்ச்சியாக நாம் மீள்பரிசீலனை செய்து வருகிறோம் என்றார்.

மற்றுமொரு வினாவிற்கு பதிலளிக்கையில் இலங்கையின் சமாதான முயற்சிகளை நாம் தொடர்ந்தும் வரவேற்கிறோம். கடந்த காலத்தில் நாம் இலங்கையை ஆண்டோம் என்ற காரணத்திற்காக எதைச் செய்ய வேண்டும் என்று எம்மால் எந்தத் தரப்பையும் வற்புறுத்தவும் முடியாது. தீர்வை நாம் திணிக்கவும் முடியாது. ஆனால் தீர்வு எட்டப்படுவதற்கு நாம் முழு ஒத்துழைப்பையும் வழங்குவோம் என்றும் அவர் உறுதியளித்தார்.

அகதிகள் விடயம் உட்பட பிரித்தானியாவில் வாழும் தமிழர்களின் பல விடயங்கள் குறித்தும் பேட்டியில் பிரஸ்தாபிக்கப்பட்டன.

# சமாதான முயற்சிகள் குறித்து ஆராய சந்திரிகா – ரணில் விரைவில் சந்திப்பு!

## புலிகள் மீதான தடை நீக்க விவகாரம் ஆராயப்படும்

தமது ஐந்துநாள் இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ள ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவை அடுத்த ஓரிரு தினங்களில் ஸ்ரீலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேரில் சந்தித்து அரசு - புலிகள் சமாதானப் பேச்சுக் குறித்து, குறிப்பாக புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கம் குறித்து இருவரும் விரிவாக ஆராய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. முக்கிய அரசியல் விடயங்கள் தொடர்பாகவும் இருவரும் சந்தித்துப் பேசவிருப்பதை ஜனாதிபதிச் செயலக வட்டாரங்கள் உறுதி செய்தன. கடந்த 22ஆம் திகதி இந்தியா புறப்படுவதற்கு முன்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சந்திரிகா கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக தமது நிலைப்பாடு பற்றிய சில தகவல்களை ஜனாதிபதி அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அதன் தொடராகவே தற்போது ஜனாதிபதி பிரதமருடன் நேரில் பேசுவார் என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முன்முயற்சிகள் குறித்து இந்தியத் தலைவர்களுடன் விரிவாக ஆராய்ந்த பின்னர் ஜனாதிபதி சந்திரிகா நாடு திரும்பியிருக்கிறார்.

இந்தப் பின்னணியில் ஜனாதிபதி - பிரதமர் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர். இதற்கிடையில் தற்போதைய சமாதான முயற்சிகளை ஆட்சேபித்து வரும் தீவிர பேரினவாதப்போக்கை கடைப்பிடித்து வரும் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவும் ஜனாதிபதியையும் பிரதமரையும் சந்தித்துப் பேசவுள்ளது எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# புலிகளின் மட்டுநகர் அரசியல் பிரமுகர் விசு அதிரடிப்படையால் கைது

மட்டக்களப்பு இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அரசியல் பணிகளில் ஈடுபட்டு வரும் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் துரை சனிக்கிழமை 27ஆம் திகதி காலை விசேட அதிரடிப்படையினரால் திடீரெனக் கைது செய்யப்பட்டார்.

மண்டூரில் இருந்து கொக்கட்டிச் சோலை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இவர் கைது செய்யப்பட்ட சமயம் இவரிடம் ஒலிப்பதிவு நாடாக்கள், இராணுவச்சீருடை, இராணுவ பாதணி, தடை செய்யப்பட்ட கத்தி, இராணுவக் குறிப்புப்புத்தகங்கள் 3 ரவைகள் என்பன இருந்ததாக மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகர் சிசிர குணவர்த்தன தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட துரை அன்றிரவு காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டார். இன்று திங்கட்கிழமை அவர் நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்படுவார் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

# வவுனியா ஜோசப் படைமுகாமில் உணவில் நஞ்சுத்தன்மை 205 படையினர் பாதிப்பு

வவுனியா ஜோசப் இராணுவ முகாமில் உள்ள இராணுவத்தினருக்கு சனிக்கிழமை காலை வழங்கப்பட்ட உணவில் நச்சுத்தன்மை காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதனால் 205 இராணுவத்தினர் பாதிக்கப்பட்டனர். அவர்களுக்கு வைத்தியசாலையில் சிகிச்சை வழங்கப்பட்டது. கடும் பாதிப்புக்கு உள்ளாகிய இராணுவத்தினர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் தங்க வைக்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

உணவு அல்லது நீரில் ஏற்பட்ட நச்சுத்தன்மையே இந்தப்பிரச்சனைக்கு காரணம் எனகருதப்படுகிறது

# யாழ்ப்பாணத்திற்கு பட்டாசுகள் வந்ததையடுத்து விஷமிகள் அட்டகாசம் கட்டுமீறுகிறது

நீண்டகால இடைவெளியின் பின்னர் குடாநாட்டுக்கு பட்டாசு போன்ற வெடிபொருட்கள் தற்போது தாராளமாக எடுத்து வரப்பட்டுள்ளன. இந்தப் பட்டாசுகளை வாங்கும் ஒருசில விஷமிகள் வீதிகளின் நின்று வேண்டத்தகாத பல செயல்களில் ஈடுபட்டு வருவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். குறிப்பாக சைக்கிளில் செல்லும் யுவதிகள் மீது ஒரு சில விஷமிகள் பட்டாசுக்களைக் கொழுத்தி வீசுகின்றனர். இதேபோல் வயோதிபர்கள் மீதும் சேஷ்டைகள் கட்டுமீறிச் செல்கின்றன. இதே வேளை இராணுவ முகாம்களுக்கும் ஒருசில விஷமிகள் பட்டாசுகளை கொளுத்தி வீசிவிட்டு தலைமறைவாகி விடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஆத்திரமடையும் படையினர் மக்களை மிரட்டினர்.

நீங்கள் வாகன விபத்தில் உங்கள் தவறால் அல்லது மற்றவர் தவறால் பாதிக்கப்பட்டீர்களா?

SIDNEY FINANCIAL
AND ACCIDENT BENEFIT SERVICES

SIDNEY K. SITHIRAVADIVEL B.A. (Hons)
(416) 745-2794 (416) 745-0010
FAX: (416) 745-9228
2885 JANE STREET, UNIT # 2, NORTH YORK

அப்படியாயின் அவ் விபத்தால் உங்களுக்குக் கிடைக்கக் கூடிய இழப்பீடுகளான

- நிகழ்கால / எதிர்காலச் சம்பள இழப்பீடுகள்
- உங்கள் குழந்தைகளைப் பராமரிப்பதற்கான கொடுப்பனவுகள்
- வீட்டைப் பராமரிப்பதற்கான கொடுப்பனவுகள்
- வணிக இழப்பீடுகள்
- கல்வி இழப்பீடுகள்
- மறுதொழில் பயிற்சித்தல்
- சிறப்பு மருத்துவ வசதிகள்

மற்றும் விபத்துப் பற்றிய சட்ட உரிமைகளையும் ஆலோசனைகளையும் தமிழில் பெற்றுக் கொள்வதற்கு நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்

இவற்றுடன் உங்கள்

- INCOME TAX
- BUSINESS ACCOUNTING
- BUSINESS G.S.T, P.S.T.
- PAYROLL
- PERSONAL LOAN & BUSINESS LOAN
- BANKRUPTCY
- PARALEGAL SERVICES (Immigration)

- வருமான வரி
- வியாபாரக் கணக்குகள்
- சம்பளக் கணிப்பீடு
- தனியார், வர்த்தகக் கடன்கள்
- வங்குரோத்து நிலையடைதல்
- குடிவரவு, குடியகல்வு ஆலோசனைகள்